கல்கி




KALKI 4-6-72
45 காசு





ப்ரூ-அதி நேர்த்தியான ஸ்ட்ராங்கான இன்ஸ்டண்ட் காபி - விலையும் எவரும் கொடுக்கக் கூடியது

OBM 2582A/ 2 TAM


You are safe with API
BRAKES
* dependable
CLUTCHES
* smooth
TIE ROD ENDS,
STEERING LINKAGES
AND KING PINS
* precision-made
AUTOMOBILE PRODUCTS OF INDIA LIMITED
API-116 R

கல்கி

பொருளடக்கம்



பரிதாபி வைகாசி, 22 () ஜூன் 4, 1972

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 27-00	ரூ. 13-50


ஸ்ரீராமனிடமும், அர்ஜுனனிடமும்தான் எடுக்க எடுக்கத் தானே நிறப்பிக்கொள்ளும் அம்புக்கூடுகள் இருந்தன என்பது உங்களுக்குத் தெரியுமா?
இந்துப் புராணத்தின்படி, ஸ்ரீராமனும், அர்ஜுனனும் தீராத அம்புகளைத் தாக்கூடிய அம்புக்கூட்டை வரமாகக் கிடைக்கப் பெற்றிருந்தார்கள். அம்புகள் தீர்ந்ததும் கூடு தானாவே நிரம்பிவிடும். அதுபோல், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி நிறைந்த தற்காலத்தில், நாமாக பம்ப்பை ஓட்டவோ, நிறுத்தவோ அவசியமின்றி பிரெஷரின் மூலம் குளிர்ந்த, சுத்தமான நீர் உங்களுக்குக் கிடைக்க வழிசெய்யப்பட்டுள்ளது. வாஸ்ப் அல்லது மையர்ஸ் எஜெக்டோ பம்ப்பை ப்ரெஷர் டாங்குடன் நில மட்டத்தில் பொருத்தவும். ப்ரெஷர் டாங்கிலுள்ள தண்ணீர் தீர்ந்தவுடன் குளிர்ந்த, சுத்தமான நீர் தானாகவே நிரப்பிக் கொண்டு விடும். ஓவர்ஹெட் டாங்கிற்கு அவசியமே இல்லை. பணத்தையும், இடத்தையும் மிச்சப்படுத்துங்கள். ஆட்டோமேடிக் ஸிஸ்டம் இணைந்த எஜெக்டோ பம்ப்பை தண்ணீர் உள்ள எந்த இடத்திலும் பொருத்தலாம்—அதாவது பூமிக்கடியில் உள்ள டாங்க், திறந்த கிணறு, குழாய்க்கிணறு, ஆறு, ஏரி முதலிய இடங்களில். வாஸ்ப் அல்லது மையர்ஸ் எந்தவித உபயோகத்திற்கும் சிறந்த பம்புகள்.
வாஸ்ப் அல்லது மையர்ஸ்
எந்த நோக்கத்திற்கும் ஏற்ற பம்புகள்
விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
வாட்டர் சப்ளை ஸ்பெஷலிஸ்ட்ஸ் பிரை. லிட்.
330, தம்பு செட்டித் தெரு, சென்னை-1
WS-141R TM

ஸ்ரீலங்கா உதயம்

அண்டை நாடாகிய ஈழம், 'ஸ்ரீலங்கா' என்ற மங்களமான பெயருடன் குடியரசாகியிருப்பது பெரு மகிழ்ச்சிக்குரிய விஷயம். ஸ்ரீலங்காவில் சுபிட்சமும், முன்னேற்றமும், ஐக்கியமும் தழைக்க வாழ்த்துகிறோம். ஸ்ரீலங்காவும் பாரதமும் நட்பு நாடுகளாக நெருங்கி வாழ இறைவன் அருளை வேண்டுகிறோம். புதிய குடியரசின் தலைவராகிய கோபல்லவாவுக்கும், பிரதமராகிய ஸ்ரீமதி சிரிமாவோவுக்கும் நமது நல்வாழ்த்துக்களை அளிக்கிறோம்.

பானகத் துரும்புபோல், ஸ்ரீலங்காவின் புதிய அரசியல் சாஸனத்தில் மனத்தை உறுத்தும் சில அம்சங்கள் காணப்படுவது துரதிருஷ்டவசமானது. முதலாவதாக, அந்நாட்டுப் பிரதிநிதிகளின் சபை செய்கிற எந்தச் சட்டத்தையும் நீதிமன்றங்கள் விசாரிக்க முடியாது என்று விதித்திருப்பது உண்மையான ஜனநாயகத்துக்கு உகந்ததல்ல. மக்களின் அடிப்படை உரிமைகளில் சொத்துரிமைக்கு இடம் தராதது மிகவும் வருத்தத்துக்குரியது. ஏற்கனவே லங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் குற்றுயிராக உள்ளது. இவையெல்லாம் ஜனநாயக அபிமானிகளை விசனத்தில் ஆழ்த்தும் அம்சங்கள்.

பௌத்த சமயத்தைத் தேசிய மதமாகவும், சிங்கள மொழியைத் தேசிய முக்கிய மொழியாகவும் ஏற்றுள்ளபோதிலும் மற்ற மதங்களை அநுசரிப்போருக்கும் சாஸனத்தின் மூலம் சமய சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கிறது. தமிழர் வாழும் பகுதிகளில் கூட்டுமொழியாகத் தமிழுக்கு ஓரளவு ஸ்தானம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் தமிழருக்குப் புதிய அரசியலமைப்பு திருப்தியும் நியாயமும் அளிப்பதாகச் சொல்வதற்கில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களத்துக்குச் சமமான அந்தஸ்தைத் தமிழுக்கு வழங்க வேண்டும் என்பதே தமிழரின் நியாயமான விருப்பம். அதைப் புறக்கணித்திருப்பது துர்ப்பாக்கியவசமானது. சிறுபான்மையினரை இருவகையாகப் பிரித்து, அதில் ஒருவகையினரின் பிரஜாவுரிமையை ரத்துசெய்வதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரம் தந்திருப்பதால் பலவித அநீதங்கள் விளைய இடமுண்டு என்ற கவலை ஏற்படுகிறது.


ஸ்ரீமதி சிரிமாவோ பண்டாரநாயகா

அநேக ஜனநாயக நாடுகளில் உள்ளது போல் குடியரசுத் தலைவரைவிடப் பிரதமருக்கே உண்மையான அதிகாரங்களை வழங்குகிறது ஸ்ரீலங்காவின் அரசியல் சாஸனம். புதிய சாஸனம் அமலானவுடன் இன்றைய பிரதமர் பொதுத்தேர்தல் நடத்திப் புதிய பிரதிநிதிச் சபையைத் தேர்ந்தெடுக்க வகை செய்யாமல், இப்போது உள்ள சர்க்காரின் ஆட்சியையே மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடித்திருப்பது ஜனநாயக ஆட்சி முறைக்கு அழகல்ல. ஸ்ரீமதி சிரிமாவோ பண்டாரநாயகா ஆற்றல் மிக்கவர். தீவிரவாதிகளின் கிளர்ச்சியை அவர் எத்தகைய சுறுசுறுப்புடன் அடக்கினார் என்பதைக் கண்டு உலகம் வியந்து பாராட்டியது. ஆயினும் அவரது ஆட்சிமுறையில் கம்யூனிஸப் போக்குகள் வலுக்காமலிருந்தால்தான் அவர் உண்மை வெற்றி பெற்றதாகும். தமிழரின் உரிமைகளை அவர் பூரணமாக மதித்து, அனைவரையும் அரவணைத்துப் போனால்தான் புதிய குடியரசு செழித்தோங்க முடியும். சகல மக்களிடையும் அன்பும் ஐக்கியமும் தழைப்பதே பொருளாதார வளர்ச்சிக்கு மூலதனம் என்பதை உணர்ந்து ஸ்ரீலங்காவின் அரசு செயல்பட வேண்டுமெனப் பெரிதும் விரும்புகிறோம்!

என்ன சேதி?

சேஷாத்ரி ஸ்வாமிக்கு விசேஷப் பணி செய்வோம்!

திருவண்ணாமலையில் அத்வைத ஞான ஸ்வரூபமாக ஸ்ரீ ரமண பகவான் விளங்கி வந்த சமயத்தில், பிராயத்தால் அவரது ''அண்ணா''வாகிய சேஷாத்ரி பிரம்மமும் அதே தலத்தில் மகா யோக சித்தர்களாகத் திகழ்ந்து வந்தார்கள். கருணை ஒன்றினையே காரணமாகக் கொண்டு அவர் செய்த அற்புதங்கள் அனந்தம். காஞ்சியில்தான் அவர்



பிறந்து வளர்ந்தார். இங்கு ஸ்ரீ காமகோடி பீடாதீசுவரியாக விளங்கும் ஸ்ரீ காமாக்ஷி தேவியை ஆராதித்தே ஸ்வாமிகள் யோக சித்தியும் ஞான சித்தியும் எய்தினார். சின்னக் காஞ்சீபுரம் தெற்கு மாடவீதியில் ஸ்ரீ ஸ்வாமிகள் வாழ்ந்த இல்லம் உள்ளது. வீடு பேறு எய்திய புண்ணிய புருஷரின் வீட்டை வாங்கி, அதனை ஒரு நினைவுக் கோயிலாகப் பராமரிக்க வேண்டும் என்று நம் பரமாசாரியர்கள் ஸ்ரீ காஞ்சிப் பெரியவாள் திருஉளம் பாலித்திருக்கிறார்கள். திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் தலைமையில் ஒரு குழு இந்தப் பணியை மேற்கொண் டிருக்கிறது. இத்திருப்பணியில் அனைவரும் விசேஷ ஈடுபாடு கொண்டு வெகு விரைவிலேயே அதனைப் பூர்த்திசெய்து தர வேணும். பொருளுதவி அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ டி. ஈ. சேஷாத்ரி, ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் நினைவுச் சின்ன அமைப்புக் குழு, 5, ஜம்புலிங்க நாயக்கன் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை—34.

ஆத்திகத்துக்குப் பேரிழப்பு

அண்மையில் காசிமாநகரில் பரிபூரணம் எய்திய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் தவம், அடக்கம்,



பொறுமை முதலிய நற்பண்புகள் நிறைந்தவர். தமிழ், ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மும்மொழிப் புலமை வாய்ந்தவர்கள். தேவாரத்தை இசையுடன் ஓதும் ஆற்றல் உடையவர். சிவநாமத்தை இடையறாது பயின்றவர். ஏறத்தாழ ஒன்றேகால் கோடி ரூபாய்க்கு மேல் மூலதனம் வைத்து 533 தருமங்கள் நிறுவியவர். அவரது மறைவு ஆத்திகத்துக்கும் சைவத்துக்கும் பேரிழப்பாகும்.

மாதுங்காப் பிரமுகர் மறைவு

பம்பாய் மாதுங்காவாசிகளிடையே ஒரு முக்கியஸ்தராக விளங்கியவர் ''வி.ஜி.ஆர்.''. கலாசாரம், கல்வி, சமூக சேவை, சமய விஷயங்கள் இவற்றில் நீண்ட காலமாக நற்பணி புரிந்து நற்பெயர் எடுத்தவர் ஸ்ரீ வி. ஜி. ராமன் அவர்கள். சமீபத்தில் இந்தப் பிரமுகர் இறைவனடி சேர்ந்தார். மாதுங்காவுக்கு மட்டுமின்றி பம்பாய் மாநகர வாழ்வுக்கே அவரது மறைவு ஓர் இழப்பாகும். வி. ஜி. ஆர். குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அநுதாபங்கள்.

ராஜாஜியின் கருத்துக்கள்

இந்தியாவைப் போல் குடியரசான பிறகும் ஸ்ரீலங்காவும் காமன்வெல்த்துக்குள் இருக்க முடிவு செய்தது மகிழ்ச்சிக்குரியது. இலங்கைத் தீவில் உள்ள தமிழ் மக்களுக்குப் புதிய சாஸனம் திருப்தி தரவில்லை. 1950ல் அமலான இந்திய அரசியல் சாஸனம் எல்லாச் சிறுபான்மையினருக்கும் திருப்தி தந்தது போல், இலங்கையில் ஒரு சாஸனம் நிறைவேற்றப்படும் என நம்புவோமாக.

★

ஸ்ரீமதி ருக்மிணி தேவி அருண்டேல் ஹாலந்துக்கும் நியூயார்க்குக்கும் செல்லுமுன் என்னிடம் ஆசீர்வாதம் பெற வந்திருந்தார். அமெரிக்காவில் மரக்கறி உணவு பெருமளவில் பரவி வருவதாக அவர் கூறக் கேட்டு மகிழ்ச்சியடைந்தேன். கலாசாரம், சமயம் இவற்றில் வழிகாட்டக் கூடியவர்களுக்கு ஏற்ற உணவு, ஏதுமறியாப் பிராணிகளை வதைக்காமல் தயாரிக்கும் மரக்கறியே யாகும்.

சென்னைக்கருகில் திருவான்மியூரில் வசிக்கும் ஸ்ரீமதி ருக்மிணி தேவி பக்கத்துக் கிராமப்புறத்தில் நடக்கும் துயரக் கதைகளைக் கூறினார். கள்ளுக் கடைகளைத் திறந்த பின் அங்கு அநேக வீடுகளில் வன்முறையும் பூசலும் துன்பமுமாகவே உள்ளதாம். தாய்மார்கள் பலர் ஸ்ரீமதி ருக்மிணி அம்மாளிடம் வந்து குறைகளைச் சொல்கிறார்களாம்.

இருபது ஆண்டுகளாக மூடிக் கிடந்த கள்ளுக்கடைகளுக்குத் தமிழக முதன் மந்திரி

மீண்டும் லைசென்ஸ் தந்து, திறந்து வைத்தது பரிதாபமாகும். அதிகாரபூர்வமாகக் கடைகளைத் திறந்து வைத்த பின், அது நன்றாக நடப்பதற்குப் பிரசாரம் செய்வதும் இயற்கையாகும். சந்தடி செய்யாமல் இவ்விதம் முதன் மந்திரி பிரசாரம் செய்வதாகக் கூடச் சொல்லப் படுகிறது. அது உண்மையாக இராது என்று நம்புகிறேன்.

★

(இவ்விதழ் அச்சேறுகிற) வெள்ளிக் கிழமையன்று அணு ஆயுதங்களைத் தடை செய்கிற உடன்படிக்கை யொன்றில் அமெரிக்காவும் ருஷியாவும் ஒப்பமிடும் என்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தி கூறுகிறது. இது வெறும் ஹேஷ்யமல்ல என்று நம்புவோமாக. இவ்விதம் நிகழ்ந்தால் ஸ்ரீ நிக்ஸனின் பெயர் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும். மனித வாழ்வின் எதிர்காலத்துக்கே ஊறு விளைவித்து வரும் அமெரிக்காவும் ருஷியாவும் அரைகுறையாகத் தீர்வு காண்பதை விட, பூரணமாகத் தீர்வு காண்பதே எளிதாகும் என்பதைப் புரிந்து கொண்டு இவ்வாறு உடன்பாடு செய்து கொண்டால் மிகவும் மகிழ்ச்சிகரமாக இருக்கும். அணு ஆயுதத்தை உபயோகிப்பதில் பலவித 'ராஜி'த் திட்டங்களைப் போடுவதை விட, அவற்றை அடியோடு தடை செய்வதே சுலபமான ஏற்பாடாகும்.

எனினும் மாஸ்கோவிலிருந்து கடைசியாக வந்துள்ள செய்திகள் நம்பிக்கை யூட்டுவனவாக இல்லை. அணு ஆயுத உற்பத்தி, உபயோகம் இவற்றை எல்லா விதங்களிலும் தடை செய்து நிலைமையை அடியோடு ஒழிக்காமல், ஓரளவுக்கு 'ராஜி' செய்வது போலவே தோன்றுகிறது. புதிதாக அணு ஆயுதங்களைத் தயாரிப்பதில்லை என்று இரு நாடுகளும் ஒப்புக் கொள்ளலாம் எனத் தெரிகிறது. இதனால் அணு ஆயுத உற்பத்திக்கு இரு நாடுகளும் செய்கிற பெருத்த செலவு மிச்சப்படுகிறது என்பது தவிர உலகுக்கு விசேஷமான பலன் ஏதுமில்லை. ஏனெனில் ஏற்கெனவே இரு வல்லரசுகளும் குவித்து வைத்துக்கொண்டுள்ள அணு ஆயுதங்களே உலகை நாசமாக்கப் போதும்.

★


நான் பன்முறை கூறியது போல், பெர்மிட்-லைசென்ஸ் கொள்ளையில் பங்குக்கு ஆசை கொண்டே மாநில சுயாட்சிக் கோஷம் எழுப்பப்படுகிறது. நிதிப் பொறுப்புக்களில் தன் விவகாரங்களைத் தானே சமாளித்துக்கொள்ள இயலாத நிலையில் மாநிலங்கள் இருக்கும் போது சுயாட்சிக் கோஷம் எழுப்புவது அபத்தமேயாகும். அதெல்லாம் ஒருபுறமிருக்க, தேசத்தில் தீர்க்க வேண்டிய பிரச்னைகள் ஏராளமாக உள்ளன. பிரதமர் அவர்கள் எச்சரித்திருப்பது போல் இன்றைய நெருக்கடி நிலைமையில் மாநில சுயாட்சி போன்ற பரிசோதனைகளைச் செய்து பார்ப்பது ஆபத்தானது. தேசம் முழுவதிலும் நல்ல ஒழுங்குமுறை ஏற்படும்வரையில் இதுபோன்ற பரீட்சைகளை நடத்த நாம் காத்திருக்க வேண்டும். மாநில சுயாட்சியில் ஐக்கியத்துக்கு ஊறு உண்டாக்கக் கூடிய அபாயம் உள்ளது. அதைப் பரிசோதனை செய்வதற்கு இன்று எத்தகைய அவசரத் தேவையும் ஏற்பட்டு விடவில்லை.

★

பிரதம மந்திரி சர்வாதிகார சக்திகளைக் கைக்கொண்டு விட்ட பிறகு எதிர்க் கட்சிக் காரர்கள் பலர் விட்டில் பூச்சிகள் விளக்கைச் சுற்றுவது போல் பிரதமரின் கட்சிக்கு மாறுவது இயற்கையாகி விடுகிறது. கட்சி மாறியதற்கு இவர்கள் தரும் காரணம் சில சமயங்களில் நியாயமானது போலவும் தோன்றக் கூடும். உண்மையில் சர்வாதிகாரியை மகிழ்வித்து, அவரிடமிருந்து தங்களுக்கும் செல்வாக்குப் பெறுவதொன்றே இவர்களது நோக்கமாகும். கட்சி மாறிகள் சிலர் இவ்விதமே செல்வாக்குப் பெறவும் கூடும். எனினும் ஒரு கட்சியை விட்டு வந்தவர்களிடம் பிரதமர் மரியாதையோ நம்பிக்கையோ வைக்க மாட்டார்.

போர்முனை 'போர்' மனைவி !

போர்முனையிலிருந்த அமெரிக்க வீரன் ஒருவன் தன் மனைவிக்குக் கடிதம் எழுதினான்: ''இங்கு நான் நிம்மதியாகச் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறேன். நீ ஏன் அடிக்கடி கடிதம் எழுதி என் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கிறாய் !''



★



ஓர் அமெரிக்கர் பிரசங்கம் நிகழ்த்திக் கொண்டிருந்தபோது புதிதாக உள்ளே வந்தவர் உட்கார்ந்திருந்த ஒருவரிடம் கேட்டார்: ''அவர் எதைப் பற்றிப் பேசுகிறார்?'' என்று.

மற்றவர் சொன்னார்: ''அதை மட்டும் அவர் சொல்லவே மாட்டேனென்கிறார்!''

ஆதாரம்: American Anecdotes. தகவல்: கே. வி. முரளி



எழும்பூர் டென்னிஸ் மைதானம். மத்தியானம் இரண்டு மணிக்கு வெய்யில் தகதக வென்று தகித்துத் தரையில் கால்களை வைத்தால் நடனமாட வைத்தது.

''ஸார்! பெங்களூர்க்காரர்கள் அதிர்ஷ்டக்காரர்கள். வருணபகவான் நான்கு நாட்களுக்குக் கொட்டு கொட்டென்று கொட்டி ஆஸ்திரேலியர்களுக்கு 'ஆட்டம்' காண்பித்தார்!''

''நான்காம் நாளுக்குப் பிறகு ஆஸ்திரேலியர்கள் நம்ம இந்திய ஆட்டக்காரர்களைத் 'தண்ணீர்' காட்டிவிட்டார்களே! ஐந்து டேவிஸ் கோப்பைப் போட்டிகளிலும் ஆஸ்திரேலியர்களுக்கே வெற்றி!''

''அப்பா! வெய்யில் தாங்க முடியல்லே. ரொட்டி வைச்சால் 'ரோஸ்ட்' ஆயிடும்!''

''நாம 'ரோஸ்ட்' ஆயிண்டிருக்கோம்.''

கோக்கோகோலா, ஐஸ்கிரீம் ஏகமாகத் 'தண்ணீர்' பட்டபாடாகச் செலவழிகின்றன.

''நடு மத்தியான வெய்யிலில் மாட்சை வைத்துப் பிராணனை வாங்குகிறார்களே?''

''பாரிஸ் மாட்சுக்கு ஆஸ்திரேலியர்கள் ஏழுமணிக்கு இன்றே விமானம் ஏறணுமாம்!''

''இதோ டிப்ளே விஜய் அமிர்தராஜோடு ஆட வந்துட்டார்!''

இருவரது ஆட்டத்தைப் பார்வையிடுவதில் வெய்யிலின் சூடு அவ்வளவாகத் தெரியவில்லை. இந்த டிப்ளே டென்னிஸ் ஆட்டத்துக்கு வந்ததே ஒரு கதை. ஆஸ்திரேலியாவில் டிப்ளே கங்க இலாகாவில் விஸாக்களைப் பரிசீலனை செய்து கொண்டிருந்தார். பல ஆஸ்திரேலிய டென்னிஸ் சாம்பியன்கள் விஸாக்களைப் புதுப்பித்துக் கொண்டு உலகம் முழுதும் அடிக்கடி சுற்றி வருவதைக் கண்டார் டிப்ளே. அவருக்கும் டென்னிஸ் ஆடவேண்டும் என்ற ஆசை பிறந்தது. கடுமையான உழைப்பில் டிப்ளே ஆஸ்திரேலிய சாம்பியன் ஆனார்!

''ஃபால்ட்!''

''டபிள் ஃபால்ட்!'' — நடுவரின் உரத்த குரல் அடிக்கடி ஒலிக்கிறது.

''ஆஸ்திரேலியாவின் முதல் தர ஆட்டக்காரர், சர்விஸிலே 'கேம்' எடுக்கும் சாமர்த்தியசாலி இப்படி இரட்டை ஃபால்ட் சர்விசுகளை அள்ளி வீசுகிறாரே!''

''இந்த சர்விஸ் சாம்பியனுக்கு ஃபால்ட் மன்னன்னு ஒரு பட்டம் வழங்கிவிடலாமே!''

நடுவர் வேகத்தில் 15 — 40 ஸ்கோரிலே 'கேம்' என்று தப்பு முடிவு கூறி டென்னிஸ் மைதானத்தில் சலசலப்பை ஏற்படுத்துகிறார்.

விஜய் அமிர்தராஜ் டிப்ளேயோடு ஆடி வென்று காலரியில் வந்து அமர்கிறார். இரட்டையர் ஆட்டம் ஆடுவதற்கு வந்து அமர்ந்த ஆனந்த் அமிர்தராஜிடம் ஒரு டென்னிஸ் ரஸிகர் 'ரொம்ப நன்றாக ஆடினீர்கள்!' என்று கைகுலுக்குகிறார். சகோதரர்களில் யாருக்குப் பாராட்டுக் கிடைத்தால் என்ன?

சூடான வேளையில் இந்திய கோஷ்டியில் கிருஷ்ணனும் முகர்ஜியும் ஆஸ்திரேலியக் கோஷ்டியில் டிப்ளேயும் கேஸ௱ம் ஆடினர். கிருஷ்ணனும் முகர்ஜியும் 6—4, 6—4 ஸ்கோரில் ஜயித்தது மனத்தைக் குளிர்விக்கிறது.

''அடுத்துக் களிக்கப் போறது மாஸ்டராக்கும்!'' என்றார் கேரள நண்பர்.

ஆஸ்திரேலிய டென்னிஸ் வீரர் மாஸ்டர் தனியார் ஆட்டத்துக்கு வருகிறார். அவரோடு பிரேம்ஜித் லால் கடுமையாக மோதுகிறார். பெங்களூரில் அவரை 'செலக்ட்' செய்யாதது தவறு என்று நிரூபித்துக் காட்டுகிறாரோ? பல கோணங்களில் பந்து பாய்கிறது. பிரேம்ஜித் லாலின் 'டிராப் ஷாட்!'கள் பிரமாதம். இந்த எக்ஸிபிஷன் மாட்சில் மாஸ்டர் ஜயித்தாலும் பிரேம்ஜித் லாலின் நல்ல ஆட்டம் திருப்தியைத் தருகிறது.

கடைசியாக மாஸ்டரும் கேஸ௱ம் அமிர்தராஜ் சகோதரர்களோடு ஒரு செட் ஆடி 6-4ல் ஜயித்து விமானமேறுகிறார்கள். இந்த வெய்யில் வேளை எக்ஸிபிஷன் மாட்சில் சூரிய பகவானும் விளையாடி ரஸிகர்களை 'அப்பள'மாகப் பொரிய வைத்துவிட்டார்! **- பி. எஸ். எம்.**



கோப்பன்ஹேகன் நகரில் ஒரு பஸ்ஸில் சில பெண்கள் ஏறினர். ஆயினும் அவர்கள் ஒரு க்ரவுன் (100 ஓர்கள்) டிக்கட் வாங்குவதற்குப் பதிலாக 80 ஓர் காசுகளையே கொடுத்து டிக்கட் கேட்டனர். கண்டக்டர் ஒரு க்ரவுன் கொடுத்தால்தான் டிக்கட் கொடுப்பேன் என்றார். அந்தப் பெண்கள் அந்தத் தொகையைத் தரவும் மறுத்தனர். பஸ்ஸை விட்டு இறங்கவும் மறுத்தனர். எனவே போலீஸை வரவழைக்க நேர்ந்தது. போலீஸ் ஸ்டேஷனில் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. எனினும் திரும்பவும் அவர்கள் 80 காசுகளையே தந்தனர். பிறகுதான் உண்மை தெரிய வந்தது. அந்தப் பெண்கள் அனைவரும் மாதர் சமத்துவத்தைக் கோரும் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று புலனாயிற்று. ஒரே மாதிரியான வேலைக்கு ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்கு 20 சதவிகிதம் குறைத்துச் சம்பளம் கொடுத்து வருவதை ஆட்சேபித்தே அவர்கள் இந்தகைய இயக்கத்தைத் தொடங்கினராம்! ஆதாரம்: நியூஸ்டைம்ஸ்

வாக்கின் பயன்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

எத்தனையோ விதமான ஜீவராசிகள் இருந்தாலும் மனிதனுக்கு மட்டுமே பரமேசுவரன் பேசும் சக்தியைத் தந்திருக்கிறார். உலகத்தில் அநேக பாஷைகள் இருக்கின்றன. பேச்சிலிருந்து எழுத்து பிறந்து, உலகம் முழுதும் பல லிபிகளும் இருக்கின்றன. வாக்கை மூலதனமாக வைத்தே எங்கு பார்த்தாலும் பள்ளிக்கூடம், காலேஜ், லைப்ரரி, பத்திரிகைகள் எல்லாம் பரவியிருக்கின்றன.


மிருகங்களின் உலகில் காலேஜ் இல்லை, லைப்ரரி இல்லை, பிரிண்டிங் பிரெஸ் இல்லை. அவற்றுக்கு வாக்கு கிடையாது. ஆனால் இவையெல்லாம் இல்லாததால் அவை மனிதனைவிடக் கஷ்ட நிலையில் இருக்கின்றனவா? அப்படித்தோன்றவில்லை. நமக்கு இருக்குமளவுக்கு அவற்றுக்கு வியாதி இல்லை; அவை சொத்துக்களைச் சேர்த்துக் கொண்டு தவிக்கிறதில்லை; நேற்று என்ன செய்தோம், நாளைக்கு என்ன செய்வோம்என்ற விசாரம் அவற்றுக்கு இல்லை. அததற்கும் எப்படியோ ஆகாரம் கிடைக்கிறது. நிர்விசாரமாக வாழ்ந்து பிழைத்துப் போகிறது. ஒன்றையொன்று அடித்துச் சாப்பிட்டாலும் எல்லா விலங்கு இனங்களும் விருத்தியாகிக் கொண்டே வருகின்றன.

மனிதப் பிரபஞ்சத்துக்கே வந்தாலும் கூட காலேஜூம், லைப்ரரியும், பிரிண்டிங் பிரெஸ்ஸூம் இல்லாத ஆதிவாசிகளைப் பார்த்தால் அவர்கள் நம்மைவிட நிம்மதியாகவும் நல்லவர்களாகவும் இருப்பதாகவே தெரிகிறது. ஆப்பிரிக்கக் காடுகளிலும், அமெரிக்காவில் செவ்விந்தியக் காடுகளிலும் காலேஜூம், லைப்ரரியும் இல்லாதது போலவே கோர்ட்டுகளையும் காணோம். அதாவது எழுத்தறிவற்ற காட்டுக் குடிகள், நாகரிகமடைந்த நம்போல் இவ்வளவு குற்றமும் செய்வதில்லை. நாகரிகமும், அதிக புத்தியும் படைத்த,நாம் செய்யத்தகாத செயல்களில் — அகாரியங்களில்— நூதன கற்பனையுடன் விருத்தி யடைந்து கொண்டே வருகிறோம். புத்தி எத்தனைக் கெத்தனை அதிகமோ அத்தனைக்கத்தனை பாபமும் அதிகமாகி யிருக்கிறது. நாகரிகத்தினால் எத்தனைக் கெத்தனை செல்வத்தைப் பெருக்கிக்கொண்டோமோ, அத்தனைக்கத்தனை அநவரதமும் அதிருப்திப்படும் மனோபாவமும் பெருகியிருக்கிறது. எத்தனை வந்தும் போதவில்லை. தேவை அதிகமாகவே இருக்கிறது. வாக்கும் எழுத்தும் எல்லாவித அகாரியங்களையும் பரப்புவதிலேயே தடபுடலாகப் பிரயோஜனமாகி வருகின்றன. படிப்பு முறை, பத்திரிகைகள், புஸ்தகங்கள் எல்லாம் மனிதனுக்கு நிம்மதியும், நிறைவும் தருவதற்குப் பதில் அவனை அதிருப்தியிலும், அகாரியத்திலும் கொண்டு விடுவதாகவே உள்ளன. மனிதனுக்கு மட்டும் 'ஸ்பெஷ'லாக ஸ்வாமி தந்திருக்கும் வாக்குச் சக்தி அநுக்கிரகமா, அபராதமா என்றே புரியவில்லை.

இதை யோசித்துப் பார்க்கும்போது, ஏன் மிருக ஜன்மா தாழ்வானது, மனித ஜன்மா உயர்வானது என்று வழி வழியாகச் சொல்லி வந்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. ஒரு மிருகம் பிறந்ததிலிருந்து இறக்கிற வரையில் உள்ளுணர்ச்சி (Instinct) மீதே நடப்பதால் அதற்குப் புத்திபூர்வமாகச் செய்கிற பாபம் எதுவும் இல்லை. சித்ரகுப்தனுக்கு மிருகங்களால் வேலையே இல்லை. மனிதன்தான் அவனை ஓயாமல் கணக்கெழுத வைக்கிறான். எவ்வளவுக்கெவ்வளவு படிப்பும் நாகரிகமும் அதிகமோ அவ்வளவுக்கவ்வளவு வஞ்சனை, மோசம், பொய், வேஷம் எல்லாவற்றிலும் நிபுணர்களாகி, சித்ரகுப்தனுக்கு நிறைய வேலை வைக்கிறோம்.

'நர ஜன்மம் துர்லபம்; அதுவே உயர்ந்தது' என்பது ஏன் என்று யோசித்தேன். யோசனை செய்ததில் மிருக ஜன்மத்தில் உள்ள ஒரு பெரிய குறை தெரிய வந்தது. மிருகங்களுக்குப் பாபம் இல்லாவிட்டாலும் பயம் இருக்கிறது. எப்போது யார் தன்னைக் கொல்வார்களோ என்ற பிராண பயம் கொடிய மிருகத்துக்கும்கூட நிறைய உண்டு. மனிதனுக்கும் பலவிதமான பயங்கள் உண்டு. ஆனால் பயமில்லாமல் செய்துகொள்ள மனிதனுக்கு மட்டுமே வழி உள்ளது. மிருகத்துக்கு இந்த வழி இல்லை. பயம் இல்லாமல் செய்து கொள்வது எப்படி? பிறவி இல்லாமல் செய்து கொண்டால்தான் பயம் இல்லாமல் இருக்கலாம். 'எல்லாம் நாம்தான்' என்கிற ஞானம் வந்துவிட்டால் எதனிடமும் பயம் இராது. அந்த ஞானத்துக்குப் பின் சரீரம் விழுந்தால் இன்னொரு சரீரம் எடுக்க மாட்டோம். இந்த ஞானத்தை அடைகிற மார்க்கங்கள் மனிதனுக்குத்தான் இருக்கின்றன. மிருகங்களுக்கு இல்லை. மனிதன் ஞானத்தை, அபய நிலையை, ஜன்மநிவிருத்தியை அடையவே மகான்கள் வாக்கைப் பயன்படுத்தினார்கள். வேத வேதாந்த, இதிஹாஸ 'புராண' தர்ம சாஸ்திரங்கள் எல்லாம் வாக்கு இருப்பதால்தானே உண்டாயின? பாஷை, லிபி, புத்தி இவற்றுக்கு இப்பேர்ப்பட்ட உயர்ந்த பிரயோஜனம் இருப்பதைப் புரிந்துகொண்ட பின் ஆறுதலாக இருந்தது. பகவான் தந்திருக்கும் புத்தியால், வாக்கால் பிறருக்கோ தனக்கோ நாசம் உண்டாக்காமல் எவ்வளவோ நல்லது செய்யலாம். பாபமும், துக்கமும், பயமும் நீங்க வாக்கைப் பயன்படுத்த வேண்டும். இதற்கெல்லாம் அடிப்படை பக்தி. வாக்கு தெய்வ சம்பந்தமாகப் பயனாக வேண்டும். இதனால்தான் அக்ஷராப்யாச காலத்தில், ஆரம்பிக்கும்போதே 'நமோ நாராயணாய' என்று விரலைப் பிடித்து எழுத வைக்கிறார்கள். பகவான், தான் கொடுத்திருக்கும் வாக்கை இவன் எப்படிப் பிரயோஜனம் செய்கிறான் என்று பார்த்துக் கொண்டே யிருக்கிறான். லோக க்ஷேமத்துக்கும் ஆத்ம க்ஷேமத்துக்கும் அதைப் பயன் செய்யாவிட்டால், அடுத்த ஜன்மாவில் வாக்கற்ற மிருகமாகப் படைப்பார்.

எஃகிலும் காலங்களின் மாறுதலுக்கேற்ற முன்னேற்றம்



போர்வாளிலிருந்து தொடங்கி
'விஜயந்தா' டாங்க் தயாரிப்பு வரை
மனித சமுதாயம் வெகுவாக முன்னேறி
யிருக்கிறது. அதற்கேற்றவாறு எஃகுத்
துறையும் முன்னேறியிருக்கிறது.
பண்டைக்காலத்து முறைப்படி மூலப்
பொருள் உருக்கி இரும்பு தயார்
செய்யப் பட்டது. ஆனால் இன்று
நவீன விஞ்ஞான முறைப்படி விசேஷ
தேவைகளுக்கேற்றவாறு விசேஷ
மான எஃகுகள் உருவாகின்றன.
விமானங்களுக்கு—க்ரோம்
மோலிப்டினம் எஃகு. துப்பாக்கி
குண்டுகள் புக முடியாத போர்க்
கவசத்திற்கு—ஹைஷீல்ட் எஃகு.
பாலங்களுக்கு—ஹை டென்ஸைல் எஃகு.
64 ஆண்டுகளுக்கு முன் எங்களுடைய
முதல் உலைக்களத்தில் வார்க்கப்
பட்ட தீ நிறம் மாறி உருமாறி,
முன்னேற்றத்தின் புதிய வண்ணங்
களுக்கு என்றென்றும் துணை நிற்கிறது.

டாடா ஸ்டீல்

TN. 3431 (A)



4. சாலை முனையில்

உலாவச் சென்று திரும்பி வந்த அன்றிரவு சீதா வெகு நேரம் தூங்கவில்லை. புதுடில்லியில் புதுக் குடித்தனம் போட்ட பிறகு முதன் முதலாகத் தன் பிரிய நாயகன் தன்னை உலாவ அழைத்துச் சென்ற தினத்தில் தான் அசட்டுத்தனமாக நடந்து கொண்டு அவனுக்கு எரிச்சல் உண்டாக்கியதை நினைத்து நினைத்து வருந்தினாள்.. இருந்தாலும் அவர் எதற்காக அவள் யார் என்பதைச் சொல்ல மறுக்க வேண்டும் என்ற எண்ணம் ஊசியினால் நெஞ்சைக் குத்துவது போல் திரும்பத் திரும்ப வந்துகொண்டிருந்தது. சென்னை பத்மாபுரத்தில் மாமனார் வீட்டில் வசித்தபோது, சில கோள் சொல்லிப் பெண்கள் ராகவனுடைய பழைய காதலைப் பற்றி ஊரில் ஏற்பட்டிருந்த வதந்தியை அவளிடம் பிரஸ்தாபித்தார்கள். அப்போது அவள் அதை நம்பவில்லை. பொறாமையினால் சொல்கிறார்கள் என்றே எண்ணினாள். அந்த வம்புப் பேச்சு இப்போது ஞாபகத்துக்கு வந்தது. 'ரயிலில் பார்த்த பெண் அவள்தானோ என்னமோ? தினம் தினம் ஆபீஸுக்குப் போகிறதாகச் சொல்லி விட்டுப் போகிறாரே', அவளைப் பார்க்கத் தான் போகிறாரோ என்னமோ?' என்று தோன்றியது. 'என்ன மூடத்தனம்? அவள்தான் எங்கேயோ போய் விட்டாளே? மேலும், ரயிலில் அவளைப் பார்த்துவிட்டு இவர் அதிசயப்பட்டதிலிருந்து அவ்வளவு பழக்கப்பட்டவளாகவே தோன்றவில்லை. அப்படியிருக்க நாமாக மனத்தை ஏன் புண்படுத்திக் கொள்கிறோம்? 'பெண் புத்தி பேதைமை' என்று சொல்வது வாஸ்தவம்தான்!' என்று தன்னைத் தானே கண்டித்துக் கொண்டாள்.

''லலிதாவைப் பார்க்க வந்த இடத்தில் அவளைப் பிடிக்கவில்லை என்று சொல்லி என்னை வலியக் காதலித்து மணந்து கொண்டாரே! அப்படி என்னை ஆட்கொள்ள வந்த உத்தம புருஷரைப் பற்றி வீண் சந்தேகம் கொள்வது எவ்வளவு பிசகு? கூடவே கூடாது!'' என்று தனக்குத் தானே புத்தி சொல்லிக் கொண்டாள்.

இனிமேல் அன்று சாயங்காலம் நடந்தது போல் நடப்பதற்கே இடம் கொடுக்கக்கூடாது என்றும், அவருக்குப் பிடிக்காத விஷயங்களைப் பற்றிக் கேட்கவே கூடாது என்றும் சங்கல்பம் செய்து கொண்டாள். இவ்வளவு திடமான தீர்மானத்துக்கு வந்த பிறகும், ''ஏதோ நான் தெரியாத்தனமாகக் கேட்டுவிட்டதாகவே இருக்கட்டும்; 'அவள்' யார் என்று சொல்லியிருந்தால் என்ன?

எதற்காக மறுக்க வேண்டும்?'' என்ற நினைவு தோன்றி வேதனை செய்தது.

இந்த வேதனை நிறைந்த சிந்தனையெல்லாம் மறுநாள் பொழுது விடிந்ததும், தூக்கத்தில் கண்ட துர்ச்சொப்பனம் விழித்தெழுந்ததும் மங்கி மறைவதுபோல், சீதாவின் மனத்திலிருந்து மறையத் தொடங்கியது. ராகவனுக்குக் காலை காப்பி கொண்டு கொடுத்தபோது அவன் அவளைப் பார்த்துச் செய்த புன்னகையில் அடியோடு மறைந்துவிட்டது. வழக்கம் போல் ராகவன் ஆபீஸுக்குப் புறப்பட்டபோது சீதா வஸந்தியைத் தூக்கிக் கொண்டு வந்தாள். ராகவன் அவளைக் கையில் வாங்கிக் கொண்டு கொஞ்சினான். தோளில் சாத்திக்கொண்டு தட்டிக் கொடுத்தான். கன்னத்தை மெதுவாகக் கிள்ளினான். ''வஸந்தி! என்னோடு நீ ஆபீஸுக்கு வருகிறாயா?'' என்று கேட்டான். ''வதேன் அப்பா! இப்பவே வதேன்!'' என்றாள் வஸந்தி. ''சரிதான்; உன்னை அழைத்துக் கொண்டு போனால் நான் வேலை செய்தாற் போலத்தான்!'' என்றான். சமையலறையிலிருந்து வந்த காமாட்சி அம்மாள், ''வஸந்திக்கும் வயதாகும்போது உன்னைத் தோற்கடித்து விடுவாள், பார்! உன்னைவிடப் பெரிய உத்தியோகம் பார்ப்பாள்!'' என்றாள். ''அதைப் பற்றிச் சந்தேகம் என்ன? அவளுடைய அம்மா யார்? சீதாவுக்குப் பிறந்த பெண் சோடையாகப் போய் விடுவாளா?'' என்றான் ராகவன். சீதாவுக்குப் பெருமை தாங்கவில்லை. ''நான் என்ன அவ்வளவு கெட்டிக்காரியா? வஸந்தி முழுக்க முழுக்க என் மாமியாரைக் கொண்டிருக்கிறாள். அதனால்தான் இவ்வளவு சமர்த்தாயிருக்கிறாள். நீங்கள் வேணுமானால் இரண்டு பேருடைய முகத்தையும் ஒத்திட்டுப் பாருங்கள்!'' என்றாள் சீதா. காமாட்சி அம்மாளுடைய சந்தோஷத்தைச் சொல்லி முடியாது. ''ஆகக் கூடி உங்கள் இரண்டு பேருக்குள்ளேயே வஸந்தியின் சமர்த்தைப் பங்கு போட்டுக்கொள்ளப் பார்க்கிறீர்கள். எனக்குக் கொஞ்சம்கூடக் 'கிரெடிட்' கொடுக்க நீங்கள் தயாராயில்லை!'' என்று ராகவன் சொல்லிவிட்டு வஸந்தியை அம்மாவிடம் ஒப்புவித்துவிட்டு ஆபீஸுக்குப் புறப்பட்டான்.

மேலும் ஒரு வாரம் சென்றது. ராகவனைத் தன்னை 'வாக்கிங்' போக மறுபடியும் அழைப்பான் என்று சீதா எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் அதைப் பற்றிப் பிரஸ்தாபிக்கிறதாகக் காணப்படவில்லை. ஆகையால் சீதாவே அந்தப் பேச்சை எடுக்க வேண்டியதாயிற்று.

''வெளியே போய் அதிக நாளாயிற்றே? இன்றைக்குப் போகலாமா?'' என்று சீதா கேட்டாள்.

''போகலாம். ஆனால் நீ அன்றைக்குக் கேட்டது போல் அசட்டுத்தனமான கேள்வி ஒன்றும் கேட்கக் கூடாது. கேட்கிறதில்லை என்று ஒப்புக்கொண்டால் போகலாம்!'' என்றான் ராகவன்.

''நான் கேட்கவில்லை. அப்படி ஏதாவது நான் தப்பித் தவறிக் கேட்டாலும் நீங்கள் கோபித்துக் கொள்ளாமல் பதில் சொல்லுங்களேன்!'' என்றாள் சீதா.

''அதெல்லாம் முடியாது. நீ அசட்டுத்தனமாக ஏதாவது கேட்டால் எனக்குக் கோபம்தான் வரும். அதைவிட வெளியில் போகாமல் இருப்பதே நல்லது'' என்றான் ராகவன்.

''நான் ஒன்றும் கேட்கவில்லை. ஊமையைப் போல் இருக்க வேண்டும் என்றாலும் இருந்து விடுகிறேன்'' என்றாள் சீதா.

''பார்த்தாயா? இங்கேயே ஆரம்பித்து விட்டாயே? நான் வரவில்லை!'' என்றான் ராகவன்.

சீதா பயந்து விட்டாள். ''நான் சாதாரணமாகத்தான் சொன்னேன். கோபித்துக் கொண்டு சொல்லவில்லை. வாருங்கள், போகலாம்!'' என்றாள்.

இன்றைக்கு வேறொரு பக்கம் போனார்கள். போகும்போது பேச்சு அதிகமில்லை. தப்பாக ஏதாவது பேசிவிடக் கூடாது என்று சீதா சர்வ ஜாக்கிரதையாக இருந்தாள். ராகவனும் அக்கம் பக்கம் அதிகமாகப் பார்க்கவில்லை. சீதாதான் எதிரில் வந்த ஸ்திரீகளை யெல்லாம் உற்றுப் பார்த்துக் கொண்டு போனாள்.

பச்சைப் புல் வட்டம் ஒன்று வந்தது. அதன் இடையிடையே அழகிய பூஞ்செடிகள் சில இருந்தன.

''நடந்தது போதும்; இங்கே சிறிது நேரம் உட்கார்ந்திருந்துவிட்டுத் திரும்பலாம்'' என்றாள் சீதா.

பசும் புல் வட்டத்தைச் சுற்றிச் சில பெஞ்சுகள் போட்டிருந்தன. அவற்றில் சிலர் உட்கார்ந்திருந்தார்கள். ராகவனும் சீதாவும் ஒரு பூஞ்செடிப் புதரின் அருகில் அமர்ந்தனர்.

பெஞ்சிகளில் ஒன்றில் ஒரு பார்ஸிக் கனவானும் அவர் மனைவியும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடைய இரு குழந்தைகள் புல் தரையில் ஓடி ஆடுவதைப் பார்த்து அவர்கள் மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்!



''வஸந்தியையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கலாம். இங்கே ஓடி விளையாடுவாள்!'' என்றாள் சீதா.

''இவ்வளவு தூரம் அவளால் நடக்க முடியுமா? அல்லது அவளைத் தூக்கிக் கொண்டுதான் வர முடியுமா? காரிலே தான் அழைத்துக் கொண்டு வரவேண்டும்!'' என்றான் ராகவன்.

''ஆமாம்'' என்றாள் சீதா. சற்றுப் பொறுத்து, ''அம்மாவையும் குழந்தையையும் அழைத்துப் போய் டில்லி அதிசயங்களை யெல்லாம் காட்ட வேண்டாமா?'' என்று கேட்டாள்.

''காட்ட வேண்டியதுதான். ஆனால் வஸந்திக்கு இந்த வயதில் ஒன்றும் தெரியாது. அம்மாவுக்கு ஊர் சுற்றுவதில் ஆசை கிடையாது. 'கோயில் இல்லை, குளம் இல்லை. மசூதியையும் மண்ணாங் கட்டியையும் பார்த்து எனக்கு என்ன ஆகவேண்டும்?' என்கிறாள். ஆனாலும் நாளைக்கு ஞாயிற்றுக் கிழமையாதலால் குதுப்மினாருக்கும் கோட்டைக்கும் உங்கள் எல்லோரையும் அழைத்துப் போகலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்'' என்றான் ராகவன்.

இதைக் கேட்ட சீதா, வீட்டிலிருந்து புறப்படும்போது ஏற்பட்ட மனச் சோர்வு நீங்கிக் குதூகலமடைந்தாள்.

''ஆமாம், தாஜ்மகாலுக்கு எப்போது போகிறது? முதல் முதல் நாம் இங்கு வந்தபோதே அழைத்துப் போவதாகச் சொன்னீர்கள். அதற்குள் சீமைப் பிரயாணம் வந்து விட்டது. ஞாபகம் இருக்கிறதா?'' என்றாள் சீதா.

''ஞாபகமில்லாமல் என்ன? அதைப் பற்றியும் யோசித்துக் கொண்டுதானிருக்கிறேன். தாஜ்மகாலுக்குப் போவதாயிருந்தால் பௌர்ணமி அன்று போக வேண்டும். அப்போதுதான் அதன் அழகை நன்றாக அனுபவிக்கலாம்!'' என்றான் ராகவன்.

''நிலா வெளிச்சத்தில் தாஜ்மகாலைப் பார்த்தால் தேவலோகத்து மேனகையின் மாளிகை மாதிரி இருக்கும் என்று ஒரு தடவை சொல்லியிருக்கிறீர்கள்.''

''ஆமாம்; பகலிலே தாஜ்மகாலைப் பார்த்தால் பளிங்குக் கல் மாளிகையாகத் தோன்றும்; நிலா வெளிச்சத்தில் பார்த்தால் பூரண சந்திரனுடைய கிரணங்களைக் கொண்டே கட்டியதாகத் தோன்றும்!''

''ஏன் ஸார்! அடுத்த பௌர்ணமியன்று போய் வரலாமே? என்ன சொல்கிறீர்கள்?''

''பார்க்கலாம்!''

''அம்மாவையும் வஸந்தியையும் அழைத்துக் கொண்டுதானே போக வேண்டும்?''

இதற்கு ராகவன் பதில் சொல்லவில்லை. அவனுடைய மனம் வேறு எங்கேயோ அதற்குள் போய்விட்டதாகத் தோன்றியது.

சூரியாஸ்தனமாகி இருள் சூழ்ந்து வந்தது. புதுடில்லிக்குச் சோபை அளித்த ஆயிரக் கணக்கான மின்சாரத் தீபங்கள் ஒளிரத் தொடங்கின. நாலாபுறமும் பச்சைப் பசும் மரங்களின் இடையிடையே அந்த மின்சாரத் தீபங்கள் ஒளிர்ந்தது அற்புதமான காட்சியாயிருந்தது.

அப்போது பனிக்காலம் முடியும் சமயம். இலேசாகப் பனி விழத் தொடங்கியது. சீதாவின் உள்ளம் அச் சமயம் குளிர்ந்திருந்தது போல் உடம்பும் குளிர்ந்திருந்தது.

இருவரும் பசும்புல் தரையிலிருந்து எழுந்து வீடு நோக்கி நடந்தார்கள். திரும்பி வரும்போது தூரம் அதிகமாயிருப்பது போலத் தோன்றியது.

கிட்டத் தட்ட வீட்டுக்குச் சமீபம் வந்துவிட்டார்கள். வீட்டுச் சாலைக்குத் திரும்ப வேண்டிய இடத்தில் சாலை ஓரத்து மேடையில் அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். முதலில் வந்த சீதா திடுக்கிட்டு மிரண்டு ஒரு கணம் நின்றாள்; ஓர் அடி பின்வாங்கினாள். இதன் காரணம் அவளுக்கு எதிரில் ஒரு பெரிய மரத்தோரமாகக் கையில் பிடித்த கத்தியுடன் ஒரு ஸ்திரீ நின்று கொண்டிருந்ததுதான். இலேசான பனிப் படலம் சல்லாத் திரையைப் போல் அந்த ஸ்திரீயை மூடியிருந்தது. சாலை ஓரத்துத் தீபஸ்தம்பத்தில் லாந்தர் போல் கூடு அமைந்து விளங்கிய மின்சார விளக்கின் பரந்த ஒளி பனிப் படலத்தின் வழியாகப் புகுந்து அந்த ஸ்திரீயின் வெளிறிய முகத்தை மங்கலாக எடுத்துக் காட்டியது. நாடக மேடைகளில் சில சமயம் மெல்லிய வெள்ளைச் சல்லாவினால் மூடிய ஆவி உருவங்களைக் கொண்டு வந்து காட்டுகிறார்களே, அதைப் போல் அந்த ஸ்திரீயின் உருவம் காட்சி அளித்தது. கையில் கத்தி பிடித்த பெண் உருவத்தைக் கண்டதும் சீதா தயங்கிப் பின்வாங்கினாள். பின்னால் அடியெடுத்து வைத்த அதே நேரத்தில் அந்த ஸ்திரீயை முன்னால் ஒரு சமயம் பார்த்திருப்பதாகச் சீதாவுக்கு நினைவு வந்தது. ஈனமான, மெலிந்த 'ஓ' என்ற சப்தம் ஒன்று அவள் வாயிலிருந்து வந்தது. பின்னால் வந்த ராகவன் சீதாவைக் கையினால் தாங்கிக் கொண்டு, ''என்ன?'' என்று


"இது க்ராய்லின் வண்ணப் பூச்சா என்ன?"
"ஓ! அதுவும் நானே தீட்டியதாகும்"
இலவசம்!
எட்டு க்ராய்லின் வண்ணப் பாட்டில்கள் கொண்ட ஒவ்வொரு பாக்கெட் வாங்கினால் ஒரு புது மாடல் ஃபோல்டிங் பிரஷ் மற்றும் டிசைன்கள் இலவசம்.
கற்றிடுவீர்—க்ராய்லின் பெயிண்டிங்
இன்றே எமது தபால்வழி பயிற்சியில் சேருவீர்
கேமல் க்ராய்லின் தயாரிப்பாளர்கள் உருவாக்கித் தந்திடும் ஒப்பற்ற வாய்ப்பு. ஓய்வு நேரத்தில் உங்கள் வீட்டில் இருந்தபடியே துணிகளில் வண்ணம் தீட்டும் கலையைக் கற்றுக் கொள்ளுங்கள். வண்ணம் தீட்டும் நுட்பத்தில் தேர்ச்சிபெற வகை செய்யும் ரூ. 12 மதிப்புள்ள வண்ணப் புத்தகம் உங்களுக்கு இலவசமாக கிடைக்கும். இத்தனைக்கும் ரூ. 20 மட்டுமே.
பிரபல ஓவியரும் எங்களது கலை ஆர்ட் டைரக்டர் திரு. பால் யாட் அவர்களின் நேரடிப் பயிற்சியும் கவனிப்பும் கிடைக்கிறது.
தொடர்பு கொள்க: க்ராய்லின் காரஸ்பாண்டன்ஸ் ஸ்கூல் கேமலின் பிரா. லிட்., ஜே. பி. நகர், பம்பாய்-59
camel Crylin COLOURS
VISION 721 TM

றான். 'அதோ' என்று கையைக் காட்டினான் சீதா. ராகவன் பார்த்தபோது அந்தப் பெண் உருவம் விரைவாக நகர்ந்து கொண்டிருந்தது. அரை நிமிஷத்துக்குள் இருளிலும் பனியிலும் மறைந்து விட்டது.

இந்தச் சம்பவம் எந்த விதமான உணர்ச்சியையோ, கிளர்ச்சியையோ ராகவன் மனத்தில் உண்டாக்கவில்லை. ''அசடே! புதுடில்லிச் சாலையில் எத்தனையோ பேர் வருவார்கள், போவார்கள். நீ எதற்காகப் பயப்படுகிறாய்?'' என்றான் ராகவன்.

''நான் பயப்படவில்லை'' என்றாள் சீதா. ஆயினும் அவளுடைய உள்ளத்தில் இன்னதென்று சொல்ல முடியாத பீதி குடிகொண்டு விட்டது. அந்தப் பீதியினால் அப்போது அவளால் ஒன்றும் பேச முடியவில்லை. இராத்திரி படுக்கப்போகும் சமயத்தில் ராகவனிடம் சாவகாசமாக அந்த ஸ்திரீயைப் பற்றி விவரங்களைச் சொல்ல வேண்டும் என்று மனத்துக்குள் எண்ணிக் கொண்டாள்.

5. ஹரிபுரா காங்கிரஸ்

ராகவனும் சீதாவும் வீட்டு வாசலுக்கு வந்தபோது உள்ளே கலகலவென்று குழந்தையின் சிரிப்புச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. வீட்டுக்குள் சென்றதும் சூரியா வஸந்திக்கு விளையாட்டுக் காட்டிச் சிரிக்கப் பண்ணிக் கொண்டிருப்பதைப் பார்த்தார்கள்.

''ஓகோ! அம்மாஞ்சியா? எப்போது வந்தாய்?'' என்று சீதா குதூகலத் தொனியில் கேட்டாள்.

''வந்து அரை மணியாச்சு, அத்தங்கா! நீங்கள் திரும்பி வருவதற்கு ரொம்ப நாழிகை யாகுமோ என்னமோ என்று எண்ணிக் கொண்டிருந்தேன். மாப்பிள்ளை ஸார்! வஸந்தி உங்கள் பேரில் குறை சொல்லுகிறாள்! பாட்டியை ஒண்டியாக விட்டு விட்டு நீங்கள் எங்கேயோ தொலைந்து போய்விட்டீர்களாம்! பாட்டியைப் பார்த்துக்கொள்வதற்காக வஸந்தி வீட்டிலேயே இருக்கிறாளாம்! எப்படி இருக்கிறது கதை!'' என்றான் சூரியா.

ராகவனுக்குக் குபீர் என்று சிரிப்பு வந்துவிட்டது. வஸந்தியைத் தூக்கிக் கொண்டு, ''துஷ்டப் பெண்ணே! அப்படியா நீ சொன்னாய்?'' என்று பொய்க் கோபத்துடன் கேட்டான்.

''அப்படித்தான் சொன்னேன். பின்னே என்னை ஏன் ஆத்திலே விட்டுத் துப் போனே?'' என்றாள் வஸந்தி.

''அம்மாஞ்சி! காங்கிரஸ் எப்படி நடந்தது?'' என்று சீதா கேட்டாள்.

''பிரமாதமாக நடந்தது!'' என்றான் சூரியா.

''உன் அம்மாஞ்சி போயிருக்கிறபோது பிரமாதமாக நடக்காமல் எப்படி நடக்கும்?'' என்றான் ராகவன்.

''காங்கிரஸ் நடந்ததைப் பற்றிக் கதை கதையாகச் சூரியா சொல்கிறான். முதலிலே எல்லோரும் உட்கார்ந்து சாப்பிடுங்கள். சமையல் ஆறிப்போகிறது. சாவகாசமாக உட்கார்ந்து கதையைக் கேட்கலாம்!'' என்றாள் காமாட்சி அம்மாள்.

சாப்பிட்டுவிட்டு உட்காரும் ஹாலுக்கு வந்த பிறகு சூரியா சுபாஷ் சந்திர போஸின் தலைமையில் நடந்த ஹரிபுரா காங்கிரஸ் விமரிசைகளை வர்ணித்தான். ராகவன் கூட வழக்கமான அலட்சியமோ வெறுப்போ காட்டாமல் சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டு வந்தான்.

கதையை முடித்து விட்டுச் சூரியா, ''எல்லாம் நன்றாய்த்தான் நடந்தது. ஆனால் எங்களுக்கு மட்டும் அவ்வளவு திருப்தி இல்லை!'' என்றான்.

'' 'எங்களுக்கு மட்டும்' என்றால் என்ன அர்த்தம்? 'நாங்கள்' என்பது யார்?'' என்று ராகவன் கேட்டான்.

''சோஷலிஸ்ட் பார்ட்டியைச் சொல்கிறேன். நான் அந்தப் பார்ட்டியைச் சேர்ந்தவன்'' என்றான் சூரியா.

''சோஷலிஸ்ட் பார்ட்டி என்றால் என்ன?'' என்று சீதா கேட்டாள்.

சூரியா பதில் சொல்வதற்குள் ராகவன், ''சோஷலிஸ்ட் பார்ட்டி என்றால் பணக்காரன், ஏழை, புத்திசாலி, மடையன், நல்லவன், கெட்டவன், மனிதன், மாடு எல்லாவற்றையும் சரிமட்டமாக்கிச் சமுத்திரத்தில் அமுக்கி விடுவது என்று அர்த்தம்!'' என்றான்.

''அத்தங்கா! நீ பயந்து போய் விடாதே! மாப்பிள்ளை தமாஷுக்காகச் சொல்கிறார்'' என்றான் சூரியா.

''போகட்டும்; காங்கிரஸில் இப்போது மகாத்மா காந்தியின் செல்வாக்கு எப்படி இருக்கிறது?'' என்று கேட்டான் ராகவன்.

''மகாத்மாவின் செல்வாக்குக்கு என்ன குறைவு? அவருடைய செல்வாக்கினால்தானே எங்கேயோ ஒரு மூலையில் உள்ள கிராமத்தில் இந்த வருஷம்

காங்கிரஸ் இவ்வளவு சிறப்பாக நடந்தது!''

''காந்தியின் போக்கிலேயே விட்டால் இந்தியா தேசத்தில் ஆண்டிப் பரதேசிகள்தான் மிஞ்சுவார்கள். எல்லோரும் கையில் கப்பரையை எடுக்க வேண்டியதுதான். ஆனால் பிச்சை போட யாரும் இருக்க மாட்டார்கள். காந்தியின் செல்வாக்கு இருக்கிறவரையில் இந்தியா ஒருநாளும் உருப்படப் போவதில்லை'' என்று ராகவன் கோபமாகப் பேசினான்.

''வேண்டாமடா, ராகவா! காந்தியைப் பற்றி நீ இப்படியெல்லாம் பேசாதே! காந்தியை மகான் என்றும் அவதார புருஷர் என்றும் ஜனங்கள் சொல்கிறார்களே?'' என்றாள் காமாட்சி அம்மாள்.

''ஜனங்கள் சொல்லுவதற்கு என்ன? குருட்டுத்தனமாக எதை வேணுமானாலும் சொல்லுவார்கள். சூரியா! மகாத்மாவின் செல்வாக்கைப் பற்றி · உன் அபிப்பிராயம் என்ன?'' என்று ராகவன் கேட்டான்.

''மகாத்மாவைப் பற்றி உங்களைப் போல் நான் நினைக்கவில்லை. அவர் மகான்! இந்தியா தேசம் எவ்வளவோ அவரால் நன்மை அடைந்திருக்கிறது. ஆனாலும் சில விஷயங்களில் அவருடன் மாறுபடுகிறோம். உதாரணமாக சுதேச மன்னர்களின் விஷயத்தில் மகாத்மா மிக்க பிற்போக்கா யிருக்கிறார். அவர்களைப் பற்றிக் காங்கிரஸில் பேசவே கூடாது என்கிறார். நாங்களோ சுதேச மன்னர்கள் எல்லோரையும் அடியோடு ஒழித்துக் கட்ட வேண்டும் என்று சொல்கிறோம்'' என்றான் சூரியா.

''தயவுசெய்து நீங்கள் இரண்டு பேரும் மகாத்மா காந்தியைப் பற்றி ஒன்றும் பேசாதீர்கள். எனக்குக் கேட்கக் கஷ்டமா யிருக்கிறது. 'மகாத்மா-காந்திதான் தெய்வம்' என்று என் அம்மா சொல்லி யிருக்கிறாள். அதற்கு விரோதமாக யார் என்ன சொன்னாலும் நான் கேட்க மாட்டேன்'' என்றாள் சீதா.

''நீயும்கூட அரசியல் விஷயத்தைப் பற்றிப் பேச வந்து விட்டாயா?'' என்றான் ராகவன்.

''அத்தங்கா! மகாத்மா காந்தி தெய்வமாகவே இருக்கட்டும். தெய்வத்திடம் வரம் கேட்பது உண்டல்லவா? அந்த மாதிரிதான் நாங்களும் மகாத்மாவிடம் கோரிக்கை செய்கிறோம்'' என்றான் சூரியா.

''தெய்வம் என்று ஒப்புக்கொண்டால் அப்புறம் வரம் கேட்பது என்ன? எந்தச் சமயம் என்ன கொடுக்க வேண்டும் என்று தெய்வத்துக்குத் தெரியாதா?



மின்னலடிக்கும் வெண்மைக்கே...
ரின்
RIN
DETERGENT WASHING TABLET
ரின். சோப் அல்ல இது. புத்தம் புதுமையான ஒரு சலவைச் சாதனம்—வில்லை வடிவிலே ஒரு டிடர்ஜெண்ட். சிக்கனமிக்கது ரின்: சோப்பைவிட மேலும் அரை மடங்கு அதிகத் துணிகளை வெளுத்திடும். திறந்த சோப்புப் பெட்டியிலே ஈரமுலர வைத்துக் கொண்டால் சிறந்த பலன் அளிக்கும் ரின். குடும்பத்திலுள்ள ஆடவரின், பெண்டிரின், குழந்தையரின்...யாவரின் துணிகளிலும் மின்சுடரின் வெண்மை பளிச்சிடவே: ரின்!
சலவையோ யானையளவு!
சோப்பைவிட அரை மடங்கு அதிகத் துணிகளை வெளுப்பது ரின்!

நாம் கேட்டுத்தானா தெய்வம் கொடுக்க வேண்டும்?'' என்றாள் சீதா.

இந்தக் கேள்வி ராகவனுக்கு வியப்பை அளித்தது. ''சூரியா! உனக்கும் உன் அத்தங்காவுக்கும்தான் சரி. அவளுடைய கேள்விக்குப் பதில் சொல், பார்க்கலாம்!'' என்றான்.

''அத்தங்காளின் சாமர்த்தியம் எங்களுக்கெல்லாம் அப்போதே தெரியுமே! அதனால்தான் லலிதா 'அத்தங்கா! அத்தங்கா!' என்று உயிரை விட்டுக்கொண்டிருக்கிறாள். இராத்திரி தூக்கத்திலே கூட அத்தங்காளைப் பற்றி உளறுகிறாளாம்!'' என்றான் சூரியா.

இதிலிருந்து ராஜம்பேட்டையிலும் தேவபட்டணத்திலும் உள்ள பந்துஜனங்களைப் பற்றிப் பேச்சு ஏற்பட்டுச் சிறிது நேரம் நடந்தது.

''சூரியா! ஹரிபுராவுக்கு நீ பம்பாய் வழியாகப் போயிருக்கலாமே? டில்லி வழியாக வந்தது தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போல் அல்லவா இருக்கிறது?'' என்றான் ராகவன்.

''உங்கள் தாயாரிடம் நான் வடக்கே போகப் போவதாகச் சொன்னேன். 'எங்களை டில்லியில் கொண்டு விட்டு விட்டுப் போயேன்' என்று சொன்னார். அதனால்தான் வந்தேன்?''

''நான் என்னத்தைக் கண்டேன்? வடக்கே என்றால் டில்லிக்குப் பக்கத்திலே இருக்கும் என்று நினைத்தேன்!'' என்றாள் காமாட்சி அம்மாள்.

''இங்கே உள்ளவர்களும் அப்படித்தான். மதராஸ்காரன் என்றால் இராமேசுவரத்தைப் பற்றி விசாரிப்பார்கள். சென்னை மாகாணம் முழுதும் இராமேசுவரத்துக்குப் பத்து மைல் சுற்றளவில் இருப்பதாக இவர்களுக்கு எண்ணம்!'' என்றான் ராகவன்.

''ராமேசுவரம் என்றதும் ஞாபகம் வருகிறது. ஏண்டா, அப்பா ராகவா! என்னைக் காசிக்கு எப்போது அழைத்துக் கொண்டு போகிறாய்?'' என்று கேட்டாள் காமாட்சி அம்மாள்.

''ஆகட்டும், ஆகட்டும். மெள்ள மெள்ளப் பார்க்கலாம். முதலில் டில்லியைப் பார்த்து வைப்போம். நாளைக்கு உங்களையெல்லாம் அழைத்துப் போய் டில்லி நகரத்தைச் சுற்றிக் காட்டலாம் என்று எண்ணியிருக்கிறேன்.''

''சூரியா! நீ டில்லியைச் சுற்றிப் பார்த்திருக்கிறாயா?'' என்று சீதா கேட்டாள்.

''இன்னும் பார்க்கவில்லை. நாளைக்குத்தான் சுற்றிப் பார்க்கலாமென்று திட்டம் போட்டிருக்கிறேன்.''

''பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று. எங்களுடன் நீயும் வந்து

தெரிந்த விளையாட்டு தெரியாத விவரம்

8. ஒலிம்பிக் பந்தயங்கள்

☐ பிலோப்பியா ஒன்பதாம் நூற்றாண்டில் பிஸா மன்னனின் அழகிய குமாரி ஹிப்போடமியாவை வெற்றிப் பரிசாகப் பெற்றான். ஓடும் சாரட்டிலிருந்து அந்த அழகிய பெண்ணைக் கைப்பற்ற வேண்டும். பின்னால் மற்றொரு சாரட்டில் பின் தொடரும் அவள் தந்தையின் பிடியிலிருந்தும் தப்ப வேண்டும். பதின்மூன்று பேர் இந்தப் பந்தயத்தில் பிஸா மன்னனிடம் தோல்வியுற்றனர். அதோடு உயிரையும் இழந்தனர். பிலோப்பியா போட்டியில் வென்று அரசன் மகளைப் பெற்றான்; மாமனாரை இழந்தான். தன் வெற்றியைக் கொண்டாடப் பிலோப்பியா ஒலிம்பிக் போட்டிகளை ஏற்படுத்தினான்.

☐ 1890ல் ஒலிம்பிக் போட்டிகளில் மக்களுக்கு அவ்வளவு ஈடுபாடு இருக்கவில்லை. மக்களின் மனத்தைக் கவருவதற்கு என்ன செய்வது என்று ஒலிம்பிக் நிர்வாகிகள் மண்டையைப் போட்டு உடைத்துக்கொண்டார்கள். உடனே ஒருவர், 'இருபத்தைந்து மைல் ஓட்டப் பந்தயம் வைத்தால் என்ன?' என்று கேட்டார். இந்தப் பந்தயத்துக்கு மவுசு கொடுக்க அந்தக் காலத்தில் நிகழ்ந்த ஒரு போரின் பெயரைக் கொடுத்தார்கள்.

கி. மு. 490ல் நடந்த அந்தப் போர் மனித நாகரிக வளர்ச்சியில் ஒரு முக்கிய கட்டமாகும். பாரசீகம் அந்தப் போரில் வென்றிருந்தால் கிரேக்க நாட்டு நாகரிகம் அழிந்து பட்டிருக்கும். பாரசீகத்தின் ஆதிக்கம் அந்த நாட்டுப் பண்பாடுகளை இருள வைத்திருக்கும். ஒரு மனிதன் இல்லாவிட்டால் போரின் போக்கே மாறிப் போயிருக்கும்! பாரசீக நாட்டவர் கப்பல்களில் வந்து இறங்கிப் போர் நிகழ்த்தும் செய்தியை பெய்டிப்பிடைஸ் (Pheidippides) என்பான் ஸ்பார்ட்டாவுக்கு வெகு வேகமாக ஓடிச் சென்று கூறிச் சேனைகள் அனுப்பி உதவுமாறு கோரினான். இதற்காக அவன் இரண்டு நாட்களில் நூற்றைம்பதுமைல் ஓடினான். உதவிபெற்ற ஏதென்ஸ் வீரர்கள் படையெடுத்து வந்த பாரசீக நாட்டவரை முறியடித்தனர். இந்தச் சரித்திரப் பிரசித்திபெற்ற போர் மாரதான் என்று பெயர் கொண்ட சகதியும் சேறும் நிரம்பிய ஒரு பெரிய மைதானத்தில் நிகழ்ந்தது. இதனால் 'மாரதான் போர்' என்று இதனைச் சரித்திரம் குறிப்பிடுகிறது.

செயற்கரிய சாதனையை மாரதான் என்று வர்ணிப்பதும் வழக்கமாயிற்று. ஆகவேதான் 1896ல் ஒலிம்பிக் நிர்வாகிகளும் இருபத்தைந்து மைல் ஓட்டப் பந்தயத்துக்கு 'மாரதான் பந்தயம்' என்று பெயர் சூட்டினார்கள்.

- குண்டுமணி



சேர்ந்துகொள். பேச்சாவது சுவாரசியமாயிருக்கும்!'' என்றான் ராகவன்.

* * *

அன்றிரவு சீதா ஒரே உற்சாகமாக இருந்தாள். சூரியாவிடம் ராகவனுக்கு இருந்த அலட்சிய பாவமும் வெறுப்பும் நீங்கி அவனுடன் சுமுகமாகப் பேசியதையும் அவனை டில்லி சுற்றிப் பார்க்க வரும்படி அழைத்ததையும் நினைத்து நினைத்து மகிழ்ந்தாள்.

தூங்குவதற்கு முன்னால் அவள், சாலை முனையில் பார்த்த ஸ்திரீயைப் பற்றி ராகவனிடம் சொல்ல வேண்டுமென்று உத்தேசித்திருந்தாள். ஆகையால், ''இன்றைக்கு ஒரு பொம்மனாட்டியைப் பார்த்தோமே!....'' என்று ஆரம்பித்தாள்.

''மறுபடியும் உன் 'பொம்மனாட்டி' கதையை ஆரம்பித்து விட்டாயா!'' என்றான் ராகவன்.

அப்போது சீதாவின் மனத்தில் இருந்த ஸ்திரீ வேறு. ராகவன் எண்ணிக் கொண்ட ஸ்திரீ வேறு. ஆனாலும் ராகவன் அவ்விதம் வெடுக்கென்று பேசியதும் சீதா சிறிது தயங்கித் தனக்குள் சிந்தித்துப் பார்த்தாள். சந்தோஷமாயிருக்கிற சமயத்தில் வேண்டாத விஷயத்தைப் பற்றிப் பேசித் தொந்தரவை விலைக்கு வாங்கிக் கொள்வானேன் என்று எண்ணிப் பேசாமல் இருந்து விட்டாள். எனினும் அவளுடைய மனத்திலிருந்து கையில் கத்தியுடன் சாலை முனையில் நின்ற ஸ்திரீயின் தோற்றத்தை அடியோடு அகற்ற முடியவில்லை.

(தொடரும்)

நாடகம்

பார்த்த ஞாபகம் இல்லையா?

நாடகம் என்றால் அதற்குக் கதையம்சம் உயிர் நாடி. கதையின் சிறப்பினால்தான் பாத்திரங்கள் ஒளி பெற முடியும். கதையில்லாமல் வெறும் பாத்திரங்களையும் உரையாடல்களையுமே வைத்துக்கொண்டு நாடகத்தை ஒப்பேற்ற முயன்றால், ரஸிகர்களைத் திருப்திப்படுத்த முடியாது.

இந்திரா தியேட்டர்ஸாரின் ''பார்த்த ஞாபகம் இல்லையோ?'' என்ற நாடகம் இந்த அவதிக்குள்ளாகியிருக்கிறது.

நாடக பாத்திரங்களின் சொல்லுக்கும் செயலுக்கும் எப்பொழுதும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஒரு பாத்திரம் எதை வேண்டுமானாலும் செய்யலாம், என்னத்தை வேண்டுமானாலும் பேசலாம் என்ற சுதந்திரத்தைப் பூரணமாக அளித்துவிடக்கூடாது. இந்த நாடகத்துக்கு அத்தகைய அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

என்னதான் இரக்க சித்தம் உள்ளவளானாலும், ஒரு பருவ மங்கை. அதுவும் நவநாகரிகக் கல்லூரி மாணவி, அழகில்லாத ஒரு வாலிபனை, படு அசடைக் காதலித்துக் கல்யாணம் பண்ணிக்கொள்ளும் அளவுக்குத் துணிந்துவிட மாட்டாள். அவனிடம் அவளுக்கு அளவு கடந்த அநுதாபம் உண்டாகலாம்; அந்த அநுதாபம் காரணமாக அன்பும் உண்டாகலாம். ஆனால் அந்த அநுதாபத்தையும் அன்பையும் அஸ்திவாரமாகக் கொண்டு காதல் பிறந்துவிடும் என்று நினைப்பது தற்காலப் பருவப் பெண்ணின் மனப் பக்குவத்தை அறியாததனால் ஏற்பட்ட அசட்டு முடிவு என்றுதான் கொள்ள வேண்டும்.

மனப் பக்குவம் பெறாத, உடல் வலிவில்லாத, கோர ஸ்வரூபமான சுந்தரமாக நடிக்கும் ரவிச்சந்திரன் அந்தப் பாத்திரத்துக்கு ஒரு தனித் தன்மையை அளித்து விட்டார். நடை, உடை, பாவனை, இவற்றுக்கெல்லாம் மேலாக, பல்லும் பலிஷ்டமாக அவர் செய்து கொண்டிருந்த மேக்கப் எல்லாமாகச் சேர்ந்து சுந்தரத்தின் பாத்திரத்துக்குத் தனிச் சிறப்பை அளித்து விட்டன. அவர் சினிமா நடிகர் ரவிச்சந்திரன் என்பதைக் கண்டுகொள்ளவே முடியவில்லை.

நாடகத்தின் ஆரம்ப கட்டத்திலிருந்த விறுவிறுப்பு இடைவேளைக்குப் பிறகு இல்லை. கதாநாயகன் சுந்தரம், ரசாயன சிகிச்சையின் மூலம் தன் கோர ஸ்வரூபத்தை இழந்து அழகனான ரவிகுமாராக மாறியதும் நாடகம் தன் அழகை இழந்து அசடு வழிய ஆரம்பித்து விட்டது!

கதாநாயகி, கல்லூரி மாணவி வனஜாவாக வரும் வி. தேவிகிக்கு நல்ல எடுப்பான தோற்றம் இருக்கிறது. துடிப்பான நடிப்பும் இருக்கிறது. ஆனால் நாடகத்தை எழுதிய பாபு பிரபாகர் வனஜாவின் பாத்திரத்தைச் சரியானபடி அமைக்கவில்லையாதலால் அவர் திறமை சோபிக்கவில்லை.

விஞ்ஞானியின் விபரீதச் சிகிச்சையினால், நாயாகிவிடும் மோதி என்ற வாலிபன் பாத்திரம் ஏற்ற பாபு பிரபாகர் நாயாவதற்கு முன்னையவிட நாயான பின்பு அருமையாக நடித்தார். மேடையில் நாயையே காண முடிந்தது! அது பெரிய சாதனைதான். ஆனால் அந்தக் காட்சி அளவுக்கு மீறிப்போய் வேதனை தர ஆரம்பித்து விட்டதே!

ஒவ்வொரு காட்சிக்கும் காலப் பிரமாணம் வகுத்துக்கொள்ள வேண்டும். நாடகத்தில் இது இன்றியமையாத அம்சம். தந்தத்தில் சிற்ப வேலை செய்பவன் மாதிரி பார்த்துப் பார்த்து நகாசு வேலை செய்து நாடகத்தை உயர்த்திவிட வேண்டும்.

கதாநாயகன், கதாநாயகி இருவரையும் விட மற்றப் பாத்திரங்களுக்கு அதிகமாகச் சான்ஸ் கொடுக்கப்பட்டிருப்பது இந்த நாடகத்தில் ஒரு பெருந் தவறு. உதாரணமாக புரபசர் ஜெக்க பாலுவி, டபுள் குத்து டேவிட், ஆடியபாதம், டாக்டர் கல்யாண கோபால கிருஷ்ண ஐயர் ஆகிய பாத்திரங்களைச் சொல்லலாம். இவர்கள் மேடையில் அடித்த கூத்து அளவுக்கு மீறிப் போய், இந்நாடகத்தைப் பார்த்த ஞாபகத்தையே மறக்கடித்து விட்டது!

காமேஷ் - ராஜாமணியின் வாத்திய இசை காதைத் துளைத்து அரங்கையே கலக்கி விட்டது!

இந்த நாடகத்தில் பல திருத்தங்களைச் செய்தால் நல்லதொரு நாடகத்தைக் காணமுடியும். - காந்தன்





'ஆம் ஜானகி, எனக்குத் தெரிந்த ஆரோக்கியமுள்ள குடும்பங்களில் அனைவரும் 'ஹார்லிக்ஸ்' பருகுகின்றனர். ஊட்டத்தின் முக்கிய. ஆதாரமே அதுதான்'

என்கிறார் ஜானகியின் டாக்டர்.

அவர் 'ஹார்லிக்ஸ்' தரும் சிறந்த ஊட்டத்தின் குணங்களைப்பற்றி நன்கு அறிந்தவர். ஜீவாதாரமான புரதம் மற்றும் பால், கோதுமை, மால்டெட் பார்லி, இவை தரும் ஊட்டச் சிறப்பும் இயற்கைச் சத்துக்களும் அடங்கியதால் 'ஹார்லிக்ஸ்' நிகரற்று விளங்குகிறது. உதாரணமாக, பாலிலிருக்கும் ஊட்டச் சத்தை இருமடங்காகப் பெருக்குகிறது 'ஹார்லிக்ஸ்'.

குடும்பத்தினரின் ஆரோக்கியத்தைப் பொறுத்த வரையில் மிகச் சிறந்ததென கருதப்படுவது 'ஹார்லிக்ஸ்' தான்.

'ஹார்லிக்ஸ்'—ஒரு பதிவு பெற்ற ட்ரேட் மார்க்.



ஹார்லிக்ஸ்'—ஒரு பதிவு பெற்ற ட்ரேட் மார்க்

முழுமையான ஊட்டம் பெற-'ஹார்லிக்ஸ்'

ஆண்மை—
அடக்கியாளும்,
ஆர்வமூட்டும்,
அலைபாயும்,
அதிரடிக்கும்.
ஆண்மையின்
பன்முகப்
பண்புகளைப்
படித்தறிந்த படைப்பு
'டெரோஸெல்'
ஷர்ட்டிங்!



டெரோஸெல்®

'டெரோஸெல்' என்றொரு திருச்சொல்—தரிப்பவனை மன்னருக்கும் தாரக மந்திரம்! மபத்லால் 'டெரோஸெல்' ஷர்ட்டிங்—எழிலாடும் வண்ணங்களில், இளஞ் சாயல்களில், திசையெட்டும் வென்றிட்ட டிசைன்களில் வருகுது. ஒப்பிலா ஆடவ மாமணிகளுக்கு உறவுசொல்லும் ஷர்ட்டிங்! உயர்தரக் காட்டன் மற்றும் போலியெஸ்டர் இழைகலந்த பழுதில்லா நெசவு!

மபத்லால் க்ரூப்

AIYARS-M.245 TM

16. தேவ தூதன்

அனசூயா விழுந்த இடத்திலிருந்து ''அம்மா! அம்மா!'' என்று கூச்சல் கேட்டதும் எல்லாருக்கும் ஒரு சில விநாடிகளுக்கு நின்றுபோன மூச்சு திரும்பவும் வந்தது.

ரங்கன், ஒரு போலீஸ்காரரின் மகன் என்பதை நிரூபிப்பது போல் கண்டிப்புடன் ஆனால் அமைதியாகப் பேசினான்:

''மீனா! மாமியையும் விகளையும் பார்த்துக் கொள். இந்த இடத்தை விட்டு நீங்க மூணு பேரும் அசையக் கூடாது'' என்று உத்தரவிட்டான். தோளிலிருந்து தொங்கிய காமிராவைக் கழற்றி மீனாவிடம் தந்துவிட்டு, ''வாங்க ஸார்!'' என்று பத்மநாபனை அழைத்துக் கொண்டு சத்தம் வந்த எல்லைக்கு விரைந்தான்.

"ஸைக்கோ ஸாரநாதன்"



கி. ராஜேந்திரன்

''என் காலைக் கெட்டியாகப் பிடிச்சுக்குங்க'' என்று கூறிப் பாதையில் குறுக்கே விழுந்தான். அவன் தலை, கழுத்து, மார்பு என்று படிப்படியாக அந்தப் பாதை விளிம்பில், மலைச் சரிவில் இறங்கிக் கொண்டேயிருந்தது. அவன் உருவம் மறைய மறைய மீனாவுக்குத் தன் தங்கையைப் பற்றிய துயரத்துடன் அவனைப் பற்றிய கவலையும் சேர்ந்து கொண்டு இரண்டும் பாரமாக நெஞ்சை அழுத்த ஆரம்பித்தன. அம்மாவின் தோள்களில் முகம் புதைத்தான். விகளை ஒரு கையால் பற்றிய அம்புஜம், பாறையாகத் தன்னைச் சிரமப்பட்டு மாற்றிக் கொண்டாள். மனம் மட்டும் பாகாய் இளகிக் கொதி விட்டு, ''குறிஞ்சி ஆண்டவனே! முருகா! காப்பாற்று!'' என்று திரும்பத் திரும்பக் கூறிக் கொந்தளித்தது.

பத்மநாபன் ரங்கனின் கால்களைத் தரையோடு அழுத்திப் பிடித்துக் கொண்டார். அவன் கீழ் நோக்கி முன்னேற முயன்ற போது இலேசாகக் கரங்களைத் தளர்த்தினார். மற்றச் சமயங்களில் அவன் ஒரேயடியாகச் சரிந்து விடாதிருக்கத் தமது பாரத்தை அவன் கால்கள் மீது சுமத்தினார்.

''அனு! இதோ, நான் வந்துட்டேன் பாரு! பயப்படாதே!'' என்று ரங்கன் கூறுவது பள்ளத்திலிருந்து கேட்டபோது மேலே இருந்தவர்களுக்குத் துளி நம்பிக்கை பிறந்தது. லவலேசம்தான். இன்னும் எத்தனை பெரிய கண்டங்களிலிருந்து அவர்கள் மீண்டு வரவேண்டும்! நினைத்தாலே குலை நடுக்கமாய் இருந்தது. 'அந்தப் பக்கத்தில் செங்குத்தான சரிவாயிராமல் சற்றுச் சாய்மானமாக உள்ளதா? அங்கே ஏதோ பாறையின்மேல் அனு விழுந்திருக்



கிறாளா? காயம் படாமல் இருக்குமா அவளுக்கு? அல்லது அந்தச் சரிவில் ஏதோ புதர்களில் சிக்கிக் கொண்டிருக்கிறாளா? முட்கள் சிராய்த்து விட்டிருக்குமா? ஏதாவது ஒரு கிளையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறாளோ? ரங்கனின் பிடியில் அவள் சிக்குவாளா? கைக்கெட்டும் தொலைவில்தான் அவள் இருக்கிறாளா? கைக்கு எட்டினால் அவள் புதரை விட்டு விட்டு இவன் கரத்தைப் பற்றும்போது பதற்றமடையாமல் இருக்க வேண்டுமே? இருவரில் ஒருவர் சற்று நடுங்கினாலும் கை நழுவிவிட நிலைமை விபரீதமாக மாறி விடுமே!

'ஐயோ! ஒன்றா இரண்டா? ஆறாயிரம் அடி பள்ளம்!... குறிஞ்சி ஆண்டவனே முருகா!'



''அனு! பயப்படாதே, கண்ணு! அந்தக் கிளையில் உன் பிடியைத் தளர்த்தாதே! நான் பிடிச்சுக்கறேன் உன் கையை. என்ன சரிதானு? அப்பா அம்மாகிட்டே கொண்டு போய்ச் சேர்ப்பிச்சுடறேன் உன்னை. நீதான் தைரியசாலியாச்சே! குட் கேர்ல்! குட் கேர்ல்!''

அவளுக்குத் தைரியம் சொல்லிப் பேசிக் கொண்டேயிருந்தான் ரங்கன் என்பது மேலே இருந்தவர்களுக்குப் புரிந்தது. அனுவுக்குத் தைரியம் ஏற்பட்டதோ என்னவோ, இவர்களுக்கு அணுவளவும் உண்டாகவில்லை.

''ஸார்! இன்னும் கொஞ்சம் இறங்கணும் நான்'' என்றான் ரங்கன். ஏற்கெனவே அவன் சரீரத்தில் பாதிப் பங்கு அந்தப் புறத்தில் தொங்கிக் கொண்டிருந்ததால் கட்டுமஸ்தான தேகம் உடையவனை அவன் பளுவைப் பத்மநாபன் உணரத் தொடங்கிவிட்டிருந்தார். ஆனால் தரையும் எடையில் ஒரு பங்கைத் தாங்கியதால் அவரால் சமாளிக்க முடிந்தது. இப்போது இன்னும் இரண்டு அங்குலம் கீழே தலைகுப்புற அவன் சரிகிறானே! பத்மநாபன் பல்லைக் கடித்துக்கொண்டு தம் பிடியை விடாதிருந்தார். நல்லவேளை, அவர் ஒரு காலை உதைத்து ஊன்றிக் கொள்ள வசதியாக ஒரு பாறை இருந்தது. ரங்கனுடைய இடுப்பும் அந்தப் பள்ளத்துக்குள் முழுமையாக மறைந்து விட்டது.

ஒரு குழந்தைக்கு வந்த ஆபத்து இப்போது இன்னும் இரண்டு பெரியவர்களையும் தொற்றிக் கொண்டிருப்பதை உணர்ந்தாள் அம்புஜம். பத்மநாபனின் பிடி சற்றுத் தளர்ந்தால், அல்லது பயத்தில் வியர்த்துவிட்டு உள்ளங்கை சற்று வழுக்கினால், அதே சமயம் பாறையை உதைத்துக் கொண்டிருக்கும் காலும் நிலைதடுமாறிவிடலாம்!.....அவ்வளவுதான்... மூவருமே அதள பாதாளத்துக்குப் பயணப் படக்கூடும்! 'குறிஞ்சி ஆண்டவனே!

முருகா!'' அம்புஜத்தின் கண்கள் அவள் மாங்கல்யத்திலிருந்த சிவலிங்கத்தை நீரால் அபிஷேகம் செய்தன.

''ஸார்! அனுவைக் கெட்டியாகப் பிடிச்சுக்கிட்டேன்! இனிமே மெல்ல என்னை மேலே இழுங்க! அவசரப்படாதீங்க! நிதானமா!'' என்றான் ரங்கன். பத்மநாபன் அவ்வாறே செய்தார். ரங்கனும் அவருடன் இயன்றமட்டும் ஒத்துழைத்தான். ஒரு கையால் அனுவைப் பிடித்துக் கொண்டே, இடக் கரத்தை மலைச் சரிவில் ஊன்றிப் பின்னுக்கு உடலை உந்தித் தள்ளினான். பத்மநாபன் முட்டுக் கொடுத்தாற் போல் தம் காலை ஊன்றிக் கொண்டிருந்த பாறை இலேசாய் அசைந்து கொடுப்பதைப் பார்த்தபோது குடல் நடுக்கம் ஏற்பட்டது அம்புஜத்துக்கு. ஆனால் தெய்வச் செயலால் அது இறுதி வரை இடம் பெயராமல் நிலைத்து நின்றது. ரங்கன் பாம்பாக இப்படியும் அப்படியும் நெளிந்து பின்னுக்கு வந்தான். ''அனு! இனிமேல் நீ அந்தக் கிளையைப் பிடிச்சுக்க வேண்டாம்! மேலே இருக்கே, அந்தப் புதரைப் பிடிச்சுக்கணும்! நான் உன்னை விட்டுட மாட்டேன், பயப்படாதே!'' என்றான் ரங்கன்.

அந்தப் பயங்கரச் சொப்பனம் மேலும் ஓரிரு நிமிஷங்களுக்கு நீடித்தது. இப்போது ரங்கன் இடது கையைச் சாலை விளிம்பில் நன்கு ஊன்றிக் கொண்டிருந்தான். இதுகாறும் தரையோடு தரையாக இருந்த அவன், இப்போது தவழும் குழந்தையின் நிலையில் தன் முழங்காலை மடக்கி உடலை உயர்த்தியிருந்தான். வலது கரம் இன்னமும் பள்ளத்துக்குள்ளேதான் இருந்தது. மெல்ல மெல்ல அது உயர்ந்தபோது அனுவின் கேசமும் பிறகு நெற்றியும் முகமும் கழுத்தும் தோள்களும் படிப்படியாகத் தெரியலாயின.

அம்புஜம் அதற்கு மேல் அடங்கியிருக்க மாட்டாதவளாய், கண்களில் ஒற்றிக் கொண்டிருந்த தாலியை மார்பில் தவழ விட்டுப் புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு ஓடினாள். அனசூயாவை அள்ளி எடுத்துக் கொண்டு சாலையின் பத்திரமான எதிர்ப் பக்கத்துக்கு வந்து கட்டி அணைத்து முத்தமிட்டுக் கண்ணீர் சொரிந்தாள்.

பாண்ட்டையும் சட்டையையும் தூசி போகத் தட்டிக் கொண்டே ரங்கன் நிமிர்ந்தான். ''உனக்கு நான் ரொம்பக் கடமைப் பட்டிருக்கிறேன் தம்பி!'' என்று கூறிப் பத்மநாபன் அவன்



இரு கரங்களையும் எடுத்துத் தம் கண்களில் ஒற்றிக்கொண்டார். பட்ட சிரமத்தாலும் பயத்தாலும் பத்மநாபனுக்கு உடலெல்லாம் நனைந்திருந்தது. ஆயின் தன் உள்ளங் கைகளை ஈரமாக்கியது வியர்வை அல்ல; கண்ணீர்தான் என்பதை உணர்ந்தான் ரங்கன். ''என்ன ஸார், இது!'' என்றான் ரங்கன் கலக்கத்துடன்.

''ஆபத்தை ஏற்படுத்துகிற ஆண்டவன் உன்னை மாதிரி ஆபத்துதவிகளையும் சமயத்துக்கு அனுப்பி வைக்கிறாரே, அதுதான் அதிசயம்'' என்றார் அவர்.

''ஆபத்துக்கு உதவ வேண்டியது எந்த மனுஷனுக்கும் கடமைதானே? 'ஆண்டவனுடைய தூதன்' அது இதுன்னு சொல்லி நான் செய்ததைப் பெரிசு படுத்தாதீங்க. பெரிய கண்டம் அனுவுக்கு வந்தது; தப்பிப் பிழைச்சாள். கடவுளுக்கு நன்றி செலுத்துங்க.'' அடக்கமாகப் பேசினான் ரங்கன்.

அனுவை மடியில் போட்டுக் கொண்டிருந்த அம்புஜமும், கைகளைப் பிசைந்து கொண்டிருந்த மீனாவும் திருதிருவென்று விழித்துக் கொண்டு நின்ற விசுவும் இருந்த இடத்துக்கு மற்ற இருவரும் போய்ச் சேர்ந்தனர்.

இவர்களுக்கு முன் பின் அறிமுகமில்லாதவர்கள் யாரோ சிலர் அப்போது அந்தப் பக்கமாகப் போனார்கள். கலவரமடைந்த நிலையில் இவர்கள் இருப்பதைப் பார்த்துவிட்டு, ''என்னங்க? என்ன ஆச்சு?'' என்று வினவினார்கள்.

''ஒன்றுமில்லே, குழந்தை விழுந்துடப் பார்த்தா, தெய்வாதீனமா தப்பிச்சுட்டா. ஆனா எல்லாருமே ரொம்பப் பயந்துட்டோம்; அவ்வளவுதான்'' என்றான் ரங்கன்.

''என்னங்க இதைப்போய் 'ஒண்ணுமில்லே, அவ்வளவுதான்'னு இலேசாச் சொல்லிட்டீங்க? ஜாக்கிரதையா இருக்கப்படாது? பூமியிலே பால் கொட்டிப் போச்சுன்னா பிறகு அள்ள முடியுங்களா?'' என்றார் ஒருவர். மற்றொருவர் ''குழந்தைங்களைக் கண்டிச்சுத்தான் வளர்க்கணும்; ரொம்ப இடம் தராப்படாது. தந்தால் இப்படித்தான் ஏதாவது இடைஞ்சல் பண்ணி வைக்கும்'' என்றார்.

இவர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டு அந்தக் கோஷ்டி போய்ச் சேர்ந்ததும், ''இவர்களை யார் அறிவுரை வழங்க அழைத்தார்கள்?'' என்று முணுமுணுத்தாள் மீனா.

ரங்கன் சூள் கொட்டினான். ''ஏதோ அவங்களுக்கும் பொழுது போகணுமில்லே? சொல்லிட்டுப் போறானுங்க. இவன் சொன்னதைக் கேட்டதும் எனக்கு ஒரு விஷயம் ஞாபகம் வருது. நானும் அப்பாவும் மலை ஏறி வந்துக்கிட்டிருந்தோமா? அப்போ வழியில் ஸில்வர் காஸ்கேட் கிட்டத்தில் கணவனும் மனைவியுமா அமெரிக்கர் இருவர் காரை நிறுத்திட்டுச் சாலை ஓரமா ஒரு மதகு மேல் உட்கார்ந்து பேசிக்கிட்டிருந்தாங்க. இன்னொரு பக்கம் சாலை ஓரச் சுவர்மேலே அவர்களோட பையன் நடந்துக்கிட்டிருந்தான். சர்க்கஸில் கயிற்றின் மேலே 'பாலன்ஸ்' பண்ணுவாங்களே அப்படி அவன் நடக்கிறான். அந்தப் பக்கம் அப்படி ஒண்ணும் ஆழம் இல்லே. அந்தத் தைரியத்திலேதான் அவங்களும் மகனை அதுக்கு அனுமதிச்சிருக்காங்க போலிருக்கு. பஸ் நிற்கவே நாங்களும் சற்று இறங்கினோம், அருவி கொட்டற அழகைப் பார்த்து ரசிச்சுட்டுப் போகலாம்னு. அந்தச் சமயத்திலே இப்போ வந்தாங்களே இதே மாதிரிதான் சம்பந்தமில்லாத ஒருவன் பாய்ஞ்சு வந்து அந்தப் பையனை அலாக்காகத் தூக்கினான். நேரே அவன் பெற்றோரிடம் கொண்டு வந்து சேர்ப்பிச்சான். 'பிள்ளையை இப்படித் தனியா விட்டுட்டுப் பேசிக் கிட்டிருக்கீங்களே? விழுந்து வெச்சா என்ன கதி'ன்னு ஒரு குட்டிப் பிரசங்கம் நடத்திட்டுக் கிளம்பினான்.

''இவங்க அவனை விடலே. நிறுத்தி வைச்சு, 'எங்க பிள்ளையைப் பற்றி எங்களுக்கில்லாத கவலை உனக்கு என்னய்யா வந்துடுச்சு'ன்னு முகத்திலே அடிக்கிற மாதிரி கேட்டுட்டாங்க. அப்புறம், அவன் தன் அரை குறை இங்கிலீஷை விழுங்கிட்டுத் தமிழிலேயே அவங்களைத் தைரியமாய்த் திட்டித் தீர்த்துட்டுப் போய்ச் சேர்ந்தான்.

''அந்தக் குழந்தையோட அப்பா என்னைப் பார்த்து என்ன சொன்னார்னு நினைக்கிறீங்க? 'என் மகனுக்கு இது வரையில் பயம் என்றாலே என்னன்னு தெரியாமல் இருந்தது. இப்போ அவன் சொல்லிக் கொடுத்துட்டுப் போயிட்டான்' என்றார். நான் அசந்துட்டேன். ஆனா யோசிச்சுப் பார்த்தபோது அவங்களோட அந்த ஸைகாலஜியை என்னால் புரிஞ்சுக்க முடிஞ்சுது. எச்சரிக்கையா இருக்கணும்பாங்க; ஆனால் பயமுறுத்த மாட்டங்க.''

''அமெரிக்கர்கள் குழந்தைங்களை வளர்க்கற விதமே அலாதி'' என்றார் பத்மநாபன். ''அப்படித்தான் இன்றைக்கு அனுகூட பயப்படாமே தைரியமா இருந்தாளே, அமெரிக்கன் கேர்ல் மாதிரி! இல்லையாடா கண்ணா?'' என்று மகளைக் கொஞ்சித் தேற்றினார்.



வலியைப் போக்கிடும் 'ஆஸ்ப்ரோ'




'ஆஸ்ப்ரோ' மட்டுமே மைக்ரோஃபைன் செய்யப்படுகிறது
<u>அதிவேகமாக</u> வலியை வெளியே இழுப்பதற்காக

நிகோலஸ் (N) தயாரிப்பு

A.G.45.TM





ஆனால் அனசூயாவோ தொடர்ந்து விசும்பி விசும்பி அழுது கொண்டுதா னிருந்தாள்.

"குழந்தை ரொம்பத்தான் அரண்டு போயிட்டாள்" என்று சொல்லி, தளர்த்திய கரங்களை மீண்டும் அவளைச் சுற்றி இறுக்கிக் கொண்டாள் அம்புஜம். "வேண்டாண்டி, கண்ணா வேண்டாம்!"

"எனக்கு ஒண்ணும் பயமில்லே" என்றாள் அனசூயா விம்மியபடியே.

"அதுதான் சமர்த்துக்கு அடையாளம். பயமில்லேன்னா பிறகு ஏன் அழறே? நிறுத்திடு" என்றான் ரங்கன்.

"நான் கீழே விழுந்துட்டதுக்காகப் பயந்து போய் அழலே மாமா! சித்தே முன்னாடி இந்தச் சரிவிலே மாட்டுக் காரப் பயல்கள் போறதைக் கூட நீங்க எனக்குக் காண்பிக்கலையா?"

"ஆமாம், ஆமாம்" என்றான் ரங்கன். இந்தக் கலாட்டாவில் அவன் அதை மறந்தே விட்டிருந்தான். ஆனால் சிறுமி அனு நினைவு வைத்திருந்தாள். கோக்கர்ஸ் வாக் என்ற அந்தப் பாதைக்குள் நுழைந்ததுமே முதன் முதலில் ரங்கனுடைய கவனத்தைக் கவர்ந்தது அந்த விஷயம்தான். ஆச்சரியத்துடன் அவன் அதை அனசூயாவுக்கும் சுட்டிக் காட்டியிருந்தான்.

"இந்த மலைச் சரிவு ஆறாயிரம் அடி ஆழம்! கிடுகிடு பள்ளம் என்று நாம் பயப்படுவோம். ஆனால் அதோ அந்த மாடுகளைப் பார்த்தாயா? தைரியமா இறங்கிப் போறது! அதோ, ஒரு கிழிசல் ஸ்வெட்டரைப் போட்டுண்டு, கையில் கோலோடு மாட்டுக்காரப் பயலும் சரிவில் இறங்கி நிற்கிறான் பார்! என்ன தைரியம்!"

'கோக்கர்ஸ் வாக்'கை யொட்டிய சரிவிலும் மாடுகளுக்குத் தெரியும், எங்கே செங்குத்தான அதள பாதாளம், எங்கே சாய்மானம் என்று. அவை எப்படியோ நுண்ணறிவோடும் உள்ளுணர்வோடும் செயல்பட்டுச் சரிவில் ஓரிரு இடங்களில் மேயப் போய் ஒற்றையடிப் பாதைகளையும் ஏற்படுத்தி யிருந்தன. அதுவும் சாதாரணமாகப் பார்ப்பவர்களுக்குப் புலப்படாது. ஆனால் மாடு சென்ற பிறகு மாட்டுக்காரச் சிறுவர்கள் அதைப் பின்பற்றத் தயங்கமாட்டார்கள். செங்குத்தான பள்ளம் என்றால் மாடு அங்கே இறங்காது என்பது அதனை மேய்ப்பவனுக்குத் தெரியும்.

ஆனால் அனசூயா விழுந்தது அப்படிப் பட்ட சாய்மானமான இடம் என்று சொல்ல முடியாது. செங்குத்தான சரிவுதான். இதை, அவளை விடுவிக்கத் துணிந்த ரங்கன் நன்கு பார்த்துணர்ந்திருந்தான். பக்கவாட்டில் ஒரு மரத்தின் கிளைகள் படர்ந்திருந்ததாலும், புதர்கள் அடர்ந்திருந்ததாலும்தான் பிழைத்தாள் அனசூயா. எடை குறைந்தவளாக இருந்ததால் அவை முறிந்து வளைந்துவிடாது நிலைத்து அவள் கீழே செல்ல வழியில்லாமல் செய்தன; ஏந்திக் கொண்டன. அவள் இலேசானவளாய் இருந்ததால்தான் கிளையைப் பற்றிக் கொண்டபோது அது உடையவில்லை; புதர் வேரோடு பிடுங்கிக் கொண்டு வரவில்லை.

இவற்றை யெல்லாம் அறிந்திருந்தும் ரங்கன் இப்போது அவளை உற்சாகப் படுத்தும் நோக்கத்துடன் பேசினான்: "அதானே கேட்கிறேன், மாடுகளும் மாட்டுக்காரப் பயல்களும் அந்தச் சரிவிலே இறங்கறபோது அனசூயா பயப்படலாமா என்ன? ஷேம்! கண்களைத் துடைத்துக்கொள்!"

அனசூயாவின் அழுகை ஓயவில்லை. சொன்னாள்: "நான் விழுந்ததுக்காகக் கொஞ்சம்கூடப் பயப்படலே மாமா! நான்விழுந்த இடத்திலேயிருந்து கொஞ்ச தூரத்திலே பிரமீளா அக்காவோட அம்மா இருக்கா. அவளைக் கண்டுதான் பயந்தேன். அவள் என்னைக் கோபமா முழிச்சு முழிச்சுப் பார்த்தா!"

''யாரு? கனகமா?'' என்றாள் அம்புஜம் ஒன்றும் விளங்காமல்.

''ஆங்! கனகம் மாமிதான்! கனகம் மாமிதான் அவ பேரு!''

''குழந்தைக்கு ஏதோ பிரமை ஏற்பட்டிருக்காப் போல இருக்கு, விழுந்த அதிர்ச்சியிலே'' என்றார் பத்மநாபன்.

''முருகன் கோயிலுக்குப் போய் விபூதி வாங்கி இட்டால் சரியாப்போயிடும். கிளம்புங்க'' என்ற ரங்கன் அனுவைத் தூக்கித் தோளில் சாற்றிக் கொண்டான். ''அப்புறம் இன்னொரு நாளைக்கு சாவகாசமா இங்கே வந்துக்கலாம்.''

''வேண்டாம்! வேண்டாம்! இன்னொரு நாளைக்கு வேறு இங்கே 'வரணுமா? அனுபவிச்சது போதாதா?'' என்றாள் அம்புஜம்.

நடந்து கொண்டே பேச்சைத் தொடர்ந்தனர்.

''இருக்கட்டுங்க மாமி, ஒருதரம் பட்டாச்சல்லே, இனிமே ஜாக்கிரதையா இருக்க மாட்டோமா? இரவு நேரத்திலே வரணும்.''

''கஷ்டம், கஷ்டம்! பகல்லே வந்து பரிதவிச்சதே போதும், ரங்கா!''

''அதுக்கில்லீங்க; ராத்திரி பெரிய குளத்திலும் இன்னும் சில சின்ன ஊர்களிலும் விளக்கு வைச்சப்புறம் இங்கேயிருந்து பார்த்தா ஏதோ நட்சத்திர மண்டலம் - நமக்குக் கீழே இருப்பது போலத் தோன்றுமாம். அண்ணாந்து நோக்கினால் அங்கே நிஜமான நட்சத்திர மண்டலமும் காட்சி யளிக்கும்!''

''சுருக்கமா திரிசங்கு சொர்க்கத்திலே இருக்கிற மாதிரின்னு சொல்லேன் தம்பி!''

''திரிசங்கு சொர்க்கத்திலேதான் இத்தனை நேரம் இருந்துட்டு வந்தாளே குழந்தை. போதாதா? அதென்னவோ இந்தப் பொண்ணுக்கேதான் திரும்பத் திரும்ப ஏதானும் வந்து சேர்றது.''

ரங்கன் சிரித்தான். பத்மநாபனுக்கும் மீனாவுக்கும்கூடச் சிரிப்பு வந்து விட்டது.

''சிரிங்கோ எல்லாருமா சேர்ந்துண்டு. எனக்கு ரத்தமே கண்டிப் போறமாதிரி இருக்கு'' என்றாள் அம்புஜம். ''கெட்டியா பிடிச்சுக்கோடா கையை!'' என்று விகனை அதட்டினாள்.

''மாமா!'' என்று ரங்கன் காதருகே குனிந்து ரகசியக் குரலில் பேசினாள் அனுசூயா. ''அங்கே கனகம் மாமி இருக்கான்னு சொன்னேனே? அவ செத்துப் போயிட்டா போலே இருக்கு! ஆடாமே அசையாமே இருந்தா. ஆனா கண் கொட்டாமே என்னை முழிச்சுப் பார்த்தா! அதனால்தான் எனக்குப் பயமாப் போச்சு, அழுதேன்!''

எல்லாரும் சேர்ந்து சிரித்ததானது அவள் அழுகையை நிறுத்தி நாவையும் தளர்த்தி யிருந்தது.

''என்ன சொல்கிறாள் குழந்தை?'' என்றார் பத்மநாபன்.

''ஒன்றுமில்லை. எனக்கும் அவளுக்கும் இடையில் ரகசியம்'' என்றான் ரங்கன், ''அப்படித்தானே?'' என்று அனுசூயாவைக் கேட்டான். ''ஆமாம்'' என்பது போல் அவள் அடி உதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டு தலையை மேலும் கீழுமாக அசைத்ததும் ''யாருக்கும் சொல்லாதே!'' என்றான்.

கீழே விழுந்த அதிர்ச்சியில் அவளுக்குப் பயங்கரமான பிரமை ஏதோ ஏற்பட்டிருக்கிறது. ஓரிரு நாட்களானால் சரியாகிவிடும்; முருகனின் பிரசாதமும் நம்முடைய பிரார்த்தனையும் உதவும் என்று எண்ணினான் ரங்கன். அவள் உளறுவதைக் கேட்டால் பெற்றவர்கள் மேலும் கலவரம் அடைந்து பதறுவார்கள். அதைத் தவிர்க்க விரும்பிய அவன், நடந்து கொண்டே அவள் காதோடு சொன்னான்: ''கண்ணு! பயங்கரச் சொப்பனமெல்லாம் ஞாபகம் வைச்சுக்கப்படாது! உடனே உடனே மறந்துடணும், என்ன?''

''ஆனால் இது சொப்பனம் இல்லையே மாமா, தூங்கறச்சேன்னா சொப்பனம் வரும்?''

''அப்படியானா ஒண்ணு செய். இதை என் அப்பாவிடம் சொல்லு. அவர்தான் பெரிய போலீஸ் ஆபீசராச்சே! அவர் எல்லாத்தையும் கவனிச்சுப்பார். அப்புறம் நீ நிம்மதியா இருக்கலாம்!''

''அது நல்ல ஐடியா, ரங்கன் மாமா! அதுக்காகத்தான் உங்ககிட்டே சொன்னேன். நீங்களே உங்க அப்பாகிட்டே இது பற்றிப் பேசிட்டாலும் போறும். இனிமே நான் அழமாட்டேன். எல்லாத்தையும் மறந்துடறேன்!''

''சமர்த்து!'' என்று அவள் கன்னத்தில் முத்தமிட்டான் ரங்கன். சமயோசிதமாகப் பேசி அவள் மனப் பிரமையைத் தான் அடியோடு போக்கி விட்டதில் அவனுக்குப் பரம திருப்தி.

கோக்கர்ஸ் வாக் என்ற அந்த நடைபாதையின் முடிவுக்கு வந்துவிட்டார்கள். சுழல் 'கேட்' ஒன்று அங்கு இருந்தது. ஒவ்வொருவராய் அதில் புகுந்து கேட்டைத் தள்ளிச் சுழல வைத்து அப்பால் போக வேண்டும். குழந்தைகள் இருவருக்கும் அது ரொம்ப சுவாரசியமானதாக விளங்கியது. கேட்டைக் கடந்து இப்பால் வராமல் உள்ளேயே சுற்றிச் சுற்றி வந்து சிரித்தார்கள்.

''இதெல்லாம் நேருஜி வரப் போகிறார் என்பதற்காகச் செய்யப்பட்ட காரி

100% இயற்கை

பதினெட்டு
அபூர்வ மூலிகைகளைக்
கொண்டு
தயாரிக்கப் படுவது
விக்கோ
வஜ்ரதந்தி

பிரபல ஆயுர்வேத பற்பசை மற்றும் பல் பொடியான விக்கோ வஜ்ரதந்தி 18 அரிய மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்படுகிறது இம மூலிகைகளின் தனிப்பட்ட குணங்கள் யாவரும் நன்கு அறிந்ததே. ஆனல் குறிப்பிட்ட அளவுகளில் இவற்றைக் கலக்கும்போது அவற்றின் குணத்திறன் அதிகமாகிறது. விக்கோ வஜ்ரதந்தியின் தற்போதைய செய்முறை பல்லாண்டு ஆராய்ச்சியின் விளைவாகும்.

தவருது விக்கோ வஜ்ரதந்தி உபயோகித்தால், பற்சிதைவு, பயோரியா, ஈறுகளிலிருந்து சீழ் மற்றும் இரத்தம் வருதல், மூச்சிலே துர் நாற்றம் முதலியவை தடுக்கப் படுகிறது.

ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள் உண்மை புரியும்.

ஆயுர்வேத
பற்பசை மற்றும்
பற்பொடி.
வாய் ஆரோக்கியத்துக்கு
ஒப்பற்றது.





விக்கோ லாபரெட்டரீஸ்

தாதர், பம்பாய்-14

TML

ஸ்டாக்கிஸ்டுகள்: R. L. கெனடர் & கோ., 59, பந்தர் தெரு, சென்னை-1

யங்கள்னு பேசிக்கிட்டாங்க'' என்றான் ரங்கன். ''இரண்டு பக்கமும் சுழல் கேட் போட்டதுடன் பாதையையும் அழகாகச் செப்பனிட்டாங்களாம். நடுவிலே தாரும் அதுக்கு இரண்டு பக்கமும் சிமெண்டுமாக நாமம் போட்டதுபோல் பாதை நீளுது பாருங்க!''

''நேருஜி பார்த்து ரசிக்கக் கூடிய காட்சிதான்'' என்றார் பத்மநாபன். ''நமக்கு ஏற்பட்ட மோசமான அனுபவத்தை மறந்துட்டுப் பார்த்தோம்னா அது புரியும். பாரத நாட்டையே ஒரு காதலனுக்குரிய ஆவேசத்தோடு நேசித்தவர் நேருஜி. அந்த நங்கையின் ஓர் எழிலார்ந்த அங்கத்தை இங்கே பார்த்து ரொம்ப ரசித்திருப்பார்.''

'' 'பொயட்டிக்'கா பேசறீங்க! உங்க காவிய உள்ளத்துக்கு ஏமாற்றமளிக்காமல் இருப்பதற்காகவாவது அவர் இங்கே வந்திருக்கலாம். ஆனால் பாவம்! அவருக்குக் கொடுத்து வைக்கவில்லை. நேரமில்லை என்று இங்கே வராமலேயே திரும்பிப் போய்விட்டார் நேருஜி.''

''ஆனாலும் அவர் வரப் போறார்ங்கறதாலே இந்த இடத்துக்கு நல்ல காலம் பொறந்தாப்போலே இருக்கு'' என்றாள் அம்புஜம்.

''இப்பத்தான் பிரசிடெண்ட் வரப் போறார்ங்கறதாலே பழைய மாம்பலம் சாலைக்கே கூட ஒரு சமயம் நல்ல காலம் பொறந்தது!''

''பழைய மாம்பலம் சாலை ஒன்று புதுப்பிக்கப்பட்டதென்றால் அது ரொம்பப் பெரிய விஷயம்தான்'' என்று ரங்கனும் ஒப்புக்கொண்டான். பின்னர் கேட்டான்: ''இந்தக் கோக்கர்ஸ் வாக் ஏற்பட்டு நூறு வருஷங்கள் ஆகிவிட்டன, தெரியுமா உங்களுக்கு? அதன் ஞாபகார்த்தமாகப் பாறையிலே பெயரையும் வருஷத்தையும் செதுக்கி வைச்சிருக்காங்களே, கவனிச்சீங்களா?''

''அது சரி, இதுக்கு ஏன் 'கோக்கர்ஸ் வாக்'குன்னு பேரு? அதைவிட 'க்ரோக்கர்ஸ் வாக்'குன்னு வைச்சிருக்கலாம். சாகப் போறவங்களுக்கு ஏற்ற நல்ல இடம்.''

''அடேடே! அம்புஜம்! என்ன இன்னிக்கு இங்கிலீஷ் பொளக்கறது? அதுவும் இத்தனை பொருத்தமா 'பன்' பண்ணிப் பேசறயே!''

''எல்லாம் நானும் நாலு எழுத்துப் படிச்சவள்தான், ரொம்பக் கிண்டல் பண்ணாதீங்கோ!''

''கோக்கர் என்று ஒரு கிறிஸ்துவப் பாதிரியார் இருந்தாராம் மாமி. அவர், தாம் ஆண்டவனுடன் மனத்தை இரண்டறக் கலக்க ஏற்ற ஏகாந்தமான இடமாக இதைத் தேர்ந்தெடுத்து வந்தாராம். பைபிளைக் கையில் பிரிச்சு வைச்சுக்கிட்டு அதில் கண்ணோட்டம் செலுத்தியபடியே சற்றுப் புறத்தையும் கவனிச்சு நடப்பாராம். அவர் பாதம் பட்டுப் பட்டுத்தான் இந்தப் பாதையே ஏற்பட்டதாம். அதனால்தான் கோக்கர்ஸ் வாக்குன்னு பேர். நாளடைவில் எல்லாரும் வர ஆரம்பிக்கவே ஒற்றையடிப் பாதை கொஞ்சம் கொஞ்சமாய் அகலமாயிற்றுன்னு சொல்லிக்கிறாங்க.''

''சரியான இடத்தைத்தான் தேர்ந்தெடுத்தார்'' என்றாள் மீனா. ''ஐம்பது அறுபது மைல் தொலைவுக்குச் சமவெளியைப் பார்க்கும்போது நம் மனமும் விரிந்து பரந்து உலகையே அணைப்பது போல் ஒரு விநோத உணர்வு ஏற்படுகிறது இங்கே.''

''ஒரு டாக்ஸியைப் பிடிச்சுக்கிட்டுக் கையோடு குறிஞ்சி ஆண்டவர் கோயிலுக்குப் போய் வந்துடுவோமா?'' என்றார் பத்மநாபன்.

''நீங்க அவசியம் அதைச் செய்யுங்க. மனசுக்கு நிம்மதியா யிருக்கும். நான் ஹோட்டலுக்குத் திரும்பிப் போறேன். அப்பாவை ரொம்ப நேரம் தனியா விட்டுட்டு வந்தாச்சு'' என்றான் ரங்கன்.

அப்பாவுக்கும் பிள்ளைக்குமிடையில் பாசம் எத்தனை பலமான முடிச்சாக விழுந்திருந்தது என்பது பத்மநாபனுக்குத் தெரியுமாதலால் அவர் அவனைத் தங்களோடு வருமாறு வற்புறுத்தவில்லை.

அரை மணி நேரம் கழித்து, ஹோட்டலில் தங்கள் அறைக்குள், ''ஹல்லோ டாடி! வாட் நியூஸ்?'' என்று உற்சாகமாகக் கேட்டுக் கொண்டே நுழைந்த ரங்கன் ''ஒரு நியூஸுமில்லேன்னு என்னைக் கேளுங்க; நான் சொல்றேன், கதை கதையா!'' என்றான் உரக்க.

அடுத்த கணம் அவன் அங்கே ஒரு பெண்மணி கண் கலங்க அமர்ந்திருப்பது கண்டு திடுக்கிட்டுத் தயங்கினான். கூடவே 'கவரொட்டிகளில் இந்த முகத்தை அடிக்கடி பார்த்திருக்கிறோம்' என்ற நினைவும் ஏற்பட்டது.

''வா, ரங்கன்! உனக்குப் பிரமீளாவைத் தெரிஞ்சிருக்குமே? இவங்க அம்மாவை இன்னிக்குக் காலையிலிருந்து காணோமாம். ரொம்ப மனசு தளர்ந்து போய் அழறாங்க. 'தேடிக் கண்டு பிடிக்கலாம், பயப்படாதீங்'கன்னு தைரியம் சொல்லிக்கிட்டிருக்கேன்'' என்றார் நடராஜன்.

திகைத்துச் சிலையானான் ரங்கன். வாயடைத்துப் போனாலும், 'அப்படியானால் அனசூயாவுக்கு ஏற்பட்டது பிரமை இல்லையா?' என்று அவன் நெஞ்சம் வீறிட்டு அலறியது. (தொடரும்)

டெட் சலவை செய்யும் கட்டி
டெடர்ஜெண்ட் சக்தி செறிந்தது





டெட் டெடர்ஜெண்ட் சலவைக் கட்டி

சோப்பைவிட 50% அதிக துணிகளை, அதிவெண்மையாக சலவை செய்கிறது

—மென்னீரிலும், சாதாரணமாக நுரைவிடாத நீரிலும்


அன்பே அகிலா!

கதை: குமரன் 8 சித்திரம்: விஜயா





தொடரும்.....



அழகு முகம்
ஒவ்வொன்றுக்குள்ளும்
அழகு ரகசியம்
ஒன்று ஒளிந்திருக்கிறது



அதுவே
எழில் பராமரிப்பு ரகசியம்

உங்கள் நோக்கம் அழகாகத் தோற்றமளிப்பது. உங்கள்
சருமத்தை அதற்கேற்ப வைத்திருப்பது க்ரூக்ஸ்
லாக்டோ-காலமைன் வேலை— துல்லியமாக, புதுமையுடன்,
கவர்ச்சி மெருகுடன் வைத்திருப்பது. இவ்வளவு அனாயாசமாக
சருமத்தை இவ்வளவு அழகாகப் பேணிப் பராமரிப்பது
வேறெதுவுமில்லை. காலையிலும், மாலையிலும்
கடைசியாக இரவில் படுக்கப் போவதற்கு
முன்பும் க்ரூக்ஸ் லாக்டோ-காலமைன் உபயோகியுங்கள்.
உங்கள் சருமம் எப்படி அழகாகத் திகழ்கிறது என்று பாருங்கள்.

க்ரூக்ஸ்
லாக்டோ-காலமைன்

டு:பார்-இன்டர்:ப்ரான் லிமிடெட், பம்பாய்-18

இவரல்லவோ



இப்பிராஜபுரம்
8—1—72

மாண்புமிகு அமைச்சர் பெருமான் உயர்திரு
மக்களன்பன் அவர்களுக்கு,

வணக்கம். நலம். நலமறிய அவா.

இப்பவும் இந்த ஊரில் நிலச்சுவான்தாரர்கள் தரும் தொல்லை தாங்க முடியாததாக இருக்கிறது. ஏழை விவசாயிகள், பாவம் நிலச்சுவான்தாரர்கள் கையில் சிக்கித் தவிக்கிறார்கள். மகசூலில் நியாயப்படி தங்களுக்குச் சேர வேண்டியதைக் கொடுத்தே ஆக வேண்டும் என்று நிலச்சுவான்தாரர்கள் கோரி வருகிறார்கள். சென்ற மூன்று வருட காலமாக, மகசூல் மொத்தத்தையும் இவ்வூர் விவசாயிகள் அத்தனை பேரும் நிலச்சுவான்தாரர்களுக்குக் கொடுக்காமலே சால்ஜாப்பு சொல்லி வந்திருக்கிறார்கள். இப்போது பழைய பாக்கியையும் சேர்த்துக் கொடுக்கும்படி நிலச்சுவான்தாரர்கள் விவசாயிகளிடம் கோருகிறார்கள். இதனால் பாதிக்கப்படுபவர்களில் நானும் ஒருவன்.

எனவே, தாங்கள் இவ்விஷயத்தில் தயவு செய்து தலையிட்டு, எங்களது பழைய பாக்கிகளையும், இந்த வருட மகசூலில் உரிய பங்கையும் நிலச்சுவான்தாரர்கள் கேட்டுப் பெற முடியாதபடிக்குச் **சட்டபூர்வமாக** ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தாங்கள் செய்யும் உதவியை விவசாயப் பெருங்குடி மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள். இது உறுதி. நன்றி.

இப்படிக்கு,
காத்தமுத்து

அமைச்சர் மக்களன்பன் சட்ட மன்றத்தில் இந்தப் பிரச்னை பற்றிக் குறிப்பிடுவதுடன், விவசாயிகள் குத்தகை பாக்கியை நிலச்சுவான்தாரர்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை என்று கூறும் மசோதா ஒன்றையும் கொண்டு வருகிறார். அந்த மசோதா சட்டமாகிறது.

***

கன்றாக்குடி
16—2—72

மதிப்புக்குரிய மக்களன்பன் அவர்களே,


முதற்கண் தங்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கங்கள்.

நான் இந்த ஊர் கூட்டுறவு பாங்கில் ஐந்தாண்டுகளுக்குமுன்பு மூவாயிரம் ரூபாய் கடன் வாங்கினேன். அதற்கான வட்டியை என்னால் ஒழுங்காகச் செலுத்த இயலவில்லை (முதல் தவணையிலிருந்தே!). பாங்க் அதிகாரிகள் கடிதத்துக்கு மேல் கடிதமாக எழுதினார்கள், வட்டி கேட்டு. நான் கொடுக்கவில்லை. இத்தனை காலம் பொறுத்துப் பார்த்துவிட்டு, இப்போது உடனடியாக அசல் தொகையையும் வட்டியையும் பதினைந்து தினங்களுக்குள் நான் கட்டியாக வேண்டும் என்று தாக்கீது பிறப்பித்திருக்கிறார்கள். வட்டியே கட்ட இயலாத நான், அசலையும் திருப்பிக் கொடுப்பது என்பது எப்படிச் சாத்தியமாகும் ?

பாங்க் அதிகாரிகள் எனக்குச் சொந்தமான வீட்டை ஏலத்துக்குக் கொண்டு வந்துவிடுவார்கள் போலிருக்கிறது. வீட்டையும் இழந்து, கையில் பைசாக்கூட இன்றி, குழந்தை குட்டிகளுடன் நான் நடுத் தெருவில் நிற்பதா ? அதுவும் தங்கள் ஆட்சியில் ?

தாங்கள் கருணைகூர்ந்து இவ்விஷயத்தைக் கவனித்து, என் போன்ற ஏழைக் கடனாளிகளின் துயர் துடைக்க ஏதாவது வழி வகைகள் செய்ய வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்,
குப்புமுத்து



ஏழை மக்களின் கடன் பிரச்னை குறித்து அமைச்சர் மக்களன்பன் சட்டமன்றத்தில் உருக்கமாக உரையாற்றுகிறார். அத்துடன், "ஐந்து வருடங்களும் அதற்கு முன்பும் இம் மாநிலத்தில் எந்தப் பாங்கும் யாருக்காவது ஆயிரம் ரூபாய்க்கு மேல் கடன் கொடுத்திருந்தால், அந்தக் கடனையோ அதற்கான வட்டியையோ திருப்பிக் கேட்கும் உரிமை பாங்குக்குக் கிடையாது.

கடன் வாங்கியவர் இஷ்டப்பட்டுத் திருப்பிக் கொடுத்தால் மட்டுமே பாங்க் அந்தக் கடனைத் திருப்பிப் பெற முடியும்'' என்று கூறும் சட்டம் ஒன்றையும் நிறைவேற்றி வைக்கிறார்.

***

சோணாசலம்பேட்டை
25—3—72

அமைச்சர்குல திலகமே, அறிவுச் சுடரே, ஏழை துயர் துடைக்கும் எட்டாவது வள்ளலே, மக்களன்பரே !

வணக்கம் பலப்பல.

நெடுங்காலமாக நான் இவ்வூர்வாசியாக இருந்து வருவது தங்களுக்குத் தெரிந்ததே.

இப்பவும் நான் வடக்கு வீதி 18—ம் எண்ணுள்ள வீட்டில் வசித்து வருகிறேன். இவ்



அமைச்சர்!

முகுந்தன்

வீட்டின் சொந்தக்காரரின் பெயர் பலராமன் என்பதாகும். அன்னாருக்கு நிறையச் செல்வம் இருந்தும் பணத்தாசை பிடித்தலைகிறார் என்பதை இங்கே குறிப்பிட வேண்டியிருக்கிறது. எடுத்துக்காட்டாக, மாதா மாதம் என்னிடம் வாடகை கேட்டுக் கொண்டு அவர் வந்து நிற்பதைக் குறிப்பிடலாம்.

நான் கடந்த நான்காண்டு காலமாக வாடகை கொடுக்காமலே இருந்து வருகிறேன். நான் இப்படிக் கொடாக்கண்டனாக இருப்பது வீட்டுச் சொந்தக்காரர் கண்களை உறுத்துகிறது போலும். அவர் விடாக்கண்டனாக மாதா மாதம் என்னிடம் வாடகை கேட்டு வருகிறார். அதுவும் எப்படி ? பழைய பாக்கியையும் சேர்த்துச் சேர்த்துக் கேட்கிறார் : ''நீங்கள் முப்பத்தாறு மாதங்களாக வாடகை பாக்கி. இது முப்பத்தேழாவது மாதம் !'' என்பது போல அவர் நினைவுபடுத்தும் போதெல்லாம் நான் துயர் கொள்கிறேன். துயரமானது என் உடல்நிலையை மட்டுமின்றி, என் செயல்திறனையும் பாதிக்கிறது. அலுவலகத்தில் வேலையே ஓடுவதில்லை எனக்கு. அது தான் போகட்டும் என்றால் மாலை நேரத்தில் கிளப்பில்கூட முன்னைப்போல் முனைப்புடன் சீட்டாட முடிவதில்லை. தினமும் பத்து ரூபாய்க்குக் குறையாமல் தோற்கிறேன். சீட்டில் தோற்கிறேமே என்ற மனச் சோர்வு காரணமாகச் சாப்பாடுகூடச் சரியாக இறங்குவதில்லை.

எனவே, தாங்கள் இவ்விஷயத்தில் தலையிட்டு, வீட்டுச் சொந்தக்காரர்கள் குடியிருப்பவர்களுக்குத் தொல்லை கொடுக்காதவண்ணம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி கலந்த வணக்கங்கள்.

என்றும் தங்கள் அன்பு மறவா,
தியாகராசு

சட்டமன்றத்தில் அமைச்சர் மக்களன்பன் முழங்குகிறார் :

''இது ஏழைகளது அரசு. எளியவர்களது நலம் விழையும் அரசு. அவர்களது நலன்களைப் பேணிப் பாதுகாக்க இந்த அரசு எதுவும் செய்யும். இந்த அரசின் நல்லெண்ணத்தை எடுத்துக்காட்டும் வகையில், 'வாடகை வீடுகளில் குடியிருப்பவர்கள் மூன்று வருடங்களுக்கு மேல் வாடகை கொடுக்காமல் இருந்திருப்பார்களேயானால், அந்தப் பழைய பாக்கியை இப்போது வீட்டுச் சொந்தக்காரர் கேட்பதற்கு உரிமையில்லை' என்று தெளிவாக்கும் சட்டம் ஒன்றையும் இங்கே உங்கள்முன் சமர்ப்பிக்கிறேன். ஏழை எளியவர்களின் நல்வாழ்வினைக் கருதி, இந்தச் சட்டத்துக்கு உறுப்பினர்கள் பெருமளவில் ஆதரவு தருவார்கள் என்று நம்புகிறேன்!''

அவரது நம்பிக்கைப்படியே அப்படியொரு சட்டம் நிறைவேற்றப்படுகிறது.

***

கிழட்டுப்புலிப்பட்டி
14—4—72

அன்புக்குரிய பண்பாளர் அமைச்சர் மக்களன்பன் அவர்களுக்கு,




தோற்றவர்களின் வெற்றி!

தேர்தலில் தோற்றுப்போன 20 எம். பி.க்கள் இன்னமும் டெல்லியில் அரசாங்கத்தில் கொடுக்கப்பட்ட வீடுகளைக் காலி செய்யாமல் காலம் கடத்துவதில் வெற்றி பெற்றுள்ளார்கள். அவர்களில் இருவர் முன்னாள் அமைச்சர்கள்! அதுமட்டுமல்ல; அவர்கள் இன்னும் நிறைய வாடகை பாக்கி (ஒன்றரை லட்ச ரூபாய்) தரவேண்டியிருக்கிறது!

- ஹிந்துஸ்தான் டைம்ஸ்

★



வெளியே வராமலேயே பழைய மாடலாக ஆகிவிட்ட ஒரே கார் நமது அரசு தயாரிக்கும் ஒரே கார்.

ஆதாரம்: ஜே.எஸ். தகவல்: 'பாலி'

வணக்கமும், வாழ்த்துக்களும்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு தாங்கள் இவ்வூருக்கு வருகை தந்து எங்களையெல்லாம் கௌரவித்தது தங்களுக்கு நினைவிருக்கும் என்று நம்புகிறேன். ஒரு முக்கியமான விஷயத்தைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வரவே இந்தக் கடிதம்.

இவ்வூரில் பெரிய கடைத் தெருவில் இரண்டு மளிகைக் கடைகள் உள்ளன. ஊர் மக்களில் பெரும்பாலானவர்களுக்கு அவற்றில் பற்று வரவு உண்டு. நான் இரண்டு கடைகளிலுமே பற்று வரவு வைத்துள்ளேன்.

கடந்த ஒன்றரை வருட காலமாக உப்பென்றும் சீனியென்றும், பருப்பென்றும் — நெய்யென்றும் மேற்படி கடைகளிலிருந்து நான் தருவித்ததில் இரண்டு கடைகளுக்குமே ஏகப்பட்ட பணம் பாக்கி நின்றுவிட்டது. ஒவ்வொரு மாதமும் ஏதேதோ சாக்குப் போக்குகள் சொல்லியே சாமான்கள் வாங்கிச் சாப்பிட்டு, கடைக்காரர்களை இதுவரை சமாளித்து வந்திருக்கிறேன். நிற்க.

மேற்படி கடைகளின் உரிமையாளர்களான குருமூர்த்தி என்பவரும் ரவை மாணிக்கம் என்பவரும் எனக்குக் கடந்த சில மாதங்களாக ஓயாத தொல்லை கொடுத்து வருகிறார்கள். அவர்களுடைய ஒன்றரை வருடப் பாக்கியை நான் உடனே கொடுத்தாக வேண்டுமாம்: ''இல்லாவிட்டால் நீதிமன்றத்துக்குப் போவேன்!'' என்று அச்சுறுத்துகிறார்கள்.

இவர்கள் இருவரும் செய்யும் காரியம் எனக்கு நியாயமாகப் படவில்லை. ''ஐயா! மாதம் தவறாமல் நான் லாட்டரிச் சீட்டு வாங்கி வருகிறேன். என்றாவது ஒரு நாள் எனக்கு லட்ச ரூபாய் விழாமல் போகாது. விழுந்தவுடன் உங்கள் பாக்கியைப் பைசா உள்படப் பைசல் செய்துவிடுகிறேன்!'' என்று நான் நியாயமாகச் சொன்னால் அவர்கள் கேட்க மறுக்கிறார்கள். இது போன்ற அக்கிரமம் வேறு எங்காவது நடக்குமா?

தங்களால் இவ்விஷயத்தில் எனக்கு ஏதாவது உதவி கிட்டுமானால் அதை என் பெரும் பேறாகக் கருதுவேன்.

நன்றி.

தங்கள்
கல்வியப்பன்

'' எந்தக் கடைக்காரரும் கடனுக்குச் சாமான் கொடுத்திருந்தால், அந்தப் பணத்தைத் திருப்பிக் கேட்க முடியாது!'' என்று கூறும் சட்டம் ஒன்றைச் சட்டமன்றத்தில் நிறைவேற்றி அப்பால் வாங்குகிறார் அமைச்சர் மக்களன்பன்.

* * *

செம்புரம்
21—5—72

மாமேதை மக்களன்பன் அவர்களுக்கு,

அடியேன் கடலைமுத்து வணக்கம்.

தங்களிடம் ஒரு மாபெரும் அநீதியை எடுத்துக் காட்டவே இந்தக் கடிதம்.

இந்த ஊர் தாசில்தார் நான் வரி கட்ட வேண்டும் என்று வற்புறுத்துகிறார். ஐந்து ஆண்டுகளாக நிலத் தீர்வை கட்டாததற்குச் சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன் என்கிறார். இது என்ன அக்கிரமம்? என் போன்ற ஏழைகளை வரி கட்டச் சொல்லும் சட்டத்தைக் கட்டுப் போகச்செய்யுங்கள் என்று கோரத்தான் இதை எழுதுகிறேன்.

இன்னொன்று. இந்த ஊர் தொகுதி எம். எல். ஏ. உங்கள் கட்சியாம். என்னிடம் வந்து, 'பாதுகாப்பு நிதிக்குப் பணம் தந்தாயா? என் கார் நிதிக்குப் பொருள் தந்தாயா? பிச்சைக்காரர் மறுவாழ்வுக்குக் காணிக்கை சமர்ப்பித்தாயா' என்றெல்லாம் கேட்கிறார். உங்கள் மனுநீதி ஆட்சியில் இப்படியெல்லாம் நடக்கலாமா? உடனே யாருமே நன்கொடைகள் தர வேண்டாம், வரிகள் கொடுக்க வேண்டாம் என்று மசோதா கொண்டு வந்து நிறைவேற்றுங்கள்.

தங்கள் பக்தன்
கடலைமுத்து

அமைச்சர் மக்களன்பன், 'என் பக்தனைக் கைவிடுவேனா?' என்று நீரத்துடன் கிளம்பிக் கோட்டையில் தமிழக அரசு அலுவலகத்தில் தம் அறைக்குள் நுழைகிறார். எந்தவித வரிகளையும் இனி மக்கள் செலுத்த வேண்டாம், வரி செலுத்தும்படி யாரும் கேட்கக் கூடாது; எந்த நன்கொடையும் வசூலிக்கக் கூடாது என்று மளமளவென்று சட்டமொன்றை எழுதுகிறார்.


'இதை நாளையே சட்டசபையில் கொணர்ந்து நிறைவேற்றி என் பக்தன் கடலைமுத்துவைக் காப்பேன்' என்று அவர் தீர்மானித்த சமயம், கட்சித் தண்டல்காரர் ஒருவர் எட்டிப் பார்க்கிறார்.

''நீங்க எழுதினதைத் தோளுக்கு மேலாகப் படிச்சுப் பார்த்தேன். நன்கொடைகள் இல்லேன்னா கட்சி எப்படி நடக்கும்? யாரும் வரி தரலேன்னா மந்திரிக்குச் சம்பளம், கார் அலவன்ஸ் முதலியன எப்படி கிடைக்கும்?'' என்று கேட்கிறார்.

''ஆகா! பழக்கம் காரணமாக இருக்கும் சட்டம் இயற்ற முன்வந்தேன்! தக்க சமயத்தில் ஞாபகப்படுத்தினீர். நீட்டிய மரத்திலேயே கூர் பார்க்கிறான் கடலைமுத்து. நல்ல வேளை பிழைத்தேன்!'' என்று சொல்லித் தாம் நிறைவேற்றுவதற்கென எழுதி வைத்த மசோதாவைச் சுக்கு நூறாகக் கிழித்துப் போடுகிறார் அமைச்சர் மக்களன்பன்.



கரணம் தப்பினுல் மரணம்




முதல் பரிசு ரூ. 50/-

பெறுபவர்

டாக்டர்

எஸ். பரமசிவன்







பரிவுப் பரிசுகள்


தலா ரூ. 10/-

பெறுவோர் :

திரு கே. எஸ். பழனி
திரு கே. என். கே. மூர்த்தி
திரு என். வி. ஆர். ஸ்வாமி
திரு டோனி அன்ஸெலெஸ்

பிளாஸ்டிக் மரத்தின் கதை!

சிறிது காலத்துக்கு முன்னர் லாஸ் ஏஞ்செல்ஸ் நகராட்சி அந்நகரில் இரண்டு மைல் நீளமுள்ள சாலை யொன்றில் பிளாஸ்டிக் மரங்களையும் செடிகளையும் நட்டது. இயற்கையான மரங்கள், ஆலைப் புகை முதலிய கழிவுப் பொருள்களால் பாழ்பட்டு நசித்து விடுகின்றன என்ற காரணத்தாலேயே அந் நகராட்சி பிளாஸ்டிக் மரங்களை நட்டது. ஆனால் இந்தப் பிளாஸ்டிக் மரங்களுக்கும் ஆபத்து வந்து விட்டது. ஏனென்றால் லாஸ் ஏஞ்செல்ஸ் நகரவாசிகளுக்கு இந்தப் பிளாஸ்டிக் மரங்களைப் பிடிக்கவில்லை. எனவே அவர்கள் பல மரங்களுக்குத் தீ வைத்தனர். பலவற்றை வெட்டியும் தீர்த்து விட்டனர்! நகராட்சி மீண்டும் புதிய மரங்களை நட்டது. அவற்றுக்கும் இதே கதிதான் ஏற்பட்டு வந்தது. எனவே பிளாஸ்டிக் மரங்களைக் கொண்டு நகரை அழகுபடுத்தும் யோசனை கைவிடப்பட்டது. எனினும் முதலில் மேற்கொண்ட பரிசோதனைக்கே 74,504 டாலர்கள் செலவாகி விட்டன; திரும்பவும் மரங்களை நட்ட செலவு வேறு ஆகிவிட்டது!



ஆதாரம் : நியூடைம்ஸ்

பி. பி. ஸி.யில் நடந்தது என்ன?

சில நாட்களுக்கு முன் லண்டன் பி. பி. ஸி. ரேடியோ ஒலிபரப்பில் 'இத்துடன் லண்டன் செய்திகள் முடிவடைந்தன என்று சொன்ன பிறகு "எனக்கும் கொஞ்சம் கொடேன்" என்று ஒரு பெண்ணின் குரலும் தொடர்ந்து கலகலவென்று பெண்களின் சிரிப்பொலியும் கேட்டன. அவ்வளவு தான்; "எனக்கும் கொஞ்சம் கொடேன்" என்று யார் பேசினார்கள்? என்ன பேசினார்கள்?" என்று கேட்டு ஆயிரக்கணக்கான டெலிபோன் கால்களும் கடிதங்களும் ரேடியோ நிலையத்துக்கு வந்தன. 'நியூ ஸ்டேட்ஸ்மென்' பத்திரிகை 'ரேடியோ நிலையத்தில் என்ன நடந்திருக்கும்?' என்று கற்பனைப் போட்டி ஒன்றை வாசகர்களுக்கு வைத்தது. உண்மையில் என்ன நடந்தது தெரியுமா?

செய்தியைப் படித்து முடித்ததும் அந்தப் பெண் ஸ்விட்சை அணைக்க மறந்துவிட்டு, அருகில் சாக்லேட் தின்று கொண்டேயிருந்த அவளது உதவியாளரான இன்னொரு பெண்ணிடம் "எனக்கும் கொஞ்சம்கொடேன்" என்று கேட்டிருக்கிறார். அதுவும் ஒலி பரப்பாகி விட்டது!


--- பாபு




முடியுமோ மோகன ரோஜா மலர்ச் செண்டு
கொண்டு
குடும்பத்தை தினமும் மகிழ்வூட்ட முடியுமோ?
Binaca
முடியுமே புதிய பினகா ரோஸ்
டால்க் மூலம் முடியுமே
பினகா
டால்க்—குடும்பம் முழுக்க விரும்பும்
ULKA-CTP-35 TAM



தலைமைவகித்த ஆனந்த ராவ், ஆடிடோரியம் திறந்த சென்னை பிரதம நீதிபதி வீராசாமி, விடுதியின் சொந்தக்காரர் ராமசாமி உடையார்



ஏற்றமிகு ஏர்க்காடு!

தமிழ் மக்களிடையே கோடை வாசஸ்தலம் என்றால் ஊட்டியும் கொடைக்கானலும்தான் நினைவு வரும். ஆனால் இவைகளுக்கு ஈடாகத் திகழக்கூடிய இன்னோர் இடமும் நம் தமிழ் நாட்டில் இருக்கிறது. அதுதான் ஏர்க்காடு. உள்ளத்தை மகிழ்விக்கும் இயற்கைக் காட்சிகளுக்குக் குறைவில்லை. சேலத்திலிருந்து முப்பத்திரண்டு கிலோமீட்டர் தொலைவில் கடல் மட்டத்திலிருந்து 4,500 அடி உயரத்தில் அமைந்துள்ளது ஏர்க்காடு. கோடைக் குடியிருப்புக்கு ஏற்ற அழகான இடம். ஆனால் விளம்பரம் இல்லாமையால் இந்த இடம் ஊட்டி கொடைக்கானலைப் போலப் பிரபலமடையவில்லை. '' தங்கி இருக்க வசதிகள் இல்லாமையால் அதிகப் பிரயாணிகள் அங்கு போவதில்லை.'' – ''உல்லாசப் பிரயாணிகள் அதிகம் பேர் வராததால் வசதிகள் பெருகவில்லை.''–இப்படி இரு விதமான வாதங்கள் ''கல்யாணம் செய்தால் பைத்தியம் தெளியும், பைத்தியம் தெளிந்தால்தானே கல்யாணம் செய்யலாம்'' என்று சொல்லப்படும் பழமொழியை நினைவுபடுத்துகின்றன. இச்சூழ்நிலையில் உல்லாசப் பயணிகள் தங்கும் உயர்ந்த விடுதி ஒன்றைக் கட்டுவித்து ஏர்க்காட்டில் பயணிகளுக்கு வசதிகளைப் பெருக்க முன்வந்திருக்கிறார் திரு ராமசாமி உடையார் அவர்கள். சேலம்வாசியான இவர் பெரிய தொழிலதிபர். இவருக்கு ஏர்க்காட்டில் எஸ்டேட் இருக்கிறது. எம். எல். ஏ.வாக ஐந்து வருஷங்கள் இருந்திருக்கிறார். ஆயினும் இதெல்லாவற்றையும்விட திரு ராமசாமி உடையாருக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய விஷயம் ஏர்க்காட்டின் வளர்ச்சியும் அது தமிழ் நாட்டின் சிறந்த ஒரு சுற்றுலாப் பயணிகளின் கேந்திரமாவதும்தான்.

ஊட்டி, கொடைக்கானல்போலவே இங்கும் ஏரி இருக்கிறது. ஜெர்மனியைச் சேர்ந்த பாதிரியார் ஒருவரால் 1870ல் வெட்டப்பட்டது இந்த ஏரி. 'மரங்கள் சூழ்ந்த ஏரி' என்ற பெயரே ஏர்க்காடாகி இருக்கிறது. (ஏரி-காடு) இருபது கொண்டை ஊசி வளைவுகளைக் கொண்ட பக்காவான மலைப் பாதை – வழி. வழியெல்லாம் காப்பி, ஆரஞ்சுத் தோட்டம், காட்டு மலர் மணம் கண்கொள்ளாக் காட்சிகள். 'லேடீஸ் ஸீட்' என்ற ஒரு முகப்பு இயற்கை வனப்பு முழுவதையும் கண்டுகளிக்கத் தக்க இடம். ஏரி நிரம்பியதும் அதிலிருந்து பெருகும் அதிகப்படியான தண்ணீர் ஒன்றரை மைல்கள் ஓடி நூறு அடி உயரத்திலிருந்து கீழே விழுகிறது. இதுவே கிள்ளியூர் நீர்வீழ்ச்சி. பகோடா பாயிண்ட், சன்யாசி மலை, ஆர்தர் ஸீட், காவேரி முனை, சேர்வராயன் கோயில் என்று ஏர்க்காட்டில் கண்டு களிக்க வேண்டிய இடங்களுக்குப் பஞ்சமில்லைதான்.

உடையார் 'ஹோட்டல் சேர்வராய்' என்ற அழகான விடுதியை மிகக் கலையுணர்வோடு அமைத்திருக்கிறார். மூன்றாண்டுகளாக இது இயங்கி வருகிறது. ஆண்டுக்கு ஆண்டு அதில் பல அபிவிருத்திகளைச் செய்து கொண்டு வருகிறார். இந்த ஆண்டு அவரது மறைந்த தம்பி திரு வைத்தியலிங்கம் அவர்களின் நினைவாக ஒரு பெரிய 'ஆடிடோரியம்' அமைத்து, அதைச் சென்னை பிரதம நீதிபதி திரு வீராசாமி அவர்களைக் கொண்டு திறக்கச் செய்திருக்கிறார். உல்லாசப் பயணிகளை வருக வருக என்று அழைக்கிறது ஏர்க்காடு.

— 'கௌசிகன்'

அம்மா

ரா. கணபதி

34. அமெரிக்க குருவாயினும் அமரிக்கைப் பிள்ளைதான்

அரக்கர் வதம் முடித்து, அயோத்தி திரும்பி வந்து நமஸ்கரித்த ராம லக்ஷ்மணர்களை அவர்களது தாய்மார் கண்ணால் காண முடியாமல் நீர் மறைத்தது. பிள்ளைகளை ஸ்பரிசித்து அந்த சுகத்திலிருந்தே அவர்கள் திரும்பி வந்ததை உணர்ந்தனர்.

— ரகுவம்சம் 14. 2

அம்மாவின் செல்ல நரேன் உலகம் போற்றும் ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமியாகத் திரும்பி விட்டார். அவர் வேதாந்த தர்மத்தைப் பாரெங்கும் பரப்பி, ராமகிருஷ்ணரின் திருநாமத்தை மேல்நாட்டினரிடம் உலவ விட்டதில் அம்மா அடைந்த ஆனந்தம் பெரியதுதான். 'சான்றோன் எனக் கேட்ட தாயாக'ப் புளகித்தாள். ஆனால் அதைவிட வேறொன்றிலேயே அவளுக்கு அதிக இன்பமும், திருப்தியும், நிம்மதியும் உண்டாயின. விவேகாநந்தரின் நாவசைந்தால் டாலர்களைக் கொட்டக் கூடிய பக்தர்கள் ஏற்பட்டுவிட்டனர். "அப்பாடா, இனி என் குழந்தைகள் பரதேசிகளாகத் தவிக்க வேண்டாம். என் பிரபுவை அண்டி வந்த குழந்தைகள் ஆண்டிப் பண்டாரங்களாகத் திரியறதிலே துளிக்கூட முகம் சுளிக்கவேமாட்டா என்கிறது வாஸ்தவம். ஆனால் அந்தத் தெய்வக் குழந்தைகளுக்கு வயிறு ரொம்ப ஆகாரம், மானத்தைக் காப்பாற்ற வஸ்திரம், குளிர் வெயிலுக்குக் காப்பா ஒரு குடிசைக்கு எந்நாளும் குறைவு இருக்கப்படாதுன்னு டாகூரை ஓயாமல் வேண்டிண்டே இருந்தேன். காசி, பிருந்தாவனத்திலே வசதியா இருக்கிற சந்நியாசிகளைப் பார்க்கறச்சே எல்லாம் என் தரித்திரக் குழந்தைகளை நினைச்சுத்தான் அழுவேன். கடைசிலே டாகூர் என் பிரார்த்தனையைக் கேட்டுட்டார். நரேன் மூலமாகக் குழந்தைகள் எல்லாருக்கும் நியாயமான தேவைகளை எல்லாம் பூர்த்தி பண்ணிட்டார்" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினாள் அம்மா.

விவேகாநந்தர் உள்ளிட்ட ராமகிருஷ்ண மட சந்நியாசிகளுக்காக இச்சமயத்தில் அம்மா செய்துவந்த தியாகம் அற்புதமானது.

தங்களால் சமாளிக்க முடியாத பாபாத்மாக்களான அடியார்களையும், மடத்தின், கட்டுப்பாட்டுக்கு அடங்காத ஊழியர் பிரம்மசாரி ஆகியோரையும் அந்தத் துறவிப் பசங்கள் அம்மாவிடமே அனுப்பி வைக்கலானார்கள். அன்பையும் அநுதாபத்தையும் பொழிந்தே அவர்களைச் சீர்திருத்தி விடுவாள் அம்மா. பிரேமாநந்தர் அம்மாவைக் குறித்துச் சகாக்களுக்குச் சொன்னார்: "நம் புனித மாதாவைப் பூரணமாகப் புரிந்து கொண்டவர் யார்? அவளிடம் மகோந்நதத்தின் இழையைக் கூடக் காண முடியாது. டாகூரிடமாவது வித்யாசக்தி வெளிப்பட்டது. ஆனால் அம்மா! அவளது ஞான பூரணம் மறைந்தே உள்ளது. இப்படிச் சக்தியை அடக்கியதே மகா சக்தியாக இருக்கிறது! ஜெய் மாதா! ஜெய் மாதா! ஜெய் மகாசக்தி மாதா! நம்மால் செரிக்க முடியாத விஷ ஜந்துக்களை எல்லாம் அம்மாவிடம் அனுப்பி வைக்கிறோம். அவள் அதையும் மடியில் எடுத்துப் போட்டுக் கொள்கிறாள். எல்லையற்ற சக்தியோடு கூடிய உவமையற்றதயை! ஜெய் மாதா! அவள் எங்கே, நாம் எங்கே? டாகூரும்கூட இப்படி விஷத்தை எல்லாம் வாரி எடுத்துக் கொண்டு நாம் பார்த்ததில்லையே! அவர் தமது அத்தியந்த சீடர்களை எத்தனை சோதனைகளுக்குப் பிறகு எத்தனை ஜாக்கிரதையோடு ஏற்றுக் கொண்டார்? இங்கு அம்மாவின் சந்நிதியில் என்ன பார்க்கிறோம்? அற்புதம்! அவள் அனைவருக்கும் தஞ்சம் தருகிறாள். அத்தனை கைகளிலிருந்தும் விஷத்தை எடுத்து உண்டு அப்படியே ஜீரணித்துக் கொள்கிறாள். ஜெய் மாதா!"

ஆதியில் ஈசுவரன் விஷத்தை உண்டபோது, வேண்டாம் எனத் தடுத்துத் தொண்டையைப் பிடித்தாள் தேவி. இப்போது அதற்குப் பிரதியாக ஈசுவரனும் ஏற்கத் தயங்கிய விஷத்தை, தான் மகிழ்ச்சியுடன் ஏற்றாள் போலும்! ராமகிருஷ்ணரிடம் செல்லத் தயங்கியிருக்கக் கூடியவர்களும் அம்மாவிடம் வரத் தொடங்கினர்.


மரம் பழுத்தால் வௌவாலை வா என்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங்கில்லை —
கரந்தமுதம்
கற்று தரல்போல் கரவா தளிப்பரேல்
உற்றார் உலகத் தவர்.

தனது அமுத தரிசனமும், அமுத நல்லுபதேசமும், அமுத மந்திரோபதேசமும் தந்து பலரது விஷத்தை வாங்கிக் கொள்ளலானாள் அம்மா. ராமகிருஷ்ணர் அவளுக்கென்று குறிப்பிட்டிருந்த அவதாரப் பணி மல்லிகை மலர்வது போல் பொல்லென்று விகசிக்கலாயிற்று.

டாகூர் மறைந்தபோது அவளுக்கு வயது முப்பத்து மூன்றுக்குச் சிறிது குறைவு. அவர் போனபின் முப்பத்து மூன்று வருஷங்களுக்குச் சிறிது அதிகம் ஜீவித்தாள். இதில் முதல் பதினோராண்டு குடத்துள் விளக்கு; அடுத்த பதினோராண்டு கூடத்து விளக்கு; கடைசிப் பதினோராண்டு குன்றின்மேல் விளக்கு.

கல்கத்தாவில் அவதாரப் பணியைத் தொடங்கியபோதே அவளிடம் ஓர் அரிய மாறுதல். கிராம மக்களுக்குத் தனிக் கொச்சை அகராதி உண்டு. மேலும் வார்த்தைகளின் இறுதியில் இழுத்துப் பிராலபம் போடுவார்கள். அம்மாவும் இப்படிப் பேசியவள்தான். இப்போது, கல்கத்தா நகர வாசிகள் அவளை வந்தடைந்தபோது, அழகாக அந்த நாகரிக பாணியிலேயே பேசினாள். கிராமத்துக்குப் போனால் அங்கே இந்த மேட்டிமையைக் காட்ட மாட்டாள். பழைய கொச்சைக்கே திரும்பி விடுவாள்.

ஆடவர்களை அம்மா அதிகம் அனுமதிக்காததால் பெண் பக்தைகள் நிறைய வந்தனர். அவர்களுக்கு அம்மா பெரிய ஆறுதலாக இருந்தாள். அவர்களுக்குத் தெரிந்திருந்த மற்ற சந்நியாசிகளையும் ஞானிகளையும் போலன்றி அம்மா அவர்களிடம் சுமுகமாக, சுலபமாக, சகஜமாக, சரஸமாக, சரளமாகப்



பழகியது அவர்களுக்குப் பாலைவன ஊற்றாக இருந்தது. வந்தவர்களுக்கெல்லாம் உணவுபசாரம் செய்த மகாபுருஷி அல்லவோ அம்மா? அதோடு, முதல் முறையே பக்தர்களின் வீட்டு விஷயங்களைச் சொந்த சமாசாரம் போன்ற நெருக்கத்துடன் விசாரிப்பாள். பக்தையிடம், '' உங்கள் நாட்டுப் பெண் எங்கே, உங்கள் பேரன் எங்கே?'' என்று கேட்க மாட்டாள். ''என் நாட்டுப் பெண் எங்கே, என் பேரன் எங்கே?'' என்றே கேட்பாள். ''சரியான வெயிலில் வந்திருக்கேளே !'' என்று சொல்லிக் கொண்டு, தானே அவர்களுக்கு விசிறி விடுவாள். ''ஓய்வு எடுத்துக்கோங்கோ'' என்று சொல்லித் தன் தலையணையை அவர்களுக்கு எடுத்துப் போடுவாள். சமய சரித்திரமே கண்டிராத நேசநெருக்கத்தைப் பெருக்கவிட்ட அம்மாவிடம் அடியார்கள் திரண்டு வந்ததில் அதிசயம் என்ன ?

விவேகாநந்தருடன் நிவேதிதா தேவியும், ஸ்ரீமதி ஓல்புல், குமாரி மக்லியாட் ஆகிய மேல்நாட்டு சிஷ்யைகளும் வந்திருந்தனர். இவர்களை அம்மா தன் புத்திரிகளாகவே வரவேற்றாள். அம்மா அவர்களோடு சேர்ந்து அமர்ந்து உண்டதை அறிந்து விவேகாநந்தரின் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. அம்மாவுக்கு ஆங்கிலம் தெரியாது. மொழி பெயர்ப்பாளரை வைத்துக் கொண்டு பேச்சு நடக்கும். ஆனால் அதுவும் இரண்டாம் பட்சம்; அன்புக்கு மொழி அவசியமில்லை அன்றோ ?

'' பகவான் விவேகாநந்தருடைய தர்மபுத்திரி...ஸ்ரீமதி நிவேதிதா தேவி'' என்று மகாகவி பாரதியார் போற்றும் மாதரசி நம் அம்மாவின் அசட்டுக் குழந்தை—''கூகி''—என்றே தன்னைச் சொல்லிப் பெருமை கொண்டாள்.

'' ஸ்ரீ ராமகிருஷ்ணர் விளக்கிய ஆதரிச பாரத ஸ்திரீ தர்மத்தைப் பூர்த்தி செய்யும் கடைசி வார்த்தை அம்மாவே'' என்பாள் நிவேதிதை.

'' பாரத ஸ்திரீ தர்மம்'' என்று அவள் சொன்னது குறிப்பிடத்தக்கது. அம்மாவிடம் நமக்குள்ள பக்தி காரணமாக, **உலகுக்கெல்லாம்** அவளே பெண்குல உதாரணம் என்று சொல்லத் தோன்றலாம். அவளது அன்பு, உழைப்பு, எளிமை, ஆன்மிகம் இவை உலகப் பெண் குலம் முழுதுமே பின்பற்ற வேண்டியது என்பதும் உண்மைதான். இருப்பினும் இந்தியச் சூழ்நிலையில் பெண்களுக்கென விசேஷமாக ஒரு கற்பு நெறியும், அடக்கம், நாணம்—இவையும் தொன்றுதொட்டு வளர்க்கப்பட்டு வந்திருக்கின்றன. இவற்றையே அம்மா சிறப்பாக மூர்த்திகரித்தாள்.

ஒரு நாள் அம்மா, ''உனக்காகத்தான் இதைப் பண்ணினேன்'' என்று கூறித் தனது ஓயாத அலுவல்களுக்கிடையே கம்பளி நூலால் அலங்காரப் பின்னலிட்டுச் செய்த விசிறியை நிவேதிதைக்கு அளித்தாள்.

நிவேதிதை நெகிழ்ந்து போனாள். அந்த விசிறியைச் சிரசில் ஒற்றிக் கொண்டாள். மார்போடணைத்துக் கொண்டாள். ''என்ன நேர்த்தி, என்ன கவர்ச்சி!'' என்று பாராட்டினாள்.

நிவேதிதை ஓர் அழகிய நிக்கல் பேடகத்தை அம்மாவுக்கு அளித்தாள் — அன்பு நிவேதனமாக. அதிலே அம்மா ராமகிருஷ்ணரின் கேசத்தைப் போட்டு வைத்தாள். நிவேதிதைக்கு நெஞ்சு நிறைந்தது. '' அம்மா, நாங்கள் பூர்வ ஜன்மத்திலே ஹிந்துக்களாகத்தான் இருந்தோம். மேல்நாடுகளில் குருமஹராஜின் உபதேசத்தைப் பரப்ப வேண்டுமென்றே இப்போது அங்கே பிறந்திருக்கிறோம்'' என்றாள்.

இன்னொரு முறை அஸ்ஸாம் பட்டுத் துணி ஒன்றை அம்மாவுக்கு அளித்தாள் நிவேதிதை. அம்மா தனக்கு அன்புடன் வழங்கப்படும் அளிப்புக்களை எந்நாளும் போற்றி வைத்திருப்பாள். ''பண்டம் முக்கியமில்லை. அது ஏற்படுத்தற ஞாபகம்தான் முக்கியம்'' என்று அழகொழுகச் சொல்வாள். வெகு காலத்துக்குப் பின் — நிவேதிதை மண்ணுலகைவிட்டுப் பொன்னுலகு புகுந்தபின் — ஒரு நாள் கௌரீசுவரானந்தர் அம்மாவின் பெட்டியிலிருந்த துணிமணிகளைக் காயப் போடும்போது, மட்கிக் கிடந்த இந்தப் பட்டுத் துண்டை வெளியில் எடுத்தார். ''அம்மா! இது அன்னுகந்தலாயிடுத்து. வெளியிலே எறிஞ்சுட வேண்டியதுதான்'' என்றார். ''குழந்தே, அப்படிச் சொல்லாதேடா! அது நிவேதிதா கொடுத்தது. எத்தனை பிரியத்தோடு கொடுத்தா? எங்கே, அதைக் கொண்டா'' என்றாள். ஒரு குழந்தையை வாங்கிக் கொள்வது போல் அதை வாங்கிக் கொண்டாள். அப்பளமாக நொறுங்கியிருந்த மடிப்புக்களிடை பூச்சி அரிக்காமலிருக்க ஏதோ வாசனைப் பொடியைக் கவனமாகத் தூவினாள். ''இந்தா, ஜாக்கிரதையாப் பெட்டியிலே வை'' என்று கொடுத்தாள்.

நிவேதிதா காலமானபோது அம்மா ஆறாத் துயரம் அடைந்தாள். அவளது கண் மட்டும் அழவில்லை. உள்ளத்தின் உள் பகுதியே அழுதது. '' 'மகாத்மா மாண்டா அந்தராத்மாவே அலறும்'னு

> உலக வாழ்வின் தத்தளிப்பில் இருந்து கொண்டே ஆத்ம சாந்தி காண்பது கடினம். எனவே, அனைவரும் அவ்வப்போது உலக ஆரவாரத்தைவிட்டு, குறைந்தபட்சம் பன்னிரண்டு நாட்களாவது வேறெந்த சிந்தையுமின்றிச் சாந்தமான ஓரிடத்தில் தனிமையாக இருந்து பக்தியில் பழக வேண்டும். அப்போதுதான் மனம் பகவானிடம் தோய்ந்து நிற்கும். பாலைப்புரையிட்ட பாலைக் குலுக்கிக் கொண்டே இருந்தாலோ, அல்லது அந்தப் பாலைப் பாலைக்குப் பாலை மாற்றிக் கொண்டேயிருந்தாலோ அது தோய்ந்து தயிராவதில்லை அல்லவா? உலக விஷயங்களில் தாவிக் கொண்டேயிருக்கும் மனத்திலும் பகவான் தோய்ந்து உறைவதில்லை.
>
> பரமஹம்ஸ ராமகிருஷ்ணர்

பழமொழி சொல்லுவாளே, எத்தனை உண்மை!'' என்றாள்.

ஒரு நாள் கிறிஸ்துவத் திருமணச் சடங்கை விவரிக்குமாறு மேல் நாட்டு சிஷ்யைகளிடம் அம்மா கேட்டாள். அம்மா அன்பு மயமாக, இன்ப மயமாக அமர்ந்திருந்ததால் அந்தப் பெண் குழந்தைகளுக்கு மிகுந்த உத்ஸாகமாயிற்று. ஒரு சிறிய நாடகமாகவே தங்களது திருமணச் சடங்கை நடத்திக் காட்டினர். ஒருத்தி மணமகன் ஆனாள். இன்னொருத்தி மணமகள் ஆனாள். மூன்றாமவள் திருமணம் நடத்தி வைக்கும் பாதிரி ஆனாள். ''பண்ணி வைக்கிற சாஸ்திரிகள்'' என்றாள் அம்மா சிரித்து.

'சாஸ்திரிகள்' கிறிஸ்துவத் திருமணத்தில் தம்பதி செய்யும் சத்தியப் பிரதிக்ஞையை ஓதினார்: ''மேன்மையுற்ற போதும் தாழ்வுற்ற போதும், செல்வம் மிகும்போதும் வறுமை வந்துற்ற போதும், ஆரோக்கியத்திலும் பிணியிலும், — மரணம் நம்மைப் பிரிக்கிற வரையில் நாம் ஒன்று சேர்ந்திருப்போம்.''

இந்த வாக்குகளைக் கேட்டு அம்மா குதூகலித்துப் பூரித்தாள். ''மறுபடி சொல்லுங்கள், மறுபடி சொல்லுங்கள்'' என்று பன்முறை அதைக் கூறக் கேட்டு மகிழ்ந்தாள். ''ஆஹாஹா! என்ன தர்ம மயமான வார்த்தைகள்!'' என்றாள்.

நிவேதிதை மேரியன்னையைத் தியானித்தபோது நம் அம்மாவின் முகமே அவளுக்கு மறுபடி மறுபடி தோன்றியதாம்.

ஸ்ரீமதி ஒல்புல், விவேகானந்தரின் அமெரிக்க சிஷ்யர்களில் முக்கியமான இன்னொருத்தி. இவள்தான் நம் அம்மாவைப் புகைப்படத்துக்கு அமருமாறு வற்புறுத்தியவள். நிவேதிதா அம்மாவின் சேலையை அவள் திருமேனி படிய நீவிவிட்டு, முக்காட்டுக்குள் மூழ்குவதிலேயே முனைப்பாக இருந்த அவளது சாந்த வதனத்தைப் பிடிவாதமாக வெளிப்படச் செய்தாள். கோலாப்—மா அம்மாவின் முதுகுப் புறத்தில் தொங்கும் நீண்ட கேசத்தைப் படத்தில் விழச் செய்வதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தாள். நிவேதிதா அந்தக் கூந்தலை எடுத்து அம்மாவின் முன் புறமாக நீள நெடுகப் படிந்து விழுமாறு செய்தாள். அம்மாவும் 'பரப்பிரம்மம், ஜகந்நாதம்' என்று அவர்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் இசைந்து உட்கார்ந்திருந்தாள். அப்போது, அதாவது 1898ல், எடுத்த படம்தான் இப்போது பெருமனையில் எங்கும் காணப்படுவது. அப்போது அம்மாவுக்கு வயது நாற்பத்தைந்து.

நிவேதிதை பெண்களுக்காக ஒரு பள்ளியை கல்கத்தா போஸ்பாரா சந்தில் ஆரம்பித்தபோது அம்மா மகிழ்ச்சியுடன் அதைத் திறந்து வைத்தாள். பெண்களுக்கு எழுத்தறிவு அவசியம் என்பது அம்மாவின் தீர்மானமான கருத்து. அக்காலத்தில் பெண்கள் பள்ளிக்குப் போனால் உலகமே புரண்டு விடும் என்று பயந்தவர்கள் உண்டு. அம்மா புரட்சி மனப்பான்மை அற்றவள் எனினும் தன் மனத்துக்கு நிச்சயமாகச் சரியென்று தோன்றுவதைத் தயங்காமல் செய்வாள் என்பதற்கு இந்தப் பள்ளியை அவள் திறந்து வைத்தது ஒரு சான்று. பள்ளியை மௌனமாகவே திறந்து வைத்தாள். சொற்பொழிவு எதுவும் நிகழ்த்தவில்லை. அம்மா தன் ஆயுள் முழுதும் மேடை ஏறிப் பேசியதில்லை.

ஸ்வாமி விவேகானந்தர் 1898 அக்டோபர் மாதம் பேலூருக்குத் திரும்பினார். துர்கா பூஜை கொண்டாடப்பட்டது. ஸ்வாமிஜிக்குக் காய்ச்சல் கண்டிருந்தது. எனினும், பூஜையின் இரண்டாம் நாள் பிரத்தியட்ச துர்க்கையை வணங்க விவேகானந்தர் மற்ற குருபாய்களுடன் அவளது இருக்கைக்குச் சென்றார். இதுதான் அவர் அமெரிக்க விஜயத்துக்குப் பின் அம்மாவிடம் முதன் முறையாக வருவது. அவரது இதயம் எப்படி அதைத் தாங்க முடியாமல் நைந்து கிடந்ததோ அதனினும் நைந்திருந்தது அம்மாவின் இதயம். அவளுடைய சொந்த நரேன் வருகிறான் என்றபோது, யாரோ அசலார் வந்தால் ஓர் அச்சமும் பயிர்ப்பும் கொள்வாளே அதுபோல் உணர்ந்தாள். தலையிலிருந்து கால் வரையில் சேலையை இழுத்து மூடிக் கொண்டு ஒரு மூலையில் ஒடுங்கி நின்றாள் தேவி. தன் ஸ்வரூபத்தைத் திடுமெனக்

கண்டால் அந்தப் பிள்ளை திணறி விடுமென்றே அப்படிச் செய்தாளோ?

அமெரிக்க மாகண்டத்தையும், பாரத உப கண்டத்தையும் தன்னிடம் புரட்டிக் கொண்ட ஞான சிம்மமான ஸ்வாமிஜி பெண் மான் குட்டி என மருண்டு வந்தார் அவள் முன்னால். அப்படியே சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டார். அவர் எழுந்தபோது அம்மாவால் தன் அம்மாத்துவத்தைத் தடுக்க முடியவில்லை. அருமைப் பிள்ளையின் தலையைத் தொட்டுக் கோதினாள். ஆசி சொன்னாள். ஆனால் அவள் குரல் அவளுக்குள்ளேயே ஒடுங்கிக் கொண்டது. ஸ்வாமிஜி சற்றுத் தொலைவில் சென்று நின்றார். அம்மா அவரது சௌக்கியத்தைப் பற்றி வினவிய ஓரிரு வார்த்தைகளையும், அருகில் இருந்த கிருஷ்ணலால் தான் கேட்டு, விவேகாநந்தருக்கு உரக்கக் கூறினார்.

''காச்மீரிலே எல்லாம் சௌகரியமாயிருந்துதா? டாகூர் கிருபையிலே உடம்பு சரியா இருக்கியா, அப்பனே!'' என்று அம்மா வினவியதுதான் தாமதம், விவேகாநந்தர் பழைய செல்லப்பிள்ளையாக மாறிவிட்டார். ஞான மலையானவர் பச்சைப் பாலகனாகிப் பேசினார் :

''போ, அம்மா ! உன் டாகூர் லக்ஷணத்தை உன்கிட்ட சொல்லாமல் வேறே யாருகிட்டே சொல்வேன் ? கேட்டுக்கோ! காச்மீர்லே என்கிட்ட ஒரு சாதாரண பக்கிரிக்கு அசூயை வந்துடுத்து. 'வயிற்று உபாதி வந்து நீ மூணு நாளிலே நீ இங்கே யிருந்து கிளம்பாட்டாப் பாரு'ன்னு என்னைச் சபிச்சான். அவன் சொன்ன மாதிரியே எனக்கு வயிற்று நோய் வந்து தவிச்சேன். அந்த இடத்தைவிட்டே ஓடோடி வந்துட்டேன். உன் டாகூர் இந்த அல்பப் பக்கிரிகிட்ட ஒண்ணும் பண்ணிக்க முடியலே'' என்றார்.

அம்மா தனக்குள் சிரித்துக் கொண்டாள். மெல்லிய குரலில் அவள் சொன்னதை கிருஷ்ணலால் பலமாக மொழிந்தார்: ''மாந்த்ரீகம், சூனியம், அபிசாரகம் எல்லாம் ஒரு ரகசியமான சாஸ்திரம்டா குழந்தை ! அதுக்கு உரியபடி ஒருத்தர் அதுகளைப் பண்ணினா அது பலன் தரத்தான் செய்யும். அதுவும் ஒரு தர்மப்படி நடக்கிறதுன்னு நாம் அதுக்குத் தலை வணங்கித்தான் போகணும். டாகூரைப் பார்த்ததில்லையா ? ஒரு பல்லி சொல்லுக்குக்கூட அவர் மதிப்புத் தந்தார். யாராவது தும்மினால் காரியத்தை நிறுத்திவிடுவார். ஆனைப்பட்ட ஆதி சங்கரரே சூனிய மந்திரத்துக்குக் கட்டுப்பட்டுத் தம் சரீரம் அவஸ்தைப்படறதுக்கு அநுமதிச்

> வீடு கட்டி முடிந்தபின் சாரத்தைப் பிரித்துவிடுகிறோம். எனினும், முதலில் சாரம் கட்டிக் கொண்டாலே வீட்டை எழுப்ப முடிகிறது. இவ்விதமே சாதனை முடிவில் சடங்கும், உருவ வழிபாடும் அவசியமில்லாமற் போனாலும் இவற்றை வைத்தே ஆத்மிகப் பயிற்சியைத் தொடங்க வேண்டியிருக்கிறது.
>
> பரமஹம்ஸ ராமகிருஷ்ணர்

சார்னு சொல்வாளே! ஹாலதரர் சாபம் கொடுத்ததாலே நம்ம டாகூர் ரத்த வாந்தி எடுக்கலியா? அதேமாதிரிதான், உன் சரீரமும் அந்த சாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டு அவதிப்பட்டிருக்கு.''

''போம்மா நீ என்னமோ சொல்றே! என்னை நான் எப்படிக் கவனிச்சுக்கிறேன் என்கிறது பற்றி இப்போ கேள்வி இல்லே. டாகூர் தம்மையே சாபத்துக்கு ஆளாக்கிண்டதைப் பற்றியும் கேள்வி இல்லே. என்னைச் சாபம் தாக்கினபோது உன் டாகூர் என்னை ஏன் காப்பாற்றலைன்னு கேட்கிறேன்'' என்று அம்மாவிடம் ரோஷத்துடன் கேட்டார்.

அம்மா மலர்ந்து சிரித்தாள், வாய் விட்டுச் சொன்னாள் : ''சரிடா, குழந்தை! டாகூர் கையாலாகாதவர்னே வைச்சுக்கோ. அதுக்காக என்ன பண்ண முடியும்? அவர்கிட்டேயிருந்து நீ மீளறத்துக்கு வழியே இல்லையே! அவர் உன்னைத் தம் பஞ்சகச்சத்தோடே சேர்த்துக் கொசுவிச் சொருகிண்டிருக்காரே!'' என்றாள்.

இச்சரிதத்தில் பிற்பாடு நிகழ்ந்த ஒரு சம்பவத்தையும் இங்கேயே பார்த்து விடலாம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் துர்கா பூஜையை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடு செய்தார் விவேகாநந்தர். ''அம்மா பேரிலேதான் பூஜாசங்கல்பம் பண்ணணும். நாமெல்லாம் காசில்லாத ஆண்டிகள். அம்மாதான் இத்தனைக்கும் யஜமானி. நம்ம பேரிலே பூஜை செய்யக் கூடாது'' என்றார்.

அம்மாவுக்கு அழைப்பு விடுக்கச் சென்றார். இப்போது ஸ்வாமிஜி இரண்டாம் முறை மேல் நாடு சென்று, தாம் முதலில் தூவிய விதைகள் களகளவென முளைத்திருப்பதைப் பார்த்துத் திருப்தியுடன் திரும்பியிருந்தார். முதல் முறை அவர் அந்நியச் சீமை போய் வந்த போது, பேசவொண்ணாமல் உணர்ச்சி மோதலில் சிக்குண்டிருந்த அம்மா இந்த முறை ரஸமாகப் பேசினாள்: ''பார்த்த தர்மத்துக்கே தூதனாகப் போயிட்டு வந்திருக்கே. மகாவீரரை (ஆஞ்சநேயர்)ப் போல் கடல் தாண்டிப் போய்த் தூது

சொல்லி வெற்றி வீரனாக வந்திருக்கே'' என்றாள்.

அவளைவிட அதிநயமாக விடைபகர்ந்தார் விவேகாநந்தர்: ''இல்லையம்மா, நான் மாருதியில்லை; மாருதியைவிட பாக்கியசாலி. மகாவீரனுக்குக் கிடைக்காத உன்னுடை கிருபைஎனக்குக் கிடைச்சுதோன்னோ? அதனாலே, அவருக்கு இருந்த சிரமம் எதுவும் எனக்கில்லை. அவர், தானாக சமுத்திரத்தைத் தாண்ட வேண்டியிருந்தது. என்னையோ நான் எந்தத் தேசங்களுக்குப் போனேனோ. அவாளைச் சேர்ந்த கப்பல்களே சௌகரியமாக அழைச்சுண்டு போச்சு. மகாவீருக்குப் போன இடத்திலே எதிர்ப்பு இருந்தது. ராம துவேஷிகளைப் பார்த்தார். ஆனால் நான் போன இடத்திலே எல்லாம் டாகூர் மகிமை ஜனங்கள் கிட்ட நன்றாகப் பரவியிருந்தது. அவா என்னை அன்போடு ஆர்வத்தோடு வரவேற்று, டாகூருடைய தூதுமொழியைக் கேட்டுண்டா.''

துர்கா பூஜையன்று அம்மா மடத்துக்குச் சென்றாள்.

மௌனத்தின் மதுரமும் மகிமையும் அவளைச் சூழ்ந்திருக்கப் பரம சாந்தையாக ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருஉருவப் படத்தை எடுத்துக் கொண்டு சென்றாள். அங்கோர் இடத்தைத் தன் கையாலேயே பெருக்கி மெழுகிச் சுத்தம் செய்தாள். அங்கு டாகூரின் படத்தை வைத்துப் பூஜை செய்தாள்.

சுற்றிலும் நடந்து கொண்டிருக்கும் கட்டுமான வேலைகளைக் காட்ட விவேகாநந்தர் அவளை அழைத்துச் சென்றார். அவருக்குப் பின்னாலேயே, பசுபோல் சென்றாள் அம்மா. ''அம்மா, நீ சுதந்திரமா இங்கே சஞ்சாரம் பண்ணும்மா. இது முழுக்க உன் சொந்தப் பூமி'' என்றார் ஸ்வாமிஜி தொண்டையடைக்க.

''ரொம்ப நாள் முன்னாடியே டாகூர் இங்கே வந்து குடிபுகுந்துட்டதாகக் காட்சி கொடுத்திருக்கார்'' என்றாள்.

விவேகாநந்தரைப் பெற்ற புவநேசுவரி தேவிதான் அங்கு சுதந்திரமாகச் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். ''எல்லாம் நரேன் காரியம்'' என்று வாய் ஓயாமல் சொல்லிக் கொண்டு தோட்டத்திலிருந்த காய்கறிகளைப் பறித்துக் கொண்டிருந்தாள்.

விவேகாநந்தர் அவளிடம் வேகமாக வந்தார். ''இங்கே என்ன பண்ணிண்டிருக்கே! அம்மா வந்திருக்காளே, அவாளை வந்தனம் பண்ணிக்காமல், காய்கறி சேகரிச்சுண்டிருக்கியே! எல்லாம் உன் பிள்ளை பண்ணினதுன்னு நினைச்சு ஸ்வாதீனம் கொண்டாடறே போல இருக்கு. அம்மா தாயே, நீ அப்படி நினைச்சா அது தப்பு. இதையெல்லாம் செஞ்ச சக்தி வேறே தெரியுமா? இந்த நரேன் அதன் எதிரில் ஒண்ணுமேயில்லை, தெரிஞ்சுக்கோ'' என்றார்.

தன மெய்யான அம்மாவாக அவர் கருதிய சாரதையிடத்தில் நெருங்கி நின்றார் விவேகாநந்தர். ''அம்மா, எனக்கு ஒரு வரம் தருவாயா?'' என்றார்.

அம்மா புன்முறுவலுடன் நின்றாள்.

''எனக்கு ஜுரம் வரணும்னு வரம் தா'' என்றார் ஸ்வாமிஜி.

அவ்வளவுதான்! இவள் வரம் தர வேண்டும் என்று காத்திராமல், அவரே அவளிடமிருந்து வரத்தை எடுத்துக் கொண்டுவிட்டார். ''அம்மா, ஜுரம் வந்துடுத்து'' என்றார்.

சாரதை அந்த மகாபுத்திரனின் விரிந்த நெற்றியில் விரலை வைத்துப் பார்த்தாள். தணலாகக் காய்ந்தது. ''இது என்னடா குழந்தே!'' என்றாள்.

''கவலைப்படாதேம்மா. இங்கே குருபாயிக்களெல்லாம் பூஜைக்காக அற்புதமாக உழைக்கறதுகள். ஆனாலும் என் அவசரத்துக்கு அவா உழைப்பும் போதவில்லை. முன்கோபத்திலே எதையாவது கன்னாலு சொல்லி அந்தக் குழந்தைகளைக் கஷ்டப்படுத்துகிறேன். ஜுரம் வந்துடுத்துன்னு நான்பாட்டுக்குப் போய்ப் படுத்துக்க வேண்டியதுதானே! அவா என் உபத்திரவமில்லாமல் ஜமாய்ச்சிடுவா'' என்றார். சொன்னவாறே படுக்கப் போய்விட்டார்.

அன்றைய விழாக்கள் பூர்த்தியானதும் அம்மா நேரே விவேகாநந்தர் படுத்திருந்த இடத்துக்குச் சென்றாள்.

''என் அன்பு நரேன். பூஜை முடிஞ்சுடுத்துப்பா! எழுந்திரு'' என்றாள்.

ஜுரம் வருவதற்கு மனமறிந்து வரம் தராவிட்டாலும் அது போவதற்கு வரம் தந்துவிட்டாள். உடனே விவேகாநந்தர், ''காய்ச்சல் போயிடுத்து பார்த்தியா?'' என்று கூறிக் கொண்டே துள்ளி எழுந்தார்.

மடத்தில் முக்கியமான பகுதிகள் கட்டி முடிந்ததும் 1898 டிஸம்பர் 9ந் தேதி, விவேகாநந்தர் தமது திருத்தோளில் டாகூரின் அஸ்தி கலசத்தை எடுத்துச் சென்று, பேலூரில் நிரந்தரமாகப் பிரதிஷ்டை செய்தார். அம்மாவின் பாததூளியையும் பிரதிஷ்டை செய்தார். சில சாதுக்களும் அங்கேயே வாசம் தொடங்கினர். ''என் குழந்தைகளுக்குச் சொந்த இடம் கிடைச்சுது. அப்பாடா!'' என்று அம்மா ஆசுவாசப் பெருமூச்சுவிட்டாள்.

மகிழ்ச்சிகரமாகச் சிறிது காலம் உருண்டுவிட்டதே! கருமுகில்கள் வந்து சூழ்ந்தன, பயங்கரமாக இடித்துக் கொண்டு!

(தொடரும்)

புதிய பார்லே மாரி பிஸ்கெட்டுடன் காப்பியின் சுவையை அனுபவிப்பீர் !



காப்பியின் சுவை-க்குச் சுவையூட்டுபவை ருசிமிக்க புதிய பார்லே மாரி பிஸ்கெட்டுகள்- ஃபாயில் ஸீல்டு பேக்குகளில்.

க்ளுகோ, மொளுகோ மற்றும் சுவைமிக்க இதர பிஸ்கெட்டுகளின் தயாரிப்பாளர்களான பார்லே உங்களுக்கென ப்ரத்யேகமாக வழங்குகின்றனர்—

பார்லே மாரி பிஸ்கெட்டுகள்

everest/1085f/PP/C tam

ஆறுகளை இணைப்போமா?

பல ஆண்டுகளுக்கு முன்னர் காலஞ்சென்ற டாக்டர் சி. பி. ராமசாமி அய்யர், பாரதத்தில் ஓடும் நதிகளைச் செயற்கையாக இணைப்பது நாட்டின் வளர்ச்சிக்கும் நலனுக்கும் உகந்தது என்ற யோசனையைத் தெரிவித்தார். பயனுள்ள இவ்வரிய யோசனை ஏனோ செயல்படுத்தப்படாமலே இது வரை கேட்பாரற்றுக் கிடந்தது. இது பற்றி பாரத அரசு இப்போது தீவிரமாகக் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிய வருகிறது. இயற்கையின் அருளால் ஓடும் நதிகளைச் செயற்கை முறையில் இணைப்பதால் ஏற்படக் கூடிய நன்மைகள் குறித்து பாரதத்தின் சிறந்த பொறி இயல் நிபுணர்களுள் ஒருவரும் பல அரிய பெரிய பொதுத் திட்டங்களை உருவாக்கி வெற்றி பெற்றவருமான திரு எம். கணபதியின் கருத்துக்களைப் பார்க்கலாம்.



இன்றைய பிரச்னை 8

நம் நாட்டின் நதிகளை இணைப்பது குறித்துத் தங்கள் கருத்து என்ன?

நம் நாட்டிலே கங்கை, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, சட்லெஜ் (பஞ்சாப்) முதலிய பன்னிரண்டு பெரிய நதிகள் உள்ளன. பல நதிகளில் பருவ காலத்தில் ஓடும் ஏராளமான தண்ணீர் வங்காள விரிகுடாவில் ஒரு பகுதியும் அரபிக் கடலில் ஒரு பகுதியுமாகக் கலந்து பயன்படுத்தப்படாமல் வீணாகிறது. விவசாயத்துக்கும் குடிதண்ணீருக்கும் பிற தேவைகளுக்கும் நாம் பயன்படுத்திக்கொள்ளும் நீர் மிகச் சொற்பமே. நதிகளை இணைப்பதன் மூலம் வீணாகும் நீரில் கணிசமான பகுதியைப் பயனுள்ளதாக்கிக் கொள்ளலாம்.

நதிகளை இணைப்பதன் மூலம் ஏராளமான தரிசு நிலப் பகுதிகளைச் சாகுபடிக்குக் கொண்டு வர முடியுமில்லையா?

நிச்சயமாக முடியும். நாட்டில் மக்கள் தொகை பெருகிய வண்ணம் இருப்பதால் அதற்கேற்ப விளைச்சலையும் பெருக்கியே ஆக வேண்டும். அரிசி, கோதுமை விலை உயர்ந்தால் எல்லாப் பண்டங்களின் விலையும் உயர்ந்து விடும். விவசாயமே நம் நாட்டின் முக்கியமான தொழில். பசுமைப் புரட்சி ஓரளவுக்குப் பயனளித்துள்ளது உண்மையே. எனினும் இன்னும் பத்து பதினைந்து வருடங்களுக்குப் பிறகு நம் உணவுத் தேவை மிகவும் பெருகிவிடும். நதிகளை இணைப்பதன் மூலமே பிற்காலத் தேவைக்கு ஈடு செய்ய முடியும். இத் திட்டத்தினால் பெருத்த லாபம் ஏற்படுமே யல்லாது யாருக்குமே நஷ்டமோ கஷ்டமோ இல்லை.



சற்று விளக்கிக் கூறுகிறேன். வட இந்திய நதிகளில் தென் மேற்குப் பருவக் காற்றின் மூலம் ஜூலை – செப்டம்பர் மாதங்களில் நிறையத் தண்ணீர் ஓடும். பாரதத்தின் தென் பகுதியில் உள்ள நதிகளில் பருவ மழையால் அக்டோபர் – டிசம்பர் மாதங்களில் நிறைய நீர் ஓடும். ஜூலை – செப்டம்பர் மாதங்களில் மழை பெய்து நமது ஆறுகளுக்கு நீர் கிடைப்பதில்லை. பெரும்பாலும் வறண்டே கிடக்கும்.

ஆகவே, வட இந்திய நதிகளில் ஜூலை செப்டம்பர் மாதங்களில் பருவ மழையினால் பெருக்கெடுக்கும் நீரை அதே பருவத்தில் வறண்டு கிடக்கும் தென்னாட்டு நதிகளில் ஓடச் செய்யலாம் என்கிறீர்கள், இல்லையா?

ஆம். இதைத்தான் டாக்டர் சி. பி. முன்பே கூறினார். அமெரிக்கா போன்று வளம் கொழிக்கும் நாட்டில் இத்தகைய நிலை இருந்திருந்தால், நதிகளை இணைக்கும் வேலையை எப்போதோ செய்து முடித்திருப்பார்கள்.

பணமில்லாத காரணத்தினாலேயே இத்திட்டம் நிறைவேற்றப்படாமல் இருந்து வந்திருக்கிறதா?

அது ஒரு முக்கியமான காரணம். இப்பொழுது ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நமக்கு இது விஷயமாக உதவி கிடைக்கவிருக்கிறது. இதற்கான பூர்வாங்க வேலைகள், சோதனைகள் இப்போது மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

எந்த எந்த நதிகளை இணைக்கத் திட்டம் உருவாகிறது?

கங்கையையும் காவிரியையும் 3360 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய் வெட்டி இணைக்கவிருக்கிறார்கள். இக்கால்வாய் உருவானால், உலகிலேயே மிகப் பெரிய செயற்கைக் கால்வாய் இதுவாகத்தான் இருக்கும். கால்வாயின் உத்தேச அகலம் 76 மீட்டர். ஆழம் 3 மீட்டர் முதல் 7 மீட்டர் வரை இருக்கும். கால்வாயின் மொத்த நீளம் (கங்கையிலிருந்து காவிரி வரை) 3424 கிலோ மீட்டர். இடையில் சுமார் இருநூறு பாலங்கள் அமையக் கூடும். இக்கால்வாய் ஏற்பட்டால் கங்கை நதியில் பருவ மழையினால் நான்கு மாத காலத்துக்குப் பெருகும் கூடுதலான தண்ணீரில் 40,000 கியூசெக்ஸ் (Cusecs-விநாடிக்கு ஒரு கன அடி வீதம் ஓடும் நீரளவு) தண்ணீர் பாரதத்தின் மத்திய பகுதிக்கும் தென் பகுதிக்கும் கிடைக்கும். பொறியியல் ரீதியில் இத்திட்டம் சாத்திய

பாவம், துர்ப்பாக்கியசாலி!



அமெரிக்காவில் டென்வர் என்ற நகரைச் சேர்ந்த அண்டானியோ ஆண்டர்சன் என்பவர் ஒருநாள் தமது காருக்குள் ஏறப்போகும்போது, துப்பாக்கி ஏந்திய திருடன் ஒருவன் அவரை வழிமறித்தான். அவர் அவனிடமிருந்து தப்பிப்பதற்காகக் காரை விட்டு விட்டு ஓடிப்போனார். ஆனால் திருடனே அவரைத் துரத்திப் பிடித்து, 2800 டாலர் நோட்டுக்கள் இருந்த அவரது மணிபர்சைப் பிடுங்கிக் கொண்டு விட்டான். திருடனிடமிருந்து விடுபட்டு அவர் மீண்டும் தம் கார் நின்ற இடத்துக்கு வந்தார். ஆனால் பாவம், அவர் வருவதற்குள் அந்தக் காரையும் எவனோ திருடிக்கொண்டு போய் விட்டான்! ஆதாரம்: நியூடைம்ஸ்

மானதே என்று ஐ. நா. நிபுணர்கள் கூறியுள்ளனர்.

விவசாயத்துக்கு நிறம்ப நீர் கிடைப்பது தவிர வேறு என்ன நன்மைகள் இதன் பயனாக ஏற்படும்?

குடிநீர்ப் பிரச்னை தீர உதவும். கால்வாயில் ஓடும் 3400 கிலோமீட்டர் தூரத்துக்கும் வழியில் உள்ள எண்ணற்ற கிராமங்களுக்குச் செல்லாம் குடிநீர்த் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கும். மேலும் இக் கால்வாய் போக்குவரத்துக்கும் பெருமளவு பயன்படும். இன்று பண்டங்களின் போக்குவரத்துக்கு, சாலை (லாரி)களையும் ரயில் (கூட்ஸ்) வேலையையும் மட்டுமே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

ஐ. நா. நிபுணர்கள் இது பற்றிய ஆய்வுகளை நிகழ்த்துவதாகக் கூறுகிறீர்களே, நம் நாட்டிலுள்ள இன்ஜினீயர்களால் சாதிக்க முடியாத காரியமா இது?

நமது பொறியியல் வல்லுநர்கள் இத்துறையில் உலகில் வேறு எந்த நாட்டு நிபுணர்களுக்கும் சளைத்தவர்கள் அல்லர். எனினும் நாம் ஆராய்ந்து முடிவு செய்தாலும் ஐ.நா.விடம்தான் நிதி உதவி பெற வேண்டும். ஐ. நா. நிபுணர்களே இத்திட்டத்தினைப் பரிந்துரைத்து விட்டால் காரியம் இன்னும் சுலபமாகி விடுமல்லவா?

இத்திட்டம் பற்றி விளக்கமாகக் கூற முடியுமா?

கங்கை நதி நீரைக் கால்வாய் மூலம் பாட்னாவுக்கு அருகிலிருந்து கொண்டு சென்று, சோட்டா நாகபுரி பீடபூமியில் கடல் மட்டத்திலிருந்து சுமார் 2000 அடி உயரத்திலுள்ள நீர்த் தேக்கத்துக்கு உயரச் செலுத்த (Lift) வேண்டும். நீரைக் குழாய்கள் மூலம் இயந்திரங்களின் உதவியால் 'பம்ப்' (Pump) செய்து அந்த உயரத்துக்கு ஏற்றிவிட்டால் அங்கிருந்து தெற்கே கீழ்நோக்கிப் பாயச் செய்வதில் சிரமம் ஏதுமில்லை. தெற்கிலுள்ள எந்த நதியுடன் வேண்டுமானாலும் இணைத்துக்கொள்ள முடியும்.

உத்தரப் பிரதேசம், பீகார் மாநிலங்களுக்கு இதனால் அசௌகரியம் ஏதும் இராதே?

இல்லவே இல்லை. விரயமாகிப் போகிற கூடுதலான தண்ணீரைத்தானே இத் திட்டத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறோம்? அவர்கள் ஆட்சேபிக்க முகாந்தரமே இல்லை. மேலும், வட இந்திய நதிகளில் அடிக்கடி வெள்ளப் பெருக்கு எடுப்பதால் யமுனை, கங்கை, மகாநதி இவை பாயும் பிரதேசங்களில் சேதம் மிகுதியாக ஏற்படுவதுண்டு. வெள்ளத்தால் ஏற்படும் சேதத்தை வெகுவாகக் குறைக்கவும் இத் திட்டம் உதவுமே?

நாம் சென்னை நகரிலேயே கங்கா ஸ்நானம் செய்ய எவ்வளவு காலம் பிடிக்கும்?

சுமார் 20 வருடங்கள் பிடிக்கலாம். அதற்குள்ளாகவே முடிந்தாலும் முடியலாம். அதனாலென்ன? 50 வருடங்கள் ஆனாலும் கூடப் பரவாயில்லை. நதிகளின் இணைப்பினால் நாட்டுக்கு விளையக் கூடிய நன்மைகளை எண்ணினால் நீண்ட காலம் பொறுக்கலாம். அடுத்த தலைமுறையினருக்காவது பயன்படட்டுமே? எவ்வளவு செலவானாலும் தயங்க வேண்டியதில்லை.

செலவைப் பற்றி நானே கேட்க வேண்டுமென்று நினைத்தேன்....

2000 கோடி ரூபாய் முதல் 2500 கோடி ரூபாய் வரை செலவாகலாம். ஆனால் என்ன? நாலாவது ஐந்து ஆண்டுத் திட்டத்துக்கு மொத்தச் செலவு ரூ. 25,000 கோடி. இது ஒரு பிரமாதச் செலவா? 20 வருட காலத் திட்டம் இது. இரண்டாயிரம் என்ஜினீயர்களுக்கும் ஆயிரக்கணக்கான இதர அலுவலர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கவும் இத் திட்டம் பயன்படும். வேலையில்லாமல் இன்று பல இன்ஜினீயர்கள் திண்டாடுகிறார்களே?

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் வீழ்த்தும் திட்டம் போலிருக்கிறதே, இது? மற்ற நதிகளை எவற்றை இப்படி இணைக்கலாம்?

மேற்குக் கடற்கரையில் போய்ச் சேரும் நர்மதை, தப்தி நதிகளின் நீரையும் விரயமாகாமல் தடுக்கலாம். கோதாவரி-பெண்ணாறு, பெண்ணாறு – காவிரி இப்படியெல்லாம் எவ்வளவோ இணைப்புகளுக்கு வழியுண்டு. பாகீரதி நதியில் பருவ மழை பெய்யும்போதுதான் நிரம்ப வெள்ளம் வரும். மற்ற சமயங்களில் வறட்சிதான். ஃபராக்கா நீர்த் தேக்கத்திலிருந்து 25 மைல் நீளத்துக்கு 20–21 அடி ஆழத்துக்கு 500 அடி அகலமுள்ள கால்வாய் வெட்டிப் பாகீரதியுடன் இணைத்தால் 60,000 க்யூசெக்ஸ் தண்ணீர் பாய வழியுண்டு. குறுகிய நோக்கமுள்ள சில அரசியல்வாதிகளால் இம்மாதிரியான அரிய திட்டங்கள் இதுவரை தடைபட்டு வந்துள்ளன. விசால நோக்கு அவர்களுக்குத் தேவை.

இதுபோன்ற நதிகள் இணைப்பு வேலைக்குத் தேவைப்படக்கூடிய கருவிகள் நம் நாட்டில் உள்ளனவா? அயல்நாடுகளிலிருந்து தருவிக்க வேண்டுமா?

நிதி உதவி ஒன்று தவிர பாக்கி எல்லாமே நம்மிடம் உண்டு. புல்டோசர், ஸ்க்ராப்பர், வெடி வைத்துத் தகர்க்கும் சாதனம் இவை போன்ற யந்திரங்கள் எல்லாம் நம் நாட்டிலேயே தயாராகின்றன. ஆட்களுக்குப் பஞ்சமில்லை. திறன் மிகு பொறியியல் வல்லுநர்களும் உள்ளனர். இது போன்ற நதி இணைப்புத் திட்டங்களுக்குச் செலவிடப்படும் தொகை நாளடைவில் நாட்டு வளமைக்கு உதவி, பன் மடங்கு லாபம் தரும் என்பதை உறுதியாகக் கூற முடியும்.

பேட்டி: '**பாணன்**'

இளைஞர் சமுதாயம்



சேலம் விவேக் மன்ற அங்கத்தினர்களுடன் பேட்டி நடக்கிறது

8. விவேக் சங்கத்தின் விவேகம்

இரவு ஏழரை மணி சுமாருக்கு ரயில் சேலம் ஜங்ஷனுக்குப் போய்ச் சேர்ந்தது. நான் வண்டியை விட்டுக் கீழே இறங்கிச் சுற்று முற்றும் பார்த்தேன். வண்டியிலிருந்து ஏராளமான பிரயாணிகள் இறங்கினர். எல்லோரும் சென்ற பிறகும்கூட நான் பிளாட்பாரத்திலேயே சற்று நின்றேன். பிறகு மெதுவாக நகரலானேன். அந்தச் சமயம் திடீரென்று ஏழெட்டு இளைஞர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டனர்.

''ஸார்,.... நீங்கள்...? கல்கி உதவி ஆசிரியர்தானே?...?'' என்று கேட்டார் ஒருவர்.

''ஆமாம்.... நீங்களெல்லாம்...?''

''நாங்கள் இவ்வூரில் உள்ள விவேக் மன்றத்தின் அங்கத்தினர்கள்.''

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நான் அந்த மன்றத்துக்கு இன்ன தேதியில் சேலம் வருகிறேன் என்று எழுதியிருந்தேனே தவிர எந்த ரயிலில் வருகிறேன் என்ற விவரம் எதுவும் எழுதவில்லை.

முன்பின் தெரியாத ஊரில் அந்த நண்பர்கள் என்னை அடையாளம் கண்டு கொண்டது எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

*　　　*　　　*

''நீங்கள் எங்கள் மன்றத்தையும் 'இளைஞர் சமுதாய'த்தில் சேர்த்துக்கொண்டு இங்கு வருகை புரிந்ததற்கு மிக்க நன்றி'' என்றார் மன்றத்தின் செயலாளர் திரு எஸ். சந்திரசேகரன். அவர் மன்றத்தின் பொருளாளரும் கூட. திரு டி. சேஷகிரி மன்றத்தின் தலைவர். மொத்தம் இருபத்தொரு அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். 1968ம் ஆண்டு இச்சங்கம் தொடங்கப்பட்டது.

குறைந்த மூலதனத்தில் நிறைந்த புத்தகங்களைப் படிக்கும் வாய்ப்பை மக்களுக்கு ஏற்படுத்தித் தருவதுதான் மன்றத்தின் முக்கிய நோக்கம்.

ஒரு சின்ன ஆசிரமம் போல் தோற்றம் அளிக்கும் கூரை வேய்ந்த இல்லத்தில் விவேக் மன்றத்தினர் நூல்நிலையம் அமைத்திருக்கின்றனர்; நிறைய நூல்கள் சேகரித்திருக்கின்றனர்.

''நூல் நிலையம் அமைத்திருப்பதைப் பாராட்டுகிறேன். இது தவிர, வேறு ஏதாவது சமூக சேவை செய்கிறீர்களா?'' என்று கேட்டேன்.

''ஏன் நூல் நிலையம் அமைத்திருப்பதே ஒரு சமூக சேவைதானே? விலையுயர்ந்த நூல்களை இலவசமாக அங்கத்தினர்கள் படிப்பதே பெரிய ஆதாயம்தானே?'' என்றார் செயலாளர்.

ஓர் அங்கத்தினர் மிகவும் ஆவேசமாக, ''சாதி வேற்றுமை என்பது நம் சமூகத்தின் மீது கறையாகப் படிந்து விட்டது. அதைத் தவிர்க்க முயற்சி எடுக்க வேண்டும்'' என்று கூறினார்.

''நகரசபையின் அம்மை குத்தும் பாரத்திலிருந்து அரசாங்கப் பரீட்சைப் பாரங்கள் வரையில் 'என்ன சாதி?' என்று குறிப்பிடும்படி கேட்கும் ஒரு பத்தி சம்பிரதாயமாகவே இருந்து வருகிறதே!'' என்றேன்.

அதற்கு அந்த அங்கத்தினர் ''நகரசபை அரசு ஆகியவற்றின் நமூனாக்களில் சாதிக் குறிப்பை ஒழித்து விடுவதனால் மட்டும் அந்தக் கொடுமை நாட்டை விட்டே ஒழிந்துவிடும் என்பதல்ல. நம் உள்ளங்களை விட்டு முதலில் அவ்வேற்றுமை ஒழிய வேண்டும். சாதி வேற்றுமைதான் நம் சமூகத்தின் ஆணி வேரைப் பற்றிக் கொண்டு அழிக்கும் வேர்ப் புழு. அதை அடியோடு களைந்து எறிந்து விட முடியுமானால் நம் நாடு எல்லாத் துறைகளிலும் உருப்பட்டு முன்னேறி விடும்! உங்களைப் போன்ற அநுபவம் மிக்கவர்கள் இந்தத் துறையில் எங்களுக்கு

மன்றத்தின் நூல் நிலையத்தில் அங்கத்தினர்கள்




வழிகாட்ட முன்வருவீர்களானால் நாங்கள் போராட்டத்தில் குதிக்கத் தயார்!'' என்று வீர வாசகம் பேசினர்.

நான் அயர்ந்து போனேன். சமூக சீர் திருத்தம் என்பது கிணறு என்ன, குதித்து நீந்துவதற்கு? கொஞ்சம் நகர ஆரம்பிக்கும் ரயிலிலிருந்து இறங்கவே பயப்படும் நான் பெரிய போராட்டத்தில் குதிப்பதற்கு வழி காட்டுவதாவது! நல்ல ஆளைப் பிடித் தார்கள்!


சமாதானமாகப் பேசித்தான் இவர்களிட மிருந்து தப்ப வேண்டும் என்று நிர்மானித்து, ''பெரிய விஷயங்களில் தலையிட்டு முதலில் சிரமப்படக் கூடாது. முதலில் சின்னச் சீர் திருத்தமாகத் தொடங்குங்கள்! சேலம் நக ரத்தில் இருக்கும் ஆரோக்கியக் கேடான மார்க்கெட் பகுதியையும், மற்றும் உள்ள சுகாதாரக் குறைவான சந்து பொந்துகளையும் சுத்தமாக வைத்திருக்க முயற்சி எடுங்கள். ஒரு தனி மனிதனின் குரலைவிட ஒரு மன்றத் தின் குரலுக்கு என்றுமே மதிப்பு அதிகம்!'' என்று நயமாகக் கூறி ஏதோ ஒரு புதிய 'ஐடியா' வைக் கொடுத்துவிட்ட தோரணையில் அவர்களை ஒரு பார்வை பார்த்துவிட்டுத் தப்பித்துக் கொண்டேன்!

விவேக் மன்றம் அங்கத்தினர்கள் நிதி வசதி குறைந்தவர்கள்தானென்றாலும் உற்சாகம் குறைந்தவர்கள் அல்ல; ஓர் உண்டி ஏற் படுத்தி அதில் வருவாகும் தொகையைச் சேலம் பார்வையிழந்தோர் பள்ளி மாணவர் களின் ஆகாரத்துக்கு அரிசியாக வாங்கிக் கொடுத்து உதவியிருக்கிறார்கள். இதே மாதிரி இன்னும் பல நல்ல காரியங்களுக்கு உதவத் தயாரா யிருக்கிறார்கள். சமூக சேவை யில் யாராவது நல்வழிகாட்ட முடியுமானால், அதை ஏற்றுக் கொண்டு செயலில் இறங்க அவர்கள் சித்தமாயிருக்கிறார்கள். அதுதானே விவேகம்!

— சோமசஸ்



1. சென்னை நக்கீரர் கழ கத்தின் ஆதரவில் சென்னை பல்கலைக் கழகத் துணைவேந் தர் பத்மஸ்ரீ நெ. து. சுந்தர வடிவேலு அவர்கள் இராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களிடமிருந்து பட்டம் பெறுகிறார்.



2. சுதந்திரக் கட்சியின் 'தொண்டர் தம் பெருமை'யை அறிய பம்பாய் மாதுங்காவுக்குச் சென்றால் நேரில் கண்டறியலாம். மாதுங்காவில் சுதந் திரக் கட்சியினர் தோல்வியுற்றபோதி லும் தம் சேவையை நிறுத்திவிட வில்லை. பம்பாய் சுதந்திரக் கட்சி இளைஞர்கள் தங்கள் 'மொபைல் சிவிக் சென்டர்' மூலம் இடையறாது மக்களுக்கு உரிய குறைகளை எல்லாம் கேட்டறிந்து நீக்குவதில் ஈடுபட்டிருக் கிறார்கள்.

பார்க் - டேவிஸ்

மூவகை ஆற்றலுள்ள நிகோ சோப்

மற்றெந்த சோப்பையும் விட உங்கள் சருமத்திற்கு மிகுந்த பாதுகாப்பளிக்கிறது

1 நிகோ சருமக் கிருமிகளைக் கொல்லுகிறது

2 நிகோ உடல் துர்நாற்றத்தைப் போக்குகிறது

3 நிகோ உடலைத் துப்புரவாக்கிப் பாதுகாப்பளிக்கிறது

நீங்கள் ஆரோக்கியமான சருமத்தைப் பெற, நாள்தோறும் நிகோ சோப் தேய்த்துக் குளியுங்கள். நிகோவின் நச்சுநாச நுரைவளம் சரும நோய்க் கிருமிகளைக் கொன்று, உங்கள் சருமத்திற்கு ஆரோக்கியமளிக்கிறது. நிகோவிலுள்ள மருந்துப் பொருள்கள் வியர்வையினல் ஏற்படும் துர் நாற்றத்தைப் போக்குகின்றன. நிகோ சின்னஞ்சிறிய சருமத் தொற்றுகளையும் எதிர்த்துப் போராடி, சருமத்துக்கு மென்மையளிக்கிறது. அதோடு மினுமினுப்பும் புதுமையும் தருகிறது. இது மட்டுமல்ல;

நிகோ பழக்கத்தைக் கடைப்பிடிப்பீர். அது உங்கள் சருமத்திற்கு அவசியம்.

முகப் பருக்கள் மற்றும் வேர்க்குருவிலிருந்தும் உங்கள் சருமத்துக்குப் பாதுகாப்பு தருகிறது நிகோ. ஷாம்புவாகக்கூட இதைப் பயன்படுத்தலாம். இதனுல் பொடுகு விழாமல் தடுக்கிறது நிகோ. எனவே, இன்று முதலே, நிகோ சோப் உபயோகிக்கத் தொடங்குங்கள்.

TRIPLE ACTION


NEKO®

The Original Antiseptic Soap



® Regd. Trade Mark. Regd. Users—Parke Davis (India) Ltd., Bombay-72 AS.

JAISONS 293



மார்க்கின் மாப்பிள்ளை!

வாதூலன்

''கோலிரிட்ஜ் என்ன சொல்லியிருக்கிறான் தெரியுமா?'' என்று ஆரம்பித்தார் மார்க்கபந்து — 'மார்க்' டியூட்டோரியல் காலேஜ் பிரின்ஸ்பால் அவர். ''வில்ஃபுல் சஸ்பென்ஷன் ஆ: டிஸ்பிலீஃப்'' அதாவது ஒரு நாடகத்தைப் பார்க்கும்போது, இதெல்லாம் கற்பனை என்று நமக்குத் தெரியத்தான் செய்கிறது. அவநம்பிக்கையை ஒதுக்கி விட்டுத்தான் பார்க்கிறோம். இருந்தாலும் கொஞ்சமாவது ரீஸனிங் வேண்டாமோ?''

நீலகண்டனுக்குச் சுகமாகத் தூக்கம் வந்தது. 'ஹா'வென்று கொட்டாவி விட்டான். மாமனாருக்குத் தெரியாமல் ஒளித்து வைத்திருந்த வேர்க்கடலையிலிருந்து ஒன்றை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். 'இவரை யார் நாடகம் போய்ப் பார்க்கச் சொன்னது? இப்படி ஓயாது விமரிசனம் செய்யச் சொன்னது....?'

அவன் நினைத்த கேள்விக்குப் பதில் சொல்கிற மாதிரி மஞ்சுளாவே அங்கு அப்போது வந்தாள். ''அப்பா என்ன சொல்கிறார்? நாடகம் நன்றாயிருந்ததாமா? நான்தான் வீணாகப் போகிறதென்று அவருக்கு டிக்கெட் கொடுத்தேன்.''

''அதைத்தான் நீலத்திடம் டிஸ்கஸ் செய்து கொண்டிருக்கிறேன். மாணவர்களுக்குப் பிடிக்கும். டைட் பாண்ட்ஸும் கிருதாவுமாக அவர்கள்தானே பாதிக்கு மேல்—''

''அதுபோல அவர்கள் நாடகம் அது இது என்று திரிந்தால்தானே பெயிலாவார்கள். உங்கள் டியூடோரியல் காலேஜில் கூட்டமும் சேரும்?'' என்று தைரியமாகச் சொன்னான் நீலகண்டன்.

மார்க்கபந்து தமது மாப்பிள்ளையையே சிலவினாடிகள் கண் கொட்டாது நோக்கினார். அவரது தீர்க்கமான கண்கள் நீலகண்டன் மீது பதிந்தன.

''எனக்கு உள்ளே வேலை இருக்கிறது'' என்று சொல்லி நழுவப் பார்த்தான் நீலகண்டன். அதற்குள் மார்க்கபந்து, ''பிரப்பரேஷன் எல்லாம் எப்படி இருக்கு?'' என்று கேட்டார்.

''எதற்கு?'' நீலகண்டன் திகைத்தான்.

''அடுத்த மாசம் ரிசல்ட் வருகிறதே? எல்லாக் காலேஜின் தரத்தைப் பற்றி, முந்தின வருஷ ரிசல்ட்டைப் பற்றி — ஒரு ஸ்டாடிஸ்டிக்ஸ் தயாரிக்கச் சொன்னேனே?''

''நாளைக்குச் செய்கிறேனே?''

''வாட் ஈஸ் திஸ் நீலம்!'' என்று கடிந்து கொண்டார் மார்க்கபந்து.

''சரி சரி!'' என்று சொல்லிவிட்டு அவசரம் அவசரமாகக் கிளம்பினான் நீலகண்டன்.




மார்க்கபந்து ஓய்வு பெற்ற ஆங்கிலப் பேராசிரியர். ஓய்வு பெற்றவுடன் பொழுது போக்குக்காகவும் ஓரளவு சௌகரியமான வாழ்க்கைக்காகவும் சில மாணவர்களுக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். அதிர்ஷ்டமோ, இல்லே உண்மையிலேயே திற மையோ, வருடா வருடம் நிறையப் பையன்கள் டியூஷனுக்கு வரலாயினர். பார்த் தார் மார்க்கபந்து. வீடோ பெரியது: இருப் பது ஒரே பெண். ட்யூட்டோரியல் காலேஜ் ஆரம்பித்தால் என்ன என்று நினைத்து நினைப் பைச் செயலாக்கியும் விட்டார். அவ்விதம் ஆரம்பித்ததுதான் 'மார்க் ட்யூட்டோரியல் காலேஜ்'.

மஞ்சுளாவுக்கு இந்தப் பெயர் சிறிதுகூடப் பிடிக்கவில்லே. ''என்னப்பா இது? நன்றாகவே இல்லேயே பெயர்!'' என்று மறுத்துப் பார்த்தாள்.

''நோ நோ! நீயே யோசித்துப் பார். பெயி லானவுடன் என்ன தோன்றும், மாணவர் களுக்கு? 'இன்னும் கொஞ் சம் கூடுதலாக மார்க் வாங் கினல் இதுபோல் ஆகி யிருக்காதே!' என்றுதானே படும்? 'மார்க் மார்க்' என்ற எண்ணமே சிந்தை யில் வியாபித்திருக்கும். பேப்பரைப் பார்த்தவுடன் 'மார்க் டியூட்டோரியல் காலேஜ்' விளம்பரம் கண் ணில் படும். உடனே ஓடி வந்து சேருவான். நான் முடிவு செய்தாகி விட் டது'' என்று சொல்லி மறுதினமே பெயர்ப் பல கையை மாட்டினர். விளம் பரமும் செய்தார். ஓரிரு வருடங்களிலேயே அந்தக் கல்லூரி பிரபல மடைந்தது. பலர் வந்து சேர்ந்தார்கள். அது போல் படிக்க வந்தவன்தான் நீல கண்டன்.

நீலகண்டன் ஆங்கிலத்தில் ரொம்ப 'வீக்'. அதுவும் ஆங்கில இலக்கணம் அவனே மிகவும் குழப்பும். அந்த சப்ஜெக்டினுலேயே அவன் இரண்டு தரம் தோற்றுவிட்டான். 'நாமோ சயன்ஸ் பட்டத்துக்குப் படிக்கிறோம். எதற்கு இந்த மொழிப் பரீட்சையையும் கூட வைத் திருக்கிறார்கள்?' என்று சர்வகலாசாலேயைத் திட்டுவான். பிசிக்ஸில் — குறிப்பாக ரேடியோ இன்ஜினீரிங் சம்பந்தமான படிப்பில் — அவ னுக்கு நல்ல தேர்ச்சி உண்டு. ஆனல் ஆங்கில மும் தேறினல்தானே பட்டம் தருவார்கள்?

வேறு வழி தோன்றமல் மார்க் டியூட்டோ ரியல் காலேஜில் சேர்ந்தான் நீலகண்டன். சேர்ந்த பின் ஒரு தரம் முயற்சி செய்தான். போன தடவையை விட இன்னும் மோசம். இரண்டாவது, மூன்றாவது... மார்ச், செப்



டம்பர் என்று மாதங்கள்தான் மாறி மாறி வந்தனவே தவிர, நீலகண்டன் தேறவில்லை. இனி இந்தப் படிப்புக்கும் இந்தக் கல்லூரிக்கும் முழுக்குப் போட வேண்டியதுதான் என்று தீர்மானித்தான். தீர்மானத்தைச் செயலாக்க மார்க்கபந்துவிடம் சென்றான்.

''இந்தத் தடவையும் பெயில், சார்!'' என்றான்.

மார்க்கபந்து இதை எதிர்பார்க்கவில்லையாதலால் கண நேரத்துக்குத் திகைத்துப் போனார். பிறகு சமாளித்து, ''அதனாலென்ன? விடாதே படிப்பை. இந்தக் காலேஜில் சேர்ந்து பாஸாகாமல் வெளியேறுவதா? நோ, நோ!'' என்றார்.

''இல்லை சார். எனக்கு அதிர்ஷ்டமில்லை.''

''அதிர்ஷ்டமில்லையா? நீ படிக்காவிட்டால் பரவாயில்லை. இங்கேயே இரு'' என்று வற்புறுத்திச் சொல்லி நீலகண்டனை வீட்டோடு வைத்துக் கொண்டார். சில மாதங்களிலேயே அவனை மாப்பிள்ளையாகவும் ஆக்கிக் கொண்டார்.

பெரிய பங்களா, எடுபிடி ஆட்கள், அழகான மனைவி — இவையெல்லாம் நீலகண்டனுக்குக் கசக்குமா, என்ன? போதாக்குறைக்குத் தன் இனிய பொழுதுபோக்கான ரேடியோ ரிப்பேரிலும் ஈடுபட வாய்ப்பிருந்ததால், பொழுது சுகமாகக் கழிந்தது.

ஆனால் அண்மைக் காலமாக மார்க்கபந்து நீலகண்டனைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்தார். காலேஜ் நிருவாகத்தில் தம் கூடவே அவனையும் தீவிரமாக ஈடுபடுத்த முயற்சி செய்தார். இரண்டு தெருக்கள் தள்ளி வேறொரு ட்யூட்டோரியல் காலேஜ் தொடங்கியதால், அங்குதான் பலர் சேருகிறார்கள் என்ற அபிப்பிராயம் மார்க்கபந்துவுக்கு ஏற்பட்டது. அதனால் தம் கல்லூரியில் அதிக மாணவர்கள் சேருவதற்கான வழி என்ன என்று யோசித்தார். கம்பெனியொன்று தம் புதிய தயாரிப்பை விற்பனை செய்ய கான்வஸிங் ஏஜண்ட் நியமிப்பது போல், நீலகண்டனுக்குப் புதுப் புது யோசனைகளைச் சொல்லலானார்.

நீலகண்டனுக்கு இது துளிக்கூடப் பிடிக்கவில்லை. தான் உண்டு, தன் மஞ்சு உண்டு, தன் பொழுது போக்குண்டு என்று இருந்தவனுக்கு இப்படி ஒரு தொந்தரவு எதற்கு?

ரிசல்ட் வந்த அன்று மாணவர்கள் எப்படி இருந்தார்களோ தெரியாது; உள்ளே தன் அறையில் 'டிரான்சிஸ்டர் — கம் — டேப் ரிகார்டரை' வைத்து ஆராய்ந்து கொண்டிருந்த நீலகண்டன் பயந்த வண்ணமிருந்தான். அந்த 'டேப் ரிகார்டர்' மார்க்கபந்துவுக்குத் தெரியாமல் வாங்கிய ஒன்று!

மஞ்சுளா பின்னால் பூனை போல் மெல்ல வந்து நின்றாள். ''ரிசல்ட் வந்திருக்கிறது. அப்பா ஹாலிலிருக்கிற அத்தனை நியூஸ் பேப்பரையும் வைத்துக் கொண்டிருக்கிறார்!''

''ம்'' என்றான் நீலகண்டன் அசுவாரசியமாக. அவன் தலையில் என்ன வேலை சுமத்தப் போகிறாரோ?

''நீலம்! நீலம்!'' என்று கூடத்திலிருந்து மார்க்கபந்துவின் குரல் வந்தது.

''சீக்கிரம் போங்கள். இல்லாவிட்டால் அப்பா இங்கேயே வந்து இதைப் பார்த்து விடுவார்!''

''ஹூம்!'' என்று மனத்துள் உறுமிவிட்டுக் கூடத்துக்குச் சென்றான்.

''பார்த்தாயா இதை?'' என்று எடுத்த எடுப்பிலேயே பேப்பரில் காணப்பட்ட ஒரு விளம்பரத்தைச் சுட்டிக் காட்டினார். ''இந்தச் சுற்றுவட்டாரத்தில் இன்னொரு டியூட்டோரியல் காலேஜ் வரப் போகிறதாம்!''

''வரட்டுமே! அதனாலென்ன?''

எரித்து விடுபவர் போல் அவனை ஒரு முறைப்பு முறைத்தார் மார்க்கபந்து.

''ஏற்கெனவே இங்கே முன்போல் மாணவர்கள் வருவதில்லை. புது மோகத்தில் எல்லாப் பசங்களும் அங்கே போய் விழுவார்கள்! நீ ஒன்று செய். 'பெயில்' ஆனவர்கள் லிஸ்ட் என்னிடம் இருக்கிறது. அதுவும் இந்த 'செயின்ட் விமலா' காலேஜில் இந்தத்தடவை ஏகப்பட்ட ஃபெயில்யர்ஸாம்! அந்தந்தக் காலேஜில் போய் விசாரித்து, பெயிலானவர்கள் வீட்டு விலாசத்தில் நம்ம விளம்பரத்தைக் கொடு!''

''இது நடக்கிற காரியமா?''

''நடக்கிற காரியமில்லை; டாக்ஸியில் போகிற காரியம். நாளைக்கே கிளம்பி முடித்து விடு. ஆமாம் — நீ பி. ஏ.யில் என்ன கிளாஸ்? ஓ! ஐ ஆம் ஸாரி. மறந்து விட்டேன். இருந்தாலும் உனக்கு அனுபவம் இருக்கிறதே? அனுபவத்தைப் பற்றி லாங்ஃபெல்லோ ஓரிடத்தில் என்ன சொல்லியிருக்கிறான் தெரியுமா?'' என்று ஆரம்பித்தார்.

''எதற்கு இந்த காலேஜ் அது இது எல்லாம் உங்களுக்கு? இந்த வயதில் நிம்மதியாக இருக்கக் கூடாதோ?'' என்று பட்டென்று கேட்டுவிட நினைத்த நீலகண்டன் அவரை விரோதிக்க மனமில்லாமல், ''நாளைக்கே ஆரம்பித்து விடுகிறேன்!'' என்று கூறி நகர்ந்தான்.

அடுத்த சில தினங்களுக்கு நீலகண்டன் ரொம்ப 'பிஸி'யாக இருந்தான். மாணவர்களைத் தேடித் தேடித் தங்கள் கல்லூரியைப் பற்றிப் பிரசாரம் செய்வதும், சேரத் தயங்கும் மாணவர்களை உற்சாகப்படுத்துவதும், சேர்ந்தவர்களைத் தட்டிக் கொடுப்பதும்—இப்படியே பொழுது கழிந்தது. இடையிடையே கணக்கு வழக்குகளைப் பார்க்கும் வேலையும் அவன் மீது விழுந்தது. 'சேச்சே! மஞ்சுளாவுக்கு ஆசைப்பட்டு மார்க்கபந்துவின் மாப்பிள்ளையாக வந்தது ரொம்பத் தப்பு!' என் முணுமுணுத்தான் நீலகண்டன்.

ஞாயிற்றுக் கிழமை அன்று கொஞ்சம் ஓய்வாக இருந்தது. முந்தின தினம் 'டேப்'பில் ரிகார்ட் பண்ணி வைத்திருந்த 'மன் சாஹேற கீத்'தை ரசித்துக் கேட்டுக்கொண்டிருந்தான். மார்க்கபந்து பின்னால் வந்து நின்று ஐந்து நிமிஷங்களுக்கு மேல் ஆகியும் நீலகண்டன் கவனிக்கவில்லை.

''ஹூம்! என்ன காச்சு மூச்சுக் கத்தல் இதெல்லாம்?''

''இசையைப் பற்றி உங்கள் ஷேக்ஸ்பியர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? மியூசிக்கை ரசிக்கத் தெரியாதவன் கொலைகூடச் செய்யத் தயங்க மாட்டானும்!'' என்றான்

நீலகண்டன். அவனுக்குத் தெரிந்த ஒரே மேற்கோள் இதுதான்!

''எனக்குச் சொல்லித் தருகிறாயா?'' என்றார் மார்க்கபந்து. ''எதில்தான் இசை இல்லை? நாணல் அசைவதிலும், நதி வேகமாகப் பாய்வதிலும் கூட இசை இருக்கிறது. கேட்கக் காதுகள்தான் வேண்டும்' என்று பைரன் சொல்லியிருக்கிறானே உனக்குத் தெரியுமா? சரி, விடு அதை! நான் இப்போது ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேச வந்தேன்.''

''என்னது?'' நீலகண்டன் உஷாரானான்.

''அடுத்த வாரம் நான் கோயமுத்தூருக்குப் போகிறேன். ட்யூட்டோரியல் காலேஜ் பிரின்ஸ்பால் அசோஸியேஷன் ஆரம்பிக்கப் போகிறார்கள். நான் தலைமை வகிக்கிறேன்!''

''அட! கங்கிராஜுலேஷன்ஸ்!''

பெருமையுடன் புன்னகை செய்தார் மார்க்கபந்து. ''என்ன செய்வது? இதை விட்டு ஒருநாள்கூடப் பிரிய எனக்கு மனமில்லை. ஆனால் புகழுக்கு அடிமையாகாதவன் யார்? புகழைப் பற்றி டென்னிசன் ஓரிடத்தில்....''

''முக்கியமான விஷயம் என்று ஏதோ சொல்ல வாயெடுத்தீர்களே?''

''ஆ... வந்து நான் போகிறேன் இல்லையா? நீ புதன்கிழமை மட்டும் பி. ஏ. இங்கிலீஷ் கிளாஸ் எடுக்கணும். பயப்படாதே, உனக்குத்தான் அநுபவம் இருக்கிறதே? சமாளி!''

நீலகண்டன் அயர்ந்து போனான். ''எனக்குத்தான் இங்கிலீஷ் ரொம்ப 'வீக்' என்று உங்களுக்குத் தெரியுமே!'' என்று அலறினான் நீலகண்டன். ''மூன்று தரம் பெயிலாயிருக்கிறேனே!''

''அதனால்தான் ஒருதரம் பெயிலான மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கச் சொல்லறேன்!'' என்று ஒரு போடு போட்டுவிட்டு, பதிலை எதிர்பார்க்காமலே மார்க்கபந்து வெளியேறினார். நீலகண்டன் தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

புதன்கிழமையும் வந்தது. பி. ஏ. கிளாஸில் கசமுசவென்ற சத்தம். வழக்கமாகப் பத்து நிமிடங்கள் முன்னதாகவே நுழைந்து விடும் மார்க்கபந்துவை இன்னமும்காணோமே? கசமுச அதிகரித்து, கலாட்டாவாகமாறுமுன்—


நீலகண்டன் உள்ளே நுழைந்தான்—''குட் மார்னிங் பிரெண்ட்ஸ்!'' என்றபடி.

''ஏன் ஸார் மார்க்கபந்து வரலை?'', ''அவருக்கு உடம்பு சரியில்லையா?'' போன்ற பல குரல்கள் கிககிகவென்று எழுந்தன.

அதைக் காதில் போட்டுக் கொள்ளாமலே ''இன்றைக்கு ஷேக்ஸ்பியர் எடுக்கிறேன். டெம்பஸ்ட்தானே உங்களுக்கு? அதில் வரும் 'ஏரியல்' காரெக்டரைப் பற்றி ஒரு லெக்சர்!'' என்று சொல்லிவிட்டுப் பின்பக்கம் சென்றான். மறைவாக வைத்திருந்த டேப் ரிகார்டரைச் சரிப் படுத்தினான். உற்றுக் கேட்டுப் பார்த்தான். ஓகே!

அறைக்குள் மீண்டும் பிரவேசித்தான். ''மார்க்கபந்து வரா விட்டால் என்ன? அவர் குரலை நீங்கள் கேட்கப் போகிறீர்கள்!''

முக்கால் மணி நேரத்துக்குமேல் நேரம் போனதே தெரியவில்லை. அற்புதமாகப் பொழிந்தது லெக்சர். மெய்ம்மறந்து மாணவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.



மிலான் நகரைச் சேர்ந்த பணக்காரரான ஜீஸெப்பி பிட்டி என்பவருக்குக் கார்கள் என்றாலே பிடிக்கவில்லை. எனவே அவர் தாம் சாவதற்குச் சிறிது காலத்துக்கு முன்பு தமது சொத்துக்கள் அனைத்தையும் மிலான் நகரிலுள்ள குதிரை வண்டிக் காரர்களுக்கு எழுதி வைத்துவிட்டார். ஆனால் அந்த நகரில் மூன்றே மூன்று குதிரை வண்டிகள்தான் இருந்தன. அவர் இறந்த பின் பிட்டியின் பணம் முழுவதும் அந்தக் குதிரை வண்டிக்காரர்களின் கைக்கு வந்தது. வந்ததும் அவர்கள் செய்த முதல் காரியம் என்ன தெரியுமா? உடனே போய் ஒவ்வொருவரும் புதுப் புதுக் கார்களை வாங்கிக் கொண்டு வந்து விட்டனர். ஆதாரம்: நியூஸடைம்ஸ்

முடிந்தானவுடன் நேரே மஞ்சுளாவின் காதோடு சொன்னான் நீலகண்டன்: ''ஆரம்பம் வெற்றி, முடிவும் வெற்றியடையும் என்று நம்புகிறேன்!''

அடுத்த திங்கட் கிழமை மார்க்கபந்து வந்தார். கிளாஸ் எல்லாம் முடித்துவிட்டு, நேரே நீலகண்டனைப் பார்க்கச் சென்றார். ''வாட் ஈஸ் திஸ் நீலம்?'' என்றார் கோபமாக.

''உன்னை நான் லெக்சர்தானே பண்ணச் சொன்னேன். நீ என்னமோ கூத்தடித்திருக்கிறாயே! நான் இன்றைக்கு வகுப்பு எடுத்துக் கொண்டிருக்கிறேன், பாதிக் கிளாஸில் 'போர் போர்' என்ற சப்தம். போன புதன் கிழமை மாதிரி இல்லையாம்.''

''ஓ...அதுவா; நீங்கள் மூணு வருஷங்களுக்கு முன்னடி ஷேக்ஸ்பியரைப் பற்றி லெக்சர் கொடுத்தீர்களே, அதைத்தான் 'டேப்' பண்ணி வைத்தேன்! இதோ'' என்று சொல்லி அந்த டேப்பைப் போட்டுக் காட்டினான்.

மார்க்கபந்து உற்றுக் கேட்டார். அச்சாக அவர் குரல்தான். சட்சட்டென்று வில்லியம் பிளேக்கிலிருந்தும், மில்டனிலிருந்தும் வேறு யாரால் மேற்கோள் காட்டிப் பேச முடியும்?

''ம்'' மார்க்கபந்து யோசித்தார். ''இதே மாதிரி இப்போதும் லெக்சர் கொடுக்க வேண்டும் என்கிறார்களே? வயசாகவில்லையா எனக்கு!''

நீலகண்டன் முகத்தை அமைதியாக வைத்துக்கொண்டு சொன்னான்: ''நான் என்ன செய்வது? நீங்கள் என்னை ஒரு கிளாஸ் பார்க்கச் சொன்னீர்கள்; உங்களையே மாணவர்கள் கேட்கச் செய்துவிட்டேன்!''

''அதனால்தான் வந்தது வினை!'' என்றார் மார்க்கபந்து. சோக காவியமாகத் தொனித்தன அந்த வார்த்தைகள்.

இப்போதெல்லாம் நீலகண்டன் டியூட்டோரியல் காலேஜில் தலையிடுவதே இல்லை. அதே காம்பவுண்டில் 'நீலம் ரேடியோ இன்ஸ்டிடியூட்' நடத்தி வருகிறான். 'மார்க் ட்யூட்டோரியல் காலேஜி'ல் சேர்ந்து பெயிலானவர்களுக்கு மட்டும் அதில் முதல் இடமாம்!

காசில்லாதவர்கள் காதலிக்கலாமா?

ஜோதிர்லதா கிரிஜா

அட்டைப்படக் கதை

'கண்ணன் வரக் காணேனே' என்ற பாட்டு கணீரென்று வந்து அவன் செவிகளைத் தாக்கியது. அவன், பாதிக் கிணறு வரை வந்து விட்ட நீர் நிறைந்த வாளியை இழுக்கத் தோன்றாமல் அப்படியே மெய்ம்மறந்து நின்றான். பாட்டின் ஒலி மெல்ல மெல்ல வலுத்துக் கொண்டே வந்து அவனுக்குப் பின்னால் வெகு அருகில் பட்டென்று நின்றுவிட்டது. அவன் தன்னையும் அறியாமல் சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

அவனுக்குப் பின்புறம் சற்றுத் தொலைவில் நின்றிருந்த ஓர் இளம் பெண், அவன் பார்வையும் அவள் பார்வையும் ஒன்றோடொன்று வியப்புடன் கலந்ததும், ஏதோ தவறு செய்து விட்டு அதற்காக அஞ்சுவதைப் போன்ற உணர்ச்சி அலைகள் முகத்தில் எழுந்து விழ, இடுப்பில் இருந்த குடத்தோடு சடக்கென்று மறைந்து விட்டாள்.

தனக்குத் தானே இலேசாகச் சிரித்துக் கொண்டவாறே அவன் வாளியை இழுக்கும் முயற்சியில் ஈடுபட்டான். வாளியின் பளு மிகவும் குறைந்துவிட்டிருந்ததை உணர்ந்து அவன் கிணற்றினுள் எட்டிப் பார்த்த போது வாளியில் இருந்த சின்னஞ் சிறிய பொத்தலின் வழியே அவ்வளவு தண்ணீரும் ஒழுகிவிட்டிருந்தது.

''என்னடா காலையில் வாளித் தண்ணீரை ஒழுக விட்டாய்? இப்போது கையிலே இருக்கிற மோரை ஒழுக விடுகிறாய்? பாட்டென்றால் உனக்கென்ன அவ்வளவு....?'' மன்னி கண்ணனைக் கிண்டல் செய்தாள்.

''ஆமாம், மன்னி! பாட்டென்றால் எனக்கு உயிர்தான். சோறு வேண்டாம், தண்ணீர் வேண்டாம். இந்த மாதிரிப் பாடுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாலே, போதும்.''

மன்னி சிரித்தாள். ''பாட்டில் மட்டும் இல்லை. எல்லாவற்றிலுமே அவள் கெட்டிக்காரிதான். தற்காலப் பெண்களிடையே குறைந்து கொண்டு வரும் அடக்கம், நாணம் எல்லாம் அவளிடம் உண்டு. எவன் கொடுத்து வைத்திருக்கிறானோ? அவளுக்கு அம்மா இல்லை. அப்பா மட்டும்தான் இருக்கிறார். தையல் வேலை தெரியும் அவளுக்கு. அதில் வருகிற வருமானத்தில்தான் அவளும் அவள் அப்பாவும் வயிற்றைக் கழுவிக் கொள்கிறார்கள்'' என்றாள்.

''கமலியின் கல்யாணத்தை நடத்திவிட வேண்டும் என்று அப்பாவும் அம்மாவும் துடியாக இருக்கிறார்கள். எப்படி நடக்கப் போகிறதோ தெரியவில்லை. எனக்கும் வேலை கிடைத்தபாடில்லை'' என்றான் கண்ணன்.

''என்னவோ போ'' என்று நெட்டுயிர்த்தாள் மன்னி.

அன்று மாலை மன்னி கண்ணனை வீட்டுக்குக் காவல் வைத்து விட்டுக் கோயிலுக்குச் சென்றாள். கண்ணன் கூடத்தில் ஒரு நாற்காலியில் அமர்ந்து வார ஏடு ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தான்.

பக்கத்து வீட்டையும் அவர்கள் வீட்டையும் இணைத்துக் கொண்டிருந்த நடுக் கதவு படபட வென்று இடிக்கும் ஓசை கேட்டது. கண்ணன் எழுந்து சென்று கதவைத் திறந்தான். கதவுக்கு அப்பால் அந்தப் பெண் நின்று கொண்டிருந்தாள்.

''மாமி இல்லே?'' என்று அவள் கேட்ட போது அவள் குரலில் புலப்பட்ட இலேசான நடுக்கமும், கைகளைப் பிசைந்தபடி அவள் நின்ற நிலையும், எல்லாவற்றுக்கும் அந்த ஒளி வீசும் கண்களில் தென்பட்ட கலக்கமும் அவன் கவனத்துக்குத் தப்பவில்லை.

''மன்னி கோயிலுக்குப் போயிருக்கிறாள். என்ன வேண்டும்?''

''ஒன்றுமில்லை. அப்பாவுக்குத் திடீரென்று மயக்கம் போட்டுவிட்டது. கூப்பிடக் கூப்பிடப் பதிலே இல்லை.... எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. அதனால்.....''

கண்ணன் அடுத்த நிமிஷம் அண்டை வீட்டில் அவள் தந்தைக்கு முதலுதவி செய்து கொண்டிருந்தான்.

மறு நாள் மாலை. வெளியே உலாவப் போய்விட்டுத் திரும்பி வந்த கண்ணன் வழி பாட்டு அறையிலிருந்து கிளம்பி வந்த இன்னிசையைக் கேட்டதும் அப்படியே நின்றுவிட்டான்.

''எங்கள் கண்ணனுக்குப் பாட்டென்றால் உயிர்.......''

''யாரைச் சொல்கிறீர்கள்?''

''என் மைத்துனன்தான். ஊரிலிருந்து வந்திருக்கிறானே, அவன்.''

''ஓகோ. அவர் பெயர் அதுவா?''

''ஆமாம். ஏன்?''

''ஒன்றுமில்லை. சும்மாத்தான் கேட்டேன்....''

கூடத்திலிருந்த கண்ணனுக்குச் சிரிப்பு வந்தது. தன் பேர் தெரியாமல் 'கண்ணன் வரக் காணேனே' என்று முந்திய நாள் தான் பாடியதை எண்ணித்தான் அவள் வியந்து கேட்டிருக்கிறாள் என்பது அவனுக்கு விளங்கிற்று.

''கண்ணன் மட்டும் என் வயிற்றுப் பிள்ளையாக இருந்தால், ஒரு சல்லிக் காசுகூடச் செலவில்லாமல் உன்னை நான் மருமகளாக்கிக் கொண்டுவிடுவேன். அவனுக்கு அப்பா, அம்மா இருக்கிறார்களே. அவனுக்கும் ஒரு தங்கை இருக்கிறாள் கல்யாணத்துக்கு.

போதிய பணம் இல்லாததால்தான் அந்தப் பெண்ணின் கல்யாணமும் தட்டிக்கொண்டே போகிறது.......''

''நான் கல்யாணமே பண்ணிக் கொள்ளப் போகிறதில்லே, மாமி!''

கண்ணனின் மனக் கதவு அகலத் திறந்து கொண்டது. அங்கே ருக்மிணி நுழைந்து கொண்டாள். கண்ணனின் காதுகளில், 'நான் கல்யாணமே செய்து கொள்ளப் போகிறதில்லே மாமி' என்ற சொற்கள் திரும்பத் திரும்ப ஒலித்தன. அவன் மனம் வேதனைப்பட்டது. நினைக்க நினைக்க அவனுக்கு விந்தையாகவும் இருந்தது. இந்த ருக்மிணி முற்றிலும் அறிமுகமாகாத ஒருத்தியாய் அவனுக்குத் தோன்றவில்லே. ஒரு காலத்தில் தன் உள்ளத்தோடு இரண்டறக் கலந்து வாழ்ந்து இடையே பிரிந்து சென்ற ஒருத்தியை மறுபடியும் சந்திக்க நேரும்போது உண்மைக் காதலன் ஒருவனுக்கு ஏற்படும் மகிழ்ச்சிகலந்த ஏக்கத்துள் அவன் மூழ்கினான்.

பலன்........?

'அன்புள்ள ருக்மிணி

எல்லாவற்றுக்கும் முன்னால் நான் இந்தக் கடிதம் எழுதுவது தவறு என்பது உங்கள் கருத்தானால் அதற்காக நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடுகிறேன். எழுத உட்கார்ந்துவிட்டேனே தவிர, என்ன எழுதுவது, எப்படி எழுதுவது என்று ஒன்றும் புரியவில்லே. என் மனத்தில் உங்களிடம் ஏற்பட்டுள்ள அன்பை உள்ளபடி எடுத்துச் சொல்ல எனக்குத் திறமை இல்லே. சுற்றிவளைத்து மூக்கைத் தொடவும் நான் விரும்பவில்லே.

நான் உங்களை மணம் செய்து கொள்ள விரும்புகிறேன். உங்களைக் காணுந்தோறும், ஏன்? உங்களை நினைக்குந்தோறும் கூடத்தான் – நீண்ட நாட்கள் என்னுடன் இணைந்து வாழ்ந்து பிரிந்த ஒருத்தியை எதிர்பாராதபடி திரும்பவும் சந்திக்கும் போது ஒருவனுக்கு ஏற்படக் கூடிய மட்டிலா மகிழ்ச்சி எனக்கு ஏற்படுகிறது. என்ன சிந்தித்தும் காரணம் தெரியவில்லே. இதற்குப் பெயரோ காதலோ, கத்திரிக்காயோ, அதெல்லாம் எனக்குத் தெரியாது. உங்கள் கருத்துத் தெரிந்தபின் ஆவன செய்வேன். ஆனால் எனக்கு வேலே கிடைக்கும் வரையிலும், என் தங்கையின் திருமணம் முடியும் வரையிலும் நீங்கள் காத்திருக்க வேண்டியதிருக்கும்.

உங்கள் பதிலே
எதிர்பார்க்கும்,
கண்ணன்'

கடிதம் சரியாக அமைந்து விட்டதாகத் தோன்றிற்று.

மறுநாள் மாலே. கண்ணன் குட்டி போட்ட பூனேயைப் போல் கொல்லேப்புறம்



குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான்.

பற்கள் தெரிய முறுவலித்தவாறே ஒரு கடிதத்தைத் தன் இடையினின்று எடுத்து அவன் புறமாக வீசி மறைந்தாள் ருக்மிணி.

'அன்புள்ளம் கொண்டவருக்கு,

நீங்களே என்ன எழுதுவதென்று புரியாமல் திகைத்ததாக எழுதியிருக்கிறீர்கள். அப்படி இருக்க, பேதைப் பெண்ணாகிய நான் எழுதுவதற்கு என்ன இருக்கிறது? உங்களுக்காக என் உள்ளம் உருகிக் கொண்டுதான் இருக்கிறது. எனினும் எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விடலாமா என்று நினைத்து நான் என் மனக் குரங்கை அடக்க முயன்று கொண்டிருந்த நேரத்தில், என் மனக் குரங்கு உங்கள் மனக் குரங்கைக் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக் கவர்ந்துவிட்டதாகத் தாங்கள் எழுதி என்னை வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்திவிட்டீர்கள். உங்களுக்காக நான் எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் காத்திருக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் நான் ஓர் ஏழைப் பெண் என்பதை மட்டும் நினைவில் இருத்திக் கொள்ளவும்.'

கண்ணன் வாய்விட்டுச் சிரித்துக் கொண்டான். இன்னாரிடமிருந்து இன்னாருக்கு எழுதப்பட்டது என்பதற்கு ஒரு கோடிகூடக் காட்டாமல் அது எழுதப்பட்டிருந்ததையும், கடிதத்தின் முடிவில் ருக்மிணி தன் பெயரை எழுதவில்லை என்பதையும் கவனிக்க அவன் தவறவில்லை. 'கெட்டிக்காரி' என்று அவன் தன் மனத்துள் அவளைப் புகழ்ந்து கொண்டான். கடிதத்தைப் பத்திரமாகத் தன் பெட்டியினுள் வைத்துப் பூட்டினான்.

மறு நாள் மாலை. மன்னி கடைத்தெருவுக்குப் போயிருந்தான். ருக்மிணியின் தகப்பனும் எங்கோ வெளியே போவதைக் கவனித்த கண்ணன் வாசற்கதவைச் சாத்தித் தாளிட்டுவிட்டு உள்ளே வந்தான். 'நடுக் கதவைத் தட்டி ருக்மிணியைக் கூப்பிட்டுக் கொஞ்சம் பேசலாமா?' என்று அவன் எண்ணிய அதே நேரத்தில் நடுக் கதவு தட்டப்பட்டது. கண்ணன் ஆவலுடன் ஓடிப் போய்க் கதவைத் திறந்தான். கதவுக்கு அப்பால் குனிந்த தலையுடன் ருக்மிணி நின்று கொண்டிருந்தாள்.

கண்ணனின் கண்களை நேருக்கு நேராகப் பாராமல், ''உங்களோடு கொஞ்சம் பேச வேண்டுமே?'' என்றாள் தயக்கத்துடன்.

''எனக்கும் அதே எண்ணம்தான்.''

கண்ணன் அவளை வியப்போடு பார்த்தான்.

பேச்சை எப்படித் தொடருவது என்று இருவருக்குமே புரியவில்லை. சற்று நேரத்துக்குப் பிறகு ருக்மிணிதான் பேசினாள். '' நான் எழுதியிருந்த பதிலைப் பார்த்தீர்களா ?''

''பார்த்தீர்களாவது ? மனப் பாடமே பண்ணியிருக்கிறேன். வேண்டுமானால் ஒப்பிக்கட்டுமா ?''

ருக்மிணி வாய் திறந்து சிரித்தாள். கண்ணனும் சிரித்தான்.

''என் தங்கைக்குக் கல்யாணமாகி, எனக்கும் ஒரு வேலை கிடைத்து விட்டால்......''

''நான்தான் சொல்லி விட்டேனே — எத்தனை யுகங்கள் வேண்டுமானாலும் காத்திருப்பேன் என்று.''

அவள் தலை நிமிர்ந்தபோது கண்கள் இலேசாய்க் கலங்கியிருந்ததைக் கண்ட கண்ணன் துணுக்குற்றான். ''அழுகிறீர்களா, என்ன?''

ருக்மிணி கண்களைத் துடைத்துக் கொண்டு சிரித்தாள். ''உங்கள் மாசற்ற அன்பை எண்ணிக் கண் கலங்கினேன்..... அவ்வளவுதான்..... என் தோழி ஒருத்தி இருந்தாள். இப்படித்தான் ஒருவர் அவளுக்கு உறுதி கூறிவிட்டுப் போனார். ஆனால் அவருடைய பெற்றோர்கள் சம்மதியாததால் அந்தக் கல்யாணம் நடைபெறவில்லை. அவர் வேறு ஒருத்தியை மணந்து கொண்டார். என் தோழி மனமுடைந்து போனாள். மனசுக்குள்ளேயே மறுகி மறுகி ஒரு நாள் படுக்கையில் விழுந்தாள். டாக்டர்களுக்கெல்லாம் புரிபடாத நோயில் பல நாட்கள் வாடிவிட்டு ஒரு நாள் இறந்தும் போனாள்.......''

கண்ணன் துடித்துப் போனான். ''அதையெல்லாம் இப்போது எதற்காக நினைக்கிறீர்கள்? எப்பேர்ப்பட்ட எதிர்ப்பு ஏற்பட்டாலும் நான் சமாளிப்பேன். கவலைப்பட வேண்டாம். மற்ற வாலிபர்களின் பட்டியலில் என்னையும் சேர்த்து விடாதீர்கள்.....''

''....சரி..... நான் வரட்டுமா?''

''வாருங்கள்.''

''கடிதத்தில் ஒருமையில் அழைத்தாலே போதுமானது. மரியாதை'கள்'வேண்டாம்.''

கண்ணன் சிரித்தபடி நின்றான். கதவு சாத்திக் கொண்டது.

கண்ணன் மதுரைக்கு வந்து சேர்ந்தபிறகு விளையாட்டுப் போல் ஆறு மாதங்கள் கழிந்து விட்டன. கண்ணனுக்குத் தபால் இலாகாவில் வேலை கிடைத்தது. அவன் மாதந்தவறாமல் ருக்மிணிக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தான். அவளும் தவறாமல் பதில் எழுதிக் கொண்டிருந்தாள்.....

அன்று வெள்ளிக்கிழமை. கண்ணனின் தங்கையைப் பெண் பார்க்க வந்த பையனுக்கும் அவனுடைய பெற்றோர்களுக்கும் பெண்ணை மிகவும் பிடித்துப் போய்விட்டது. ஆனால் அவர்கள் கேட்ட வரதட்சிணைதான் கண்ணன் குடும்பத்தாரின் நிலைக்கு ஒவ்வாததாயிருந்தது. கண்ணனின் தந்தை ராகவன் தம்மிடம் அந்த அளவுக்குப் பசை இல்லை என்பதை வெளிப்படையாகவே அவர்களிடம் தெரிவித்துவிட்டார்.

''எங்களுக்குக் காசு பணம் பெரிசு இல்லைதான். ஆனாலும் என்ன பண்ணுவது? எங்களுக்கும் ஒரு பெண் இருக்கிறாளே கல்யாணத்துக்கு? அவளை யார் காசில்லாமல் கல்யாணம் பண்ணிக் கொள்வார்கள்? நீங்களே சொல்லுங்கள்'' என்றார் பையனின் தகப்பனார்.

பிள்ளையைப் பெற்றவளின் முகம் திடீரென்று மலர்ந்தது. அவள் தன் கணவரை ஓர் ஓரமாக அழைத்துக் கொண்டு போய்க் கொஞ்ச நேரம் ஏதோ காதைக் கடித்தாள். அதன் பிறகுதான் அவர்கள் இருவருமாகச் சேர்ந்து கொண்டு அந்த வெடிகுண்டைக் கண்ணனின் மேல் தூக்கிப் போட்டார்கள்.

'' ஒன்று வேண்டுமானால் செய்யலாம். எங்கள் பெண்ணும் கண்ணுக்கு அழகாய்த்தான் இருப்பாள். காசு வாங்காமல் நீங்கள் உங்கள் பிள்ளைக்கு அவளைப் பண்ணிக் கொள்ளுங்கள். நாங்களும் காசு வாங்காமல் எங்கள்


பார்லே க்ளுகோ–
போஷாக்கு நிரம்பிய
அதிக ருசியுள்ள
பிஸ்கெட்
எப்பொழுதும்
இவை அடங்கியது–
வைட்டமின்கள் ஏ-டி-பி$_1$-பி$_2$-
கால்ஷியம்-ப்ரோடீன், பால்,
கோதுமை, சர்க்கரை,
க்ளுகோஸ்
PARLE
BISCUITS
Gluco
பார்லே க்ளுகோ பிஸ்கெட்
புசித்து வளர்வதே பேரானந்தம்!
இந்தியாவின் மிக அதிகமாக விற்பனையாகும் பிஸ்கெட்டுகள் பார்லே க்ளுகோ

இன்னுமொரு குழந்தையைப் பெறுவதற்குமுன் சற்று

யோசியுங்கள்



இக்குழந்தையை நன்றாக படிக்க வைக்க வேண்டாமா? உங்கள் விருப்பப்படி, குழந்தைக்கு வசதிகள் அனைத்தும் அளிக்க வேண்டாமா? இன்னொரு குழந்தையை உடனே பெற்றால், இதெல்லாம் முடியுமா? சிரமம் தான். அடுத்த குழந்தை உடனே வேண்டாம் என்று நீங்கள் கருதுவது இயற்கைதானே.

நீங்கள் மட்டுமல்ல; உலகெங்கிலும் தம்பதிகள் இவ்விதம்தான் கருதுகிறார்கள். வளமுடன் வளர்க்க வசதிகள் பெருகும் வரை, அவர்கள் இன்னொரு குழந்தையைப் பெறுவதில்லை. நீங்களும் 'நிரோத்' உபயோகித்து குழந்தை பெறுவதைத் தள்ளிப்போடலாம். அனைவரும் விரும்பி ஏற்கும் ஏப்பர் கருத்தடைச் சாதனம் நிரோத்; இது ஆண்களுக்கானது. தலைமுறை தலைமுறையாக உபயோகத்தில் இருந்துவரும் சிறந்த, எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனம் நிரோத். நீங்களும் நிரோத் உபயோகியுங்கள்.

நிரோத் எங்கும் கிடைக்கிறது. அரசாங்க ஆதரவு விலை 15 பைசாவுக்கு 3




இன்னொரு குழந்தையை வளர்க்க வசதி பெறும் வரை
உபயோகியுங்கள்

நிரோத்

லட்சக்கணக்கான பேர் விரும்பி ஏற்கும் எளிய, பாதுகாப்பான
கருத்தடைச் சாதனம் நிரோத்.

davp 71/460

பலசரக்குக் கடைகள், மருந்தகங்கள், வெற்றிலைபாக்குக்கடைகள் இங்கெல்லாம் நிரோத் விற்பனையாகிறது



புகைப்படங்களில் பழமொழிகள்

எருதும் வண்டியும் ஒத்தால் மேடு பள்ளம் ஏது?

மேற்படி பழமொழியை விளக்குவது போல் புகைப்படத்தை எடுத்து அனுப்புங்கள். சிறந்த புகைப்படத்துக்குப் பரிசு: ரூபாய் 50/- முடிவு தேதி: 18-6-72.

புகைப்படக் கலை நுணுக்கங்களில் கருத்துச் செலுத்தப்பட வேண்டும். படம் தபால் கார்டு அளவினதாக இருப்பது நலம். பரிசு பெறாவிடினும் பிரசுரமாகும் இதர படங்களுக்கு வழக்கமான சன்மானம் உண்டு. உறையின் மேல், 'புகைப்படப் போட்டி' என்று குறிப்பிடவும். பிரசுரமாகாத புகைப்படத்தைத் திரும்பப் பெற விரும்புவோர் போதிய தபால் தலைகளுடன் கூடிய விலாசமிட்ட உறையை உடன் அனுப்ப வேண்டும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. கடிதப்போக்குவரத்து கிடையாது.

பிள்ளைக்கு உங்கள் பெண்ணைப் பண்ணிக் கொள்கிறோம். இரண்டு கல்யாணங்களும் ஒரே பந்தலில் நடக்கட்டும். செலவும் ஆளுக்குப் பாதி. இரண்டு பேருமே சல்லிக் காசுகூட வாங்கிக் கொள்ள வேண்டாம். என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று பிள்ளையின் தகப்பனாரும் தாயாரும் கேட்டார்கள்.

கண்ணனின் தகப்பனார் ராகவன் சிக்கல் இவ்வளவு எளிதில் தீரும் என்று எண்ணிக் கூடப் பார்க்கவில்லை. அவருக்கும் பெரு மகிழ்ச்சி.

''எங்கள் பெண்ணைப் பார்க்கும் எந்தப் பிள்ளையாண்டானும் அவளைப் பிடிக்கவில்லை என்று சொல்லமாட்டான். அவள் அவ்வளவு அழகு. ஆனாலும் எங்கள் பிள்ளைக்கு வரும் பணத்தைக் கொண்டுதான் அவளுக்கு வரதட்சிணை தர முடியும் என்ற நிலையில்தான் இதுவரை அவளைப் பெண் பார்க்க யாரையும் நாங்கள் ஏற்பாடு செய்யவில்லை'' என்று அந்த அம்மாள் பன்னிப் பன்னிச் சொன்னாள்.

கண்ணனின் முகத்தில் கணத்துக்குக் கணம் தோன்றி மறைந்த மாறுதல்களை யாருமே கவனித்ததாய்த் தெரியவில்லை. அவனுக்கென்று ஓர் உள்ளமும், அதில் ஊற்றெடுக்கும் எண்ணங்களும் இருக்கக்கூடும் என்ற நினைவே அவன் வீட்டில் எவருக்கும் இருந்ததாய்த் தோன்றவில்லை. கண்ணனின் திருமணமும் கமலியின் திருமணமும் முடிவு செய்யப்பட்டு விட்டதாகவே எண்ணி எல்லாரும் கும்மாளம் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

கண்ணனின் மனம் தனியாய்த் தவித்தது. உள்ளம் சோர்ந்து போயிற்று. அவன் வீட்டில் இருக்கப் பிடிக்காமல் எழுந்து வெளியே சென்றான். கடமைக்கும் காதலுக்குமிடையே அவனுடைய உள்ளத்தில் போராட்டம் ஏற்பட்டது. தான் மட்டும் கமலியைப் பார்க்க வந்தவனின் தங்கையை மணம் செய்து கொள்ளுவதற்கு இணங்கினால் கமலியின் திருமணமும் எளிதில் முடிந்துவிடும் என்பதை நினைத்துப் பார்த்தபோது அவனை வேதனை பிடுங்கித் தின்றது. மறுத்தாலோ.....?

கமலி அவனைப் பற்றி என்ன நினைப்பாள்? தன்னலக்காரன் என்று நினைக்கமாட்டாளா? கடமைக்காகக் காதலை விட்டுக் கொடுப்பது தான் சிறப்பு — அதுதான் மனிதத் தன்மையின் இலக்கணம் — என்பது அவனுக்குத் தெரிந்துதான் இருந்தது. ஆனால் ருக்மிணியைக் கைவிடுவதா? அந்த எண்ணமே அவனைத் தலை குனிய வைத்தது. அவளைக் கைவிட்டு விட்டு வேறொருத்தியைக் கைப்பிடிப்பதைப் பற்றி அவனால் கற்பனைகூடச் செய்து பார்க்க இயலவில்லை. ருக்மிணிக்குக் கொடுத்த வாக்குறுதி என்னாவது? அவள் அவனைப் பற்றி என்ன நினைப்பாள்? 'எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் சமாளிப்பேன்' என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறானே. 'மற்ற வாலிபர்களின் பட்டியலில் என்னையும் சேர்த்துவிடாதீர்கள்' என்று வேறு பெருமை பேசினானே. அத்தனையும் நீர் மேல் எழுத்துப் போல் நிற்காமல் போவதா? தங்கைக்கு ஆற்றவேண்டிய கடமைக்காகத் தனது காதலை அவன் துறப்பது சரி என்று கொண்டாலும், ருக்மிணி எதற்காகத் தனது காதலைத் துறக்க வேண்டும்? இருவர் தொடர்பு பெற்ற காதல் ஒருத்தியின் வாழ்வுக்காக அழிந்து மாய்வதா? கூடாது. 'என்னுடைய தங்கைக்காக நீ உன் காதலைத் தியாகம் செய்' என்று ருக்மிணியிடம் கேட்க அவனுக்கு ஏது உரிமை?

என்ன ஆனாலும் சரி. தன்னைத் தன்னலக்காரன் என்று யார் நினைத்தாலும் சரி. உடன் பிறந்தவளின் நலனுக்குக் குறுக்கே நிற்பவன் என்று எவர் தூற்றினாலும் சரி. இந்தக் கல்யாணம் நடக்கப் போவதில்லை. இரவும் பகலும் — இருபத்து நான்கு மணி நேரமும் — அவனது உள்ளக் கோயிலில் வீற்றிருக்கும் ருக்மிணியை அகற்றிவிட்டு அங்கே வேறொருத்திக்கு — அவள் ரம்பையாக இருந்தாலும் சரிதான் — இடம் அளிக்க முடியாது. இந்த இடம் இல்லாவிட்டால், இன்னும் கொஞ்ச நாட்களுக்குப் பிறகேனும் கமலிக்கு எப்படியாவது வேறு இடம் கிடைத்துவிடும். ஆனால் ருக்மிணி அப்படி அல்லவே. அவளது நிலை

கமலியின் நிலையைக் காட்டிலும் இரக்கத்துக் குரியது. அவளை விட்டால் — பாவம் — அவ ளுக்கு வேறு யார் இருக்கிறார்கள்?

கண்ணன் தெளிந்த மனத்தோடு வீட்டுக் குத் திரும்பி வந்தான். அவன் தன் தாயிடம் தனது எண்ணத்தைப் பற்றிச் சொன்னபோது அந்த அம்மாள் திடுக்கிட்டாள். திகைத்துப் போனாள். அவளுக்கு என்ன சொல்லுவது என்றே தெரியவில்லை. ''அப்படியா ? அப்பா விடம் சொல்லிவிட்டாயா ?'' என்று மட்டும் கேட்டாள். அவளது குரலின் இறக்கத்தி லிருந்து அவளது ஏமாற்றத்தின் தன்மையை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

அவன், ''இன்னும் இல்லை. இனிமேல் தான் சொல்ல வேண்டும்'' என்று மெல்லிய குரலில் பதில் சொன்னான். அவனது தலை தாழ்ந்திருந்தது. அவன் தாயார் சில விநாடி நேர மௌனத்துக்குப் பிறகு, ''எல்லாம் மனி தர்கள் போடுகிற கணக்குப்படியே நடந்து விடுமா என்ன?'' என்று இலேசாகப் பெரு மூச்செறிந்தவாறு தன் கணவரிடம் போய்ச் சேதியைச் சொன்னாள்.

தாயின் அளவுக்குத் தகப்பனார் அதிர்ந்த தாகத் தோன்றவில்லை.

''அப்படியானால் ஒன்று செய்யலாமே ? கண்ணனின் கல்யாணத்தை முதலில் நடத்தி விடுவோம். அவன் சொல்லுகிற அந்தப் பெண் ணையே அவன் பண்ணிக் கொள்ளட்டும். குழந் தைகளின் மனசை உடைக்கக் கூடாது.......''

அம்மாவின் சொற்களில் புலப்பட்ட பரிந் துணர்வும், அறிவும் கண்ணனைத் திகைப்பி லும் திளைப்பிலும் ஆழ்த்தின. அம்மா தொடர்ந்தாள்.

'' கண்ணன் அந்தப் பெண்ணையே பண் ணிக் கொள்ளட்டும். அவர்கள் கொடுக்கிற தாக பணத்தை வாங்கிக் கமலியின் கல் யாணத்தை நடத்திவிட்டால் போகிறது.''

தலையின் மேல் யாரோ தணலைக் கொட்டி னாற்போல் இருந்தது கண்ணனுக்கு.

ராகவன், ''கண்ணா!'' என்று குரல் கொடுத்தார். கண்ணன் ஒரு சில விநாடிகள் தாமதித்ததன் பின்னர், ''என்ன அப்பா?'' என்று கேட்டுக் கொண்டு அவருக்கு முன்னால் போய் நின்றான்.

ராகவன் மெல்ல அவன் முதுகில் தட்டி, ''இவை எல்லாம் இளைஞர்களின் வாழ்க்கை யில் வழக்கமாகத் தோன்றும் சிக்கல்கள்தான். இதற்கெல்லாம் மனம் தளரலாமா? உன் விருப்பத்துக்கு நாங்கள் யாரும் குறுக்கே நிற்கவில்லை. ஆனால் உன் கல்யாணம்தான் முதலில் நடக்க வேண்டும். அந்தப் பெண் யார், என்ன, எல்லா விவரங்களையும் சொல்லு. நான் ஏற்பாடு செய்கிறேன். கமலி யின் கல்யாணம் நடக்க இன்னும் இரண் டாயிரம் இருந்தால் போதும். உன் கல்யாணத் தின் வாயிலாக இரண்டாயிரம் ரூபாய் கிடைத்தாலே போதுமானது'' என்றார்.

கண்ணன் எச்சிலைக் கூட்டி விழுங்கிக் குரலைச் சரி செய்து கொண்டான்.

''அவர்கள் ரொம்ப ஏழைகள் அப்பா. அவர்களிடம் இரண்டாயிரம் தம்பிடிகூடக் கிடையாது. ஆனால் அந்தப் பெண் மிகவும் நல்லவள். அண்ணாவின் வீட்டுக்கு அடுத்த வீட்டில்தான் அவர்கள் இருக்கிறார்கள். அவளுக்கு அம்மா இல்லை. அப்பா மட்டும் இருக்கிறார். நான் வாக்குக் கொடுத்துவிட் டேன், அப்பா. என்னால் அந்தப் பெண்ணைத் தவிர, வேறு யாரையும்.....'' சொல்ல வந்ததைச் சொல்லி முடிக்காமலே அவ்விடம் விட்டு அகன்றான்.

அன்றிரவே அவன் ருக்மிணிக்கு விவர மாகக் கடிதம் எழுதி வைத்தான்.

மூன்றாவது நாள். கண்ணனுக்கு ருக் மிணியிடமிருந்து பதில் வந்தது.

'அன்புள்ள கண்ணன் அவர்களுக்கு,

உங்கள் அன்பார்ந்த நீண்ட கடிதம் கிடைத்தது. நீங்கள் என் மேல் வைத் திருக்கிற அன்பைக் கண்டு என் உள்ளம் மகிழ்ச்சியால் வெடித்தேவிடும் போல் ஆகி விட்டது. என் உள்ளத்தில் பொங்குகிற நன் றியை எப்படிஎடுத்துச்சொல்லுவது என்றே புரியவில்லை. நீங்கள் எனக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றிவிட்டீர்கள்.

உங்களது கடிதத்தின் வாயிலாக வெளிப் பட்ட உங்கள் தூய்மையான அன்பைக் கண்டு என் உள்ளம் சிலிர்ப்பதென்னவோ உண்மைதான். நான் நேசிக்கிறவர் நேர்மையும் உண்மையும் மிக்கவர் என்ற நினைவு என்னைப் பரவசத்தில் மூழ்குவிப்ப தும் உண்மைதான். ஆனால் இந்த உங்களது அமோகமான அன்பும் ஆதரவும் இன் னொரு பெண்ணின் — அதிலும் உங்கள் தங்கையின் — வாழ்வையே பாதிக்கப் போகின்றன என்பதை எண்ணிப் பார்க் கும்போது, நமது இந்தக் காதல் நிறை வேறத்தான் வேண்டுமா என்று என் உள் ளத்தில் ஒரு கேள்வி எழுகிறது. இன்னொரு பெண்ணின் வாழ்வு வளம் பெறுவதற்குக் குறுக்கே நிற்பதனால்தான் எனது காதல் வெற்றி பெறும் என்றிருந்தால், அப்படிப் பட்ட வெற்றி வேண்டியதில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.

என்னைப் போன்ற ஓர் ஏழைப் பெண் ணின் வாழ்வுக்கு நானே குறுக்கே நிற்பதை என்னால் ஏற்றுக் கொள்ளவே முடியாது. கடமையை விடவும் பெரிது இந்த உலகத் தில் வேறு எதுவுமே கிடையாது. அதைச் செய்து முடிக்கையில் மனிதனுக்கு ஏற் படுகிற மன நிறைவுக்கும், நிம்மதிக்கும் ஈடில்லை, இணையில்லை. அதிலும் அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்காக உயிரி னும் இனிய காதலைத் துறப்பதற்கு ஈடான துறப்பு வேறில்லை. அந்தத் தியாகத்தைச் செய்து நீங்கள் பெருமை பெற வேண்டும் என்பதே இந்த ருக்மிணியின் விருப்பம்.

நீங்கள் செய்யத் தயாராக இல்லாவிட் டாலும் பரவாயில்லை. நான் செய்வது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்.

அழகோ அந்தஸ்தோ இல்லாத இந்த ஏழைப் பெண்ணை நேசிக்க முற்பட்ட உங்களது மிக உயர்ந்த உள்ளம் ஒரு காலத்தில் எனக்குச் சொந்தமாக இருந் தது என்ற நினைப்பிலேயே நான் வாழ்ந்து விடுவேன்.

உங்கள் எதிர்காலம் சிறப்பாக இருக்க என் வாழ்த்துக்கள். ருக்மிணி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31.
Managing Editor: T. Sadasivam



GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD., BIRLAGRAM, NAGDA (M.P.)

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)